சுதேசமித்திரன்



தாய்மார்கள் அறிவர்

:: உட்வார்ட்ஸ் க்ரைப் வாட்டரின் ::
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

WOODWARD'S
GRIPE WATER
keeps baby well

I-WW108-111 W. WOODWARD LTD LONDON. ENGLAND

வருகிறது!

பக்ஷிராஜாவின்

பவளக்கொடி

மஹாலிங்கம்... ராஜகுமாரி... வரதன்... ஸரோஜினி
கிருஷ்ணன்... மதுரம்... லலிதா... பத்மினி நடித்தது..

Directed by **SRIRAMULU NAIDU**
NARAYANAN Co *Release..*

சுதேசமித்திரன்

பொருளடக்கம்

		பக்கம்
காரைக்கால் பிச்சைக்காரி	'சேதுராமன்'	5
சொப்பன வாழ்க்கை (தொடர் கதை)	'ஆர்வி'	11
ரமாவைக் கேளுங்கள்!	'குங்குமம்'	18
கலாமண்டபம்	'சாண்டில்யன்'	23
பலே பல்	'சுகி'	28
பெரிய புராணம்	பி ஸ்ரீ.	31
தேர்த்தட்டு வார்த்தை	'வாரன்'	33
காசி மூட்டை	'பொன்னி'	35
நாமொன்று நினைக்க...	ய. மஹாலிங்க சாஸ்திரிகள்	40
ஆரோக்கிய வாழ்க்கை	துரைஸ்வாமி ஐயங்கார்	44
நிழல் பெரிதா பணம் பெரிதா? (சிறுவர் கதை)	'லட்சுமி'	46

"மித்திரன்" வாரப்பதிப்பில் தோன்றும், பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் முற்றிலும் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வாழிய செந்தமிழ்!

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

வாழ்க நற்றமிழர்!

Vol. XX] ஸர்வதாரி௵ பங்குனிமீ 7௨ ★ 1949-௵ மார்ச்மீ 20௨ No. 7

விவசாயிகளுக்கு உதவி

நில அடமான பாங்கிகளால் விவசாயிகளுக்கு ஓரளவு உதவி கிடைத்துவருவது உண்மையே ஆனால் அவ்வுதவி எவ்வளவு சொற்பமானது என்பதை அப்பாங்கிகளின் மகாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்திய ஸ்ரீ ரத்தினசபாபதி முதலியார் ஒப்புக்கொண்டார். விவசாயிகளின் தேவைக்கும், இப்பாங்கிகள் அளித்து வந்திருக்கும் நிவாரணத்துக்கும் வெகுதூரம் குறைந்த பட்ச மதிப்புப்படி விவசாயிகளின் தற்போதைய கடன் இரு நூறு கோடி ரூபாய்க்கு அதிகம் ஆனால் நில அடமான பாங்கிகள் சென்ற பத்தொன்பதுவருஷகாலமாக அவர்களுக்குக்கடனாகக் கொடுத்துள்ள தொகையோ ஆறுகோடி ரூபாயே.

இந்த சொற்பத தொகையும் பெரும்பாலும் பழைய கடன்களைத திருப்பிக்கொடுக்கவே உபயோகப்பட்டிருக்கிறதென்பது விஷயமறிந்த யாருக்கும் ஆச்சரியமளிக்காது. சென்ற சில வருஷங்களாக தான்ய விலை மிகவும் தூக்கலாயிருந்து வந்திருப்பது வாஸ்தவம் எனினும் இதைக்கொண்டு மிச்சம் பிடித்து புதிய நிலங்கள் வாங்கியுள்ள விவசாயிகள் சிலரே பெருவாரியான விவசாயிகள் சராசரியாக சொற்ப நிலமுடையவர்களே. அவர்கள் விளைக்கும் தான்யத்துக்கு அதிக விலை கிடைக்கிறதாயினும், அதைவிட அதிகமாக அவர்களுடைய காலட்சேபச் செலவு உயர்ந்துவிட்டது உண்மையில் இந்தச் செலவு அதிகரிப்பைச் சமாளிக்க அவர்களுக்கு வேறு வழியில்லாததே சமீப காலத்தில் நில அடமான பாங்கிகளிடம் கடன் மனுக்கள் வர வர அதிகரித்ததற்கு காரணம்.

இத்தகைய பாங்கிகள் மூலம் கிடைக்கும் கடன் வசதி உள்ள நிலங்களில் விளைவைப் பெருக்கவும், தரிசாக உள்ள நிலங்களைப் பண்படுத்தவும் விவசாயிகளுக்கு ஊக்கமளிப்பதே பொருத்தமாகும் ஆனால் அப்பாங்கிகள் தற்போது அளிக்கும் வசதியும் சொற்பம்; அதுவும் விவசாய வளம் பெருகப் பயன்படவில்லை முக்கியமாக நல்ல பாசன வசதியுள்ள நிலங்கள்மீதே அப்பாங்கிகள் தற்போது கடன் கொடுக்கின்றன. காரணம், கொடுத்த பணம் பத்திரமாகத் திரும்பவேண்டுமே யென்ற கவலைதான், ஆனால் விவசாயம் செழிப்புற்று, உற்பத்தி பெருகச் செய்வதில் பொறுப்புள்ளவர்கள் இத்தகைய மனோபாவம் கொள்வதற்கில்லை. விவசாயிகளுக்குத் தாராளமாகக் கடன் வசதி அளித்து அவர்கள் தொழில் மேன்மேலும் வளமுறுவதற்கான சௌகரியங்களைச் செய்து கொடுப்பது அவசியமாகும். இத்துறையில் தேவையான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதில் சர்க்கார் எவ்வளவு துணிவு காட்டினாலும் அது தகும் ஏனெனில் விவசாயமே இந்நாட்டினருக்கு ஜீவாதாரமானது; உணவுக்காக மட்டுமல்ல. மற்ற பல தொழில்களின் வளர்ச்சிக்கும் விவசாயத்தையே இந்நாட்டினர் பொறுத்திருக்கின்றனர் எனினும் இவ்வளவு காலமும் இம்மூலாதாரத் தொழில் மிக்க கொடிய முறையில் அலட்சியம் செய்யப்பட்டு வந்திருக்கிறது. இதன் பலனாக இத்தொழிலில் சிறிதும் கவர்ச்சியில்லாமல் போய்விட்டது.

நில அடமான பாங்கிகள் மகாநாட்டில் பேசிய பிரதம மந்திரி வற்புறுத்தியதுபோல் அத்தொழிலை மறுபடி 'லாபகரமானதாகச் செய்யவேண்டும். இதில் லாபமுண்டு என்று நிச்சயமேற்பட்டால், உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள் என்று யாரும் யாரையும் கெஞ்சத தேவையில்லை ஆனால் இத்தொழிலை லாபகரமாக்கும் நிலைக்குக் கொண்டு வருவது பெரிதும் சர்க்கார் பொறுப்பே. பூர்வாங்கமாக விவசாயிகளுக்கு வேண்டிய கடன் வசதியை அளித்து அவர்களது உழைப்புக்குத் தக்க ஊதியம் அவர்களுக்கு நிச்சயமாகக் கிடைக்க அதிகாரிகள் வழி செய்யவேண்டும். தற்போதைய நிலையில் சாதாரண வர்த்தக பாங்கிகள் விவசாயிகளுக்கு வேண்டிய அளவு உதவ முன்வரக்கூடுமென்று தோன்றவில்லை அதற்கான பொறுப்பை ஆரம்பக் கட்டத்தில் துணிவுடன் ஏற்கக்கூடியவர்கள் சர்க்கார்தான். விவசாயத் தொழில் லாபகரமாகிவிட்டால், பிறகு அதற்கு அவர்களுடைய தூண்டுதல் அவசியமியில்லை. அதுவரையில் விவசாயிகளுக்குத் தேவையான கடன் வசதி முதலிய சௌகரியங்கள் செய்துகொடுக்கவேண்டிய பொறுப்பு முக்கியமாகத் தங்களுடையதே என்பதை சர்க்கார் உணரவேண்டும்.

'மித்திரன்' காரியாலயத்தில் ராய்ட்டர் தூதுகோஷ்டி

★

இந்தியா வந்துள்ள ராய்ட்டர் நல்லெண்ணத் தூது கோஷ்டிக்கு 'மித்திரன்' காரியாலயத்தின் சார்பாகச் சென்ற திங்கட்கிழமை (14-ம் தேதி) மிக உற்சாகமான வரவேற்பும் விருந்தும் அளிக்கப்பட்டது. புதிய அச்சகத்தையும் கோஷ்டியினர் பார்வையிட்டனர். லேட்டன் பிரபு (கோஷ்டித் தலைவர்) மித்திரன் பத்திரிகையின் பதிப்பு உயர்வைப்பற்றி மகிழ்ச்சியுடன் ஆசிரியர் ஸ்ரீ ஸி. ஆர் ஸ்ரீனிவாஸனிடம் உரையாடுவதை பக்கத்தில் பார்க்கலாம். கீழ்படத்திலும் லேட்டன் பிரபு விருந்தின்போது நடந்த வரவேற்புக்குப் பதில் கூறுகிறார்.

காரைக்கால் பிச்சைக்காரி

சேதுராமன்

மஹா மன்னன் ராஜ ராஜ சோழன் அரசாட்சி செய்து வந்த காலமது அரசனுக்கு மற்றக் கலைகள் மீது எவ்வளவு ஆர்வமிருந்ததோ அவ்வளவு ஆர்வம் சித்திரக்கலை மீதும் இருந்தது. அதை வளர்க்க அரும்பாடு பட்டவர்களுள் ராஜ ராஜ சோழனும் ஒருவன்.

சோழ நாட்டில் அக்காலத்தில் எவ்வளவோ சித்திர விற்பன்னர்கள் இருந்தனர் ஒவ்வொருவர் வரைந்த சித்திரங்களும் ஈடு இணையற்றனவாகத் திகழ்ந்தன. தென்னுட்டின் சிற்பத் திறனையும் சித்திரத் திறனையும் பல்வேறு நாட்டினருக்கும் உணர்த்த அவா கொண்டான். அவனுடைய இந்த ஆசையை நிறைவேற்ற ஒரே ஒரு வழிதான் இருந்தது.

இந்தியாவின் பல்வேறு ராஜ்யங்களுக்கும் அழைப்பிதழ் விடுத்து, உறையூருக்கடுத்த ஈசானமங்கலம் என்ற ஊரில் ஒரு பெரிய சித்திரக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்தான். அக்கண்காட்சி இரண்டு மண்டலங்கள் (சுமார் மூன்று மாதங்கள் நடக்க ஏற்பாடாகியிருந்தது) சாதாரண கிராமமாயிருந்த ஈசானமங்கலம் சித்திர விழாவின் காரணத்தினல் பெரிய பட்டணம்போல் திகழ்ந்தது.

சித்திர விழாவைக் கண்டு களிக்கவும், அதில் பங்கெடுத்துக் கொள்ளவும், வட இந்தியாவில் இருந்தும் மற்றும் இலங்கையிலிருந்தும் கூடப் பல பேர் வந்திருந்தனர்.

இந்தச் சித்திர விழாவின் மேற்பார்வையாளனுக ராஜ சந்திரன் நியமிக்கப்பட்டிருந்தான். சித்திரங்கள் களவு போகாமலும், அழுக்கடைந்து விகைப் போகாமலும் பார்த்துக்கொள்ளவேண்டியது அவனுடைய பொறுப்பு. அந்தச் சித்திரங்கள் இருக்கும் இடத்தில் எப்போதும் உலாவிக்கொண்டே இருப்பான். அப்போதுதான் அவன்

கவனித்தான் ஒரு விநோதத்தை சித்திர விழாவிலேயே எல்லோருடைய மனதையும் ஒருங்கே கவர்ந்த சித்திரம் ஒன்று இருந்தது. அழகிய இருபது வயதுப் பெண் ஒருத்தியினது படம் அது.

ராஜ ராஜ சோழனே அந்தப்படத்தைக் கண்டு திகைத்து நின்றான் உண்மையிலேயே அது சித்திரமா? அல்லது உயிருள்ள பெண் தானே? என்று எல்லோரும் ஐயுறும்படி அமைந்திருந்தது. இதிலே இன்னொரு விசேஷம் என்னவென்றால் அந்தச்சித்திரம் யாரால், எங்கு வரையப்பட்டது என்ற விவரம் ஒருவருக்கும் தெரியாது. சித்திர விழா ஆரம்பிக்க இரண்டு நாட்கள் இருக்கும் போது அச்சித்திரம் ராஜ சந்திரன் கைக்கு வந்தது. சித்திரத்தைக் கொணர்ந்து கொடுத்தவனை வெளியே இருக்கச் சொல்லிவிட்டு உள்ளே சென்றான். பிறகு வந்து பார்க்கும் போது படி வெளியில் ஆளைக்காணோம். சித்திரக்கலையில் நிபுணனான ராஜ சந்திரன் அச்சித்திரத்தை வரைந்த புலிக்கு எவ்வளவோ சந்தோஷம் தெரிவிக்கவேண்டும் என்று ஆசைப்பட்டான். அது இன்னமும் நிறைவேறவில்லை.



விழா ஆரம்பித்துப் பதினைந்து தினங்கள் ஆகியிருந்தன. தினமும் சித்திரத்தைக் கண்டு களித்துச் சென்றனர் பலர் ராஜ சந்திரன் அன்றுதான் கவனித்தான்.

பெண்மணியின் சித்திரத்தைத் தினமும் தவறாமல் வந்து பார்த்துக்கொண்டிருந்தான் இளைஞன் ஒருவன். இருபத்தைந்து அல்லது இருபத்தாறு வயதிருக்கலாம். நல்ல அழகன். பார்த்தால் தென்னாட்டைச் சேர்ந்தவனல்ல என்று தோன்றியது. தமிழ் பேசினாலும் அது ஒரு மாதிரியாக இருந்தது. தினமும் விழாவிற்கு வருவான் அவ்விளைஞன். வேறு எங்கும் செல்லாமல் இந்தப் பெண்ணின் படத்தையே உற்று நோக்கிக் கொண்டிருப்பான். கொஞ்ச நேரமில்லை. வெகுநேரம் நாளடைவில் இவன் அம்மாதிரி அந்தப்படத்தையே உற்று நோக்கிக்கொண்டிருந்தது விழாவின் இன்னொரு முக்கிய அம்சமாக இருந்தது.

ராஜசந்திரனும் இரண்டொரு முறை கவனித்துள்ளான இந்த இளைஞனை "யாரோ! பார்க்கிறான! பார்க்கட்டும்!" என்றிருந்து விட்டான். ஆனால் தினமும அவ்வாறு அவன் அங்கு நின்றுகொண்டிருந்ததும், மறறப்பொது ஜனங்கள் இதைப்பற்றிப பேசிக்கொண்டிருநததும், அவனுக்குக் கொஞ்சம் சங்கட மாக இருந்தது. என்ன! என்று அவனையே கேட்டுவிடலாம் எனபது அவனுடைய கடைசித்தீர்மானமாக இருந்தது. இன்று, நாளை என்று பலநாட்கள் போய்விட்டன. விழா ஆரம்பித்த இருபத்தி நான்காவது தினம. அன்றையதினம் சேரநாட்டுத் தளபதி முதுமாறனல் சித்திர விழாவிற்கு வருவதை முன்னிட்டுச் சில தனிப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்படவேண்டியிருந்தன. அன்றும் அந்த இளைஞன் அஙகு நின்றுகொண்டிருந்தால் சேரத் தளபதி ஏதாவது நினைத்துக் கொள்வாரோ என்று ஐயுற்று அன்றுநிச்சயம் இளைஞனைக் கேட்டுவிடுவது என்று தீாமானம் செய்துகொண்டான்.

வழக்கமபோல் அன்றும் கண்காடசி திறந்த சில நாழிகைகளுக்குப் பிறகு அவ்விளைஞன் நுழைந்தான். ராஜ சந்திரனும் அவனைப் பின் தொடர்ந்தான். பெண்ணின் படத்தைக்கண்டதும் இளைஞன் ஏதோ பிரார்த்தனை செய்வது

போல் முணுமுணுத்தான். ராஜசந்திரன் அவனைக் கேள்விகள் கேட்க எண்ணிச் சட்டென்று முன்னால் வந்தவன், திகைப்புற்று நின்றுவிட்டான். இளைஞன் கண்களில் இருந்து நீர் தாரை தாரையாகச் சுரந்துகொண்டிருந்தது தனக்கு முன்னால் வேற்று மனிதன் ஒருவன் நிற்பதைக் கண்டதும் கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக்கொண்டான் அந்த இளைஞன். உடனே வெளியே போய்விட எண்ணிக காலை எடுத்து வைத்தான்.

ராஜசந்திரன் விடும் வழியாக இல்லை குறுக்கே வந்து நின்றுகொண்டான் "ஐயா! உங்களைச் சில விஷயங்கள் கேட்க விரும்புகிறேன் தயை செய்து என் இருப்பிடத்துககு வருகிறீரா? என்று கேட்டான்.

வேண்டா மனத்தினனாய் இளைஞன் ராஜசந்திரனைப் பின் தொடர்ந்தான் இருவருமாக வெளியே சென்றனர்.

சில விநாடிகளில் இருவரும் வெளியேயுள்ள ராஜசந்திரன் கூடாரத்தையடைந்தனர். சௌகரியமாய் உட்கார்ந்துகொண்ட பின்னர் ராஜ சந்திரன் பேச ஆரமபிக்கலாம என்றெண்ணி வாயைத் திறந்தான். அதற்குள் அவ்விளைஞனே பேச ஆரமபித்தான்.

"சுவாமி! நீங்கள் என்னை என்ன கேட்கப்போகிறீர்கள் என்று எனக்கு நன்கு தெரியும். இதை நான் முன்பே எதிர்பார்த்தேன்! நான் சொல்வேன். ஆனால் நீஙகள் அதை நம்பவேண்டுமே!...

"எதை?" என்றான் ராஜ சந்திரன்

"சொல்கிறேன்" என்று தொடங்கினான் இளைஞன்.

* * * *

நான்கு வருஷங்களுக்கு முன்பு காரைக்காலிலுள்ள என நண்பன் பொன்னனுடைய வீட்டில் தங்கியிருந்தேன் எனக்கு சேர நாடு என் பேச்சிலிருந்தே தெரிந்து கொண்டிருப்பீர்களே! காரைக்காலுக்கு நான் புதிதாகையால் என் நண்பனுடன் ஊரைச் சுற்றிப்பார்ப்பதில் வெகுவாய் முனைந்திருநதேன். ஒருநாள் பொன்னன் தன் நண்பன் ஒருவன் வீட்டில் அன்று நடக்கவிருந்த விருந்துக்கு என்னையும் அழைக்துச்சென்றான். விருந்து முடிந்து வீட்டிற்குத் திரும்பிப்புறப்படும் போது மணி பத்துக்கு மேல் ஆகிவிட்டது பொன்னன் தன் பிரதாபங்களைப்பற்றி ஏதேதோ கூறிக்கெண்டே வநதான். நானும் வேறு வழி இல்லாமல் கேட்டுக்கொண்டே வந்

தேன். வீதியில் சுமை தாங்கிகளின் மாடத்தில் வைக்கப்பட்டிருந்த அகல் விளக்குகள் மினுக், மினுக் என்று எரிந்துகொண்டிருந்தன. சந்திரன் மேகத்தில் மறைந்திருந்ததால், இந்த அகல் விளக்குகளின் வெளிச்சமதான் தெருவில் நிறைந்திருந்தது.

இருவருமாகப் பேசிக்கொண்டே வேங்கொள்ளிப் பாலம்வரையில் வந்தோம். அங்குதான் "ஐயா!" என்ற தீனக்குரல் எங்களையழைத்தது. பொன்னன், இந்த மாதிரி விஷயங்களை அறவே வெறுப்பவன். யாசகம செய்வதும் யாசகம் கொடுப்பதும் மனித குலத்தின் தர்மங்களல்ல என்பது அவனுடைய வாதம். எனக்கோ மிகவும் இளகிய மனது! என்ன செயவதென்று தெரியாமல் சிறிதுநேரம் யோசித்தேன். முடிவில் நணபனிடம் "பொன்னு! நீ முன்னால்போ! இதோ வந்து விடுகிறேன்!" என்றான்.

"வேலா! பார்த்தாயா! நான் இதற்குத்தான் உன்னை எங்கும் இரவில் வெளியே அழைத்துச் செல்வது கிடையாது. ஊர் எப்படிப்பட்டது என்று உனக்கு எவ்வளவு தடவை சொல்லியிருக்கிறேன். இதெல்லாம் வெறும் பாசாங்கு. தங்கள் வலைகளில் உன் போன்றவர்களைச் சிககவைக்கும் ஏற்பாடு! என்றான்

"இல்லையில்லை. பொன்னு! யாசித்தவன் குரல் உண்மையிலேயே துக்கத்தினால் பாதிக்கப்பட்டு இருந்தது. நான் வருகிறேன். நீ போயேன்!"

"அதிக நேரம் வீணாக்காதே, ஜாக்கிரதை!" என்று சொல்லிப் பொன்னன் நகர்ந்தான். நான் குரல் வந்த திக்கை நோக்கி நடந்தேன் பாலத்தின் மதகைப்பிடித்துக்கொண்டு ஒரு உருவம் நின்றுகொண்டிருந்தது.

முகத்தை ஒரு சிறு துணி மூடியிருந்தாலும் உடலின் மற்ற அமைப்பிலிருந்து. யாசித்தவன் உண்மையிலேயே ஒரு இளம் பெண் என்று தெரிந்தது

"ஸ்வாமி! ஏதாவது தர்மம் செய்துவிட்டுப் போங்கள்!" என்றாள்.

"எவ்வளவுவேண்டும் அம்மா?"

"அதுமாதிரி கேட்பவர்கள்கூட இருக்கிறார்களா. எங்கள் நிலைக்கு எவ்வளவு இருந்தாலும் போதாது ஆனாலும் இப்போது என் தாயாரைக் காப்பாற்ற ஒரு கழஞ்சு இருந்தால் போதும் ஸ்வாமி!"

"உன் தாயாரைக் காப்பாற்றவா? என்ன ஆபத்து அவளுக்கு!"

"தேக நலன் சரியில்லை ஐயா! மூன்று வருஷங்களாகப் படுத்திருக்கிறாள். இல்லாத குறையினால், ஆரம்ப முதலே சரியான வைத்தியம் இல்லை இப்போது பலவீனமும் வியாதியும் அதிகரித்துள்ளன. இனிமேல் பிழைக்க மாட்டாள் என்றுதான் நாடிககாரர்கள் சொல்லுகின்றனர் அவளுக்கு நானும், எனக்கு அவளும்தான் இந்த உலகத்தில் அவள் போய்விட்டால் நான் என்ன செய்வேன்? எப்பாடு பட்டாகிலும் அவளைக் காப்பாற்ற வேண்டுமென்றுதான் முயற்சிக்கிறேன்."

என் மேலங்கியில் இருந்த இரண்டு பொன் கழஞ்சுகளை அவளிடம் எடுத்துக்கொடுத்தேன்

"உன் தாயார் விரைவிலேயே குணமடைந்து விடுவாள்! சிறிதும் கவலைப்படாதே நீ. நீ யாரம்மா? உன் முகத்தைக்கூட மறைத்துக்கொண்டிருக்கிறாயே!"

"காரணமாகத்தான் ஸ்வாமி! எவ்வளவோ கௌரவமாக இருந்தனர் எங்கள் மூதாதையர் இப்போது நாங்கள் பிச்சையெடுக்கிறோம். நான் போய் வரவா? உங்களைக் கடவுள் காப்பாற்றுவார் ஐயா!"

என்னிடம் விடைபெற்றுக்கொண்டு அந்தத் திருப்பம் தாண்டியிருக்கக்கூட மாட்டாள். அவள் சென்ற திக்கையே பார்த்துக்கொண்டிருந்த எனக்குத் திடீரென்று அவளிடும் கூக்குரல் காதில் விழுந்தது. அவள் சென்ற வழியே ஓடினேன். இரண்டு முரடர்கள் அவளை மடக்கப் பார்த்துக்கொண்டிருந்தனர். இரண்டு பேரையும் நன்றாக உதைத்து அவர்கள் பிடியிலிருந்து அவளை விலக்கினேன். தனியே அழைத்துச்சென்றேன்.

ஒரு முரடன் அதற்குள் உளறினான் குடிவெறியில், தம்பி! சரக்கு அவரதுபோலிருக்கு! என்று முதுகில் இன்னொன்று கொடுத்தேன். இருவரும் ஓட்டம் பிடித்தனர்.

"என்னம்மா! இந்த ஊரை நன்கறிந்தும் நீ இந்த மாதிரி இரவு வேளையில் தனியாக வரலாமா? எவ்வளவு பயந்துவிட்டேன் தெரியுமா? இனிமேல நீ வீடு போய்ச் சேரும் வரை நானும் உன்னுடன் வரப்போகிறேன்."

"வேண்டாமய்யா! இங்கு அருகில்தானுள்ளது என் குடிசை. வேண்டாம் நானே போய்விடுகிறேன்" என்றாள்.

ஆனால் என்னுடைய பிடிவாதத்தைக்கண்டு "நீங்கள் என் வீடிருக்கும் தெரு வரையில் வந்தால் போதுமானது" எனச் சம்மதித்தாள்

இருவரும் சென்றோம். வழி நெடுகிலும் அவளைப்பற்றிய விருத்தாந்தங்களையறிய நான் எவ்வளவோ கேள்விகள் கேட்டுக்கொண்டேயிருந்தேன் ஒன்றுக்கும் பதில் சொல்லாது அவள் நடந்து போய்க்கொண்டே இருந்தாள் கடைசியில் அவள் வீடுள்ள தெரு வந்துவிட்டது என்று மட்டும் சொன்னாள். இனி நாம் அவளுடன் செல்ல முடியாதே என்று இருந்தபோதிலும் என்னுடைய வாக்கைக் காப்பாற்ற வேண்டியிருந்தது

"ஆமாம்! என் முட்டாள்தனத்தைப் பார். உன் பெயர் என்னவென்று கேட்க மறந்து போய்விட்டேனே!"

"என் பெயரா? வள்ளி, ஸ்வாமி!"

"வள்ளி! நான் உன்னை ஒன்று கேட்கப் போகிறேன். உன் பேச்சிலிருந்தும், நடை முதலியவற்றிலிருந்தும், நீ ஒரு மேன்மையான குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பது நன்கு தெரிகின்றது. உன் தாயாரின் தேக நலனைப் பற்றி உனக்கு எவ்வளவு கவலையோ, அவ்வளவு எனக்கும் இன்று முதல் உண்டு. அவள் உடம்பைப்பற்றி நீ எனக்கு எப்படித் தெரிவிப்பாய்?

இதோ பார் வள்ளி! இன்று திங்கட்கிழமை. வரும் வெள்ளிக்கிழமையன்று உன்னை நான் இங்கு எதிர்பார்க்கிறேன்."

தயங்கினவளாய், "சரி!" என்றாள்

"அப்புறம் இன்னொன்று வள்ளி!" உன் முகத்தை மூடியிருக்கும் அந்தத் துணியைக் கொஞ்சம் எடுப்பாயா?

"நான் மாட்டேன் ஸ்வாமி!" என்று...நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. ஓடிவிட்டாள்.

அன்றிரவு நான் வீட்டையடைந்தபோது மணி பன்னிரண்டிருக்கும். பொன்னன் எனக்காகக் காத்துக்கொண்டிருந்தான்.

என்ன வேலா! திருப்திதானா?"

நான் நடந்தது பூராவும் அப்படியே ஒன்று விடாமல் சொன்னேன். அவன் என்னை நம்பவேயில்லை.

* * * *

வெள்ளிக்கிழமையை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். பொன்னனுக்கும் இது தெரியுமாதலால், ஜாக்கிரதையாகப் போய் வா!" என்று அனுமதி கொடுத்தான்.

குறித்த இடத்தையடைந்தேன். எனக்கு முன்னரே அவள் அங்கு காத்துக்கொண்டிருந்தாள்.

"வள்ளி! நீ தானா?"

"ஆமாம் ஸ்வாமி!"

"உன் தாயாருக்கு இப்போது எப்படி இருக்கிறது?"

"முன்னைக்கிப்போது குணம் என்றுதான் சொல்ல வேண்டும். உங்களை மனதார வாழ்த்தினோம் ஸ்வாமி! உங்களுக்கு ஒரு குறையும் வராது தெய்வம் உங்களை என்றும் கவனித்துக் கொள்வார் ஸ்வாமி!"

"வள்ளி! இன்றாவது உன் முகத்தைக் காண்பிக்கமாட்டாயா?"

"அதுவும் கேட்டேன் ஸ்வாமி, உங்கள் பெயரைக் கேட்டுக் கொள்ளச்சொன்னாள் முதலில்!"

"என் பெயர்தானே வேலன். என் தந்தை சேர நாட்டுத் தலைநகரில் பெரியதோர் வைர வியாபாரி. நான் இங்குள்ள நம்நாட்டு நண்பன் பொன்னன் என்பவனைக் காண வந்துள்ளேன். போதுமா?

"கோபித்துக் கொள்ளாதீர்கள். நீங்களும் சேரநாடு என்று கேட்க நான் மிகவும் பெருமைப்படுகிறேன். அன்று நீங்கள் பேசிய மாதிரியில் இருந்தே சேரநாட்டினரோ என்று ஐயுற்றேன். என் தாயாருக்கும் சேரநாடு தான்!"

"நீ சேரநாட்டினளா! அப்போது உன் தந்தையின் பெயர்!"

"அதெல்லாம் இப்போது சொல்வதற்கில்லை. ஆமாம்! இந்தத் துர்ப்பாக்கியவதியின் முகத்தைக் காண ஏன் அவ்வளவு ஆசைப்படுகின்றீர்கள்!"

"காரணம இருக்கிறது மறந்தே போய்விட்டேனே. எங்கே உன் முகத்தைக் காண்பி! பார்க்கலாம்!

முகத்தை மூடியிருந்த துணியை சற்றே விலக்கினாள். பக்கத்தில் பின்னாலிருந்த அகல் விளக்கின் வெளிச்சம் அவள் முகத்தில் பிரதிபலித்தது. என்ன அழகு! சேரநாட்டினரே அழகென்றாலும அவர்கள் யாவரையும் முதுகிட்டோடச் செய்யும்படியான அழகிய முகம் நான் எண்ணியது சரிதான்! மேன்மையான குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பதில் ஐயமேயில்லை. ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவளோ என்று கூடச் சொல்லும்படியிருந்தது அவள் அழகு.

இதை எதிர் பார்த்து நான் கொண்டு போயிருந்த முத்து மாலையை அவளிடம் கொடுத்தேன். முதலில் அவள் பயந்தே போய்விட்டாள்.

"எனக்கா! வள்ளிக்கா ஸ்வாமி! நீங்கள்—நீங்கள் - மேலே பேச முடியாமல் அவள் நாதடுமாறியது.

"வள்ளி. ஆம். உனக்கேதான். என் தந்தை பெரிய வைர வியாபாரி என்று சொல்லவில்லையா? உனக்கு என்னுடைய அன்பளிப்பு. ஆமாம். உன் பாட்டனார் பெயரென்ன! சேரநாட்டில் எந்த ஊர்? அதெல்லாம் சொல்லேன்."

"தாயாரைக் கேட்டு விட்டு. அவள் சரி என்றால்தான் சொல்லலாம் ஸ்வாமி எங்கள் வாழ்க்கை அப்படி இருக்கிறது."

இவ்வளவு நேரமும் திறந்திருந்த முகத்தைப் பழையபடியும் துணியைப் போட்டு மூடிக்கொண்டாள்.

மறுவெள்ளிக்கிழமை சந்திப்பதாகப் பேசி விடைபெற்றுக் கொண்டு ஓடிப்போய் விட்டாள். அன்று எங்கு அவள் முகம் தான் எனககுத் தெரிந்தது அன்றுதான் அவளைக் கடைசியாக நான் பார்த்தது அதற்குப்பிறகு மறு வெள்ளிக் கிழமை அவள் வரவில்லை, எவ்வளவோ வெள்ளிகள் சென்றுவிட்டன

அவளைப்பற்றி அறிய எவ்வளவோ விதங்களில் முயற்சித்தேன். ஒன்றும் சாத்தியமாகவில்லை இது நடந்து எவ்வளவோ வருஷங்களானபோதிலும் இன்னம் அவளை என்னால் மறக்கமுடியவில்லை.

* * * * *

"அப்படியானால் காட்சியிலுள்ள சித்திரம் வள்ளியினுடையது என்று நீங்கள் சொல்கிறீர்கள்?"

"ஆம்! அவளேதான் என்று எனக்குத் தெரிகின்றது. ஆனால் அதை எவ்வாறு நிச்சயப்படுத்திக் கூறுவது? இந்தச் சித்திரம் எப்போது, யார் வரைந்தது என்று தெரிந்தாலும் உண்மையை அறிவது சாத்தியமாகலாம் ஆனால் இந்தச் சித்திரம் இங்கு வநது சேர்ந்ததைப்பற்றி நானும் கேள்விப்பட்டேன் அங்கும் என் துரதிர்ஷ்டம்தான்."

"கவலைப் படாதீர்கள் வேலரே! இந்தச் சித்திரத்தைபபற்றிய முழுவிவரங்களையும் நான் உங்களுக்குக் கண்டுபிடித்துச் சொல்கிறேன், இந்தப் படத்தின் பிரதி ஒன்று, நானே இதைப் பார்த்து வரைந்து உங்களுக்குத் தருகிறேன்."

வேலனால் ஒன்றும் சொல்ல முடியவில்லை நன்றி சுரக்கும் கண்களுடன் ராஜ சந்திரனை நோக்கினான் இதற்குள் வெளியே பெரிய ஆரவாரம் கேட்டது.

"அடடா! மறந்தே போய்விட்டேனே. இன்று சேரததளபதி முதுமாறனார் வரும் நாளல்லவா? வாருங்கள் வேலரே! போகலாம்!" என்று வேலனையும் இழுத்துக் கொண்டு விழா மண்டபத்தை நோக்கி நடந்தான்.

முதுமாறனார் வயது சென்றவர். ஐம்பத்தைந்து அறுபது வயதிருக்கலாம். சேர அரசனுடைய முக்கியமான பொக்கிஷங்களில் முதுமாறனாரும் ஒருவர். சேர நாட்டில் அரசனுக்கு அடுத்தபடியாகக் கீர்த்தி பெற்றவர் அவரே! ராஜராஜனுடைய அழைப்பின்பேரில் கலை விழாவுக்கு வந்திருந்தார்.

ராஜசந்திரன் அவரை உள்ளே அழைத்துககொண்டு போய் ஒவ்வொரு சித்திரமாகக் காண்பித்துக் கொண்டே வந்தான் வள்ளியின் படம் வந்தவுடன் முதுமாறனார் திகைத்து நின்றுவிட்டார்.

கண்களைத்துடைத்துக்கொண்டு இன்னொரு முறை அநதச் சித்திரத்தைக் கூர்ந்து கவனிததார்.

"இந்தச் சித்திரம் யாருடையது?" என்று ராஜசந்திரனைக்

கேட்டார். சித்திரம் காட்சிக்குக் கிடைத்த விவரங்களை ராஜசந்திரன் எடுத்துரைத்தான்.

'இல்லையில்லை. இவள் மேகலை தான். அவளேதான், சந்தேகமேயில்லை'' என்று வாய்விட்டுச் சற்றே உரக்கக் கூறினர்

இதுவரையில் பின்னல் நின்று கொண்டிருந்த வேலன் 'ஸ்வாமி! என்ன பெயர் கூறினீர்கள்! நீங்கள் தவறுதலாய்ச் சொல்லியிருக்கக்கூடுமோ?''

முதுமாறனரின் திகைப்பைக் கண்ட ராஜசந்திரன், வேலனை அவருக்கு அறிமுகம் செய்வித்ததோடு நில்லாமல், வேலன் கூறிய விஷயங்களையும் எடுத்துரைத்தான்

''இல்லையில்லை. எப்படி இருக்க முடியும்? என் சகோதரி மேகலையின் சித்திரம் அல்லவா இது! அவளுக்கு இப்போது நாற்பத்தைந்து வயதுக்குமேல் இருக்குமே! எவ்வாறு அவள் வேலன் கண்களுக்கு யௌவனமாய்த் திகழ்ந்திருக்கக்கூடும்?'

''உங்கள் சகோதரி இப்போது எங்கு இருக்கிருள், தளபதி!''

''அவளா! எங்கள் குடும்பத்தை விட்டுச்சென்று இருபது வருஷங்களுக்குமேலாகின்றன. அவள் விரும்பிய ஆடவனை மணக்க என் தந்தை சம்மதியளிக்கவில்லை காரணம் அவன் குலத் தொழிலான போர்த் தொழிலில் ஈடுபடாமல் சித்திரம் வரைந்துகொண்டிருந்ததுதான். ஆனல் மேகலா பிடிவாதமாயிருந்து ஒரு நாள் எவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் அவனுடன் மறைந்துவிட்டாள் குடும்பத்திற்குக் கெட்ட பெயர் கொண்டுவந்த அவள், பிற்காலத்தில் எப்போதாவது மறுபடி எங்களுடன் வாழவிரும்பினல், சேர்த்துக்கொள்ளக்கூடாதென்று கண்டிப்பான உத்திரவும் போட்டார். இது மேகலைக்கும் தெரிந்திருக்க வேண்டும். ஏனெனில் அவள் வெளியே சென்ற நாள் முதல் இன்றுவரை ஒரு முறைகூட எங்களை அண்டவில்லை.

என் தந்தை காலம் சென்றுவிட்டார். அதன் பிறகாவது அவள் வருவாள் என்று எதிர்பார்த்தோம். எல்லாம் வீணயின

இனிமேல்அவளை எங்கு காணப் போகிறேன். இந்தச் சித்திரம் அவள் புருஷன் வரைந்ததாகத் தான் இருக்கவேண்டும்.

''ராஜ சந்திரரே! எவ்வாருயினும் இதன் உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும்!''

''என்னுல் என்னென்ன முடியுமோ அவ்வளவும் செய்கிறேன் ஸ்வாமி! வேலருக்கும்கூட—''

ராஜசந்திரனின் பேச்சு முடியவொட்டாமல் விழாவில் எழுந்த ''அம்மா!'' என்ற குரல் தடுத்தது சத்தம் வந்த திசையை நோக்கினர் எல்லோரும்.

பெண்ணின் படத்திற்கு முன் என்று தெரிந்ததும் முதுமாறனர் கூட வயதை மறந்து மற்ற இருவருடன் ஓடினர்.

கும்பலை விலக்கிக்கொண்டு உள்ளே நுழைந்தனர் வேலனும் ராஜசந்திரனும். பின்னல் நுழைந்த சேரத் தளபதியைக் கண்டதும கூட்டத்திலுள்ளவர் அனைவரும மரியாதையுடன் விலகி நின்றனர்.

கீழே விழுந்து கிடந்த பெண்ணைக்கண்டதும் வேலன் வள்ளி!' என்முன்.

''ராஜ சந்திரரே! இது வள்ளி தான் சந்தேகமேயில்லை கழுத்திலுள்ள அந்த முத்துமாலையைப் பார்த்தீர்களா! அது ஒன்றே போதும்!''

தாதியரின் உதவியுடன் அவளைக் கொண்டுபோய் அங்குள்ள மஞ்சத்தில் கிடத்தினர். வைத்தியர் ஒருவரும் இதற்குள் வந்து பார்த்தார். 'அதிர்ச்சிதான்'.

மஞ்சத்தைச்சுற்றி இம்மூவரும் உட்கார்ந்திருந்தனர் வள்ளி மெதுவாய்க் கண்களைத் திறந்தாள். முதலில் அவளுக்குத் தெரிந்த முகமாய்த்தோன்றியது வேலன் ஒருவருடைய முகம்தான்.

''ஸ்வாமி! நீங்களா?'' என்ருள். அவளையறியாமலேயே அவள் கைகள் கழுத்திலுள்ள முத்து மாலையைத் தேடிச் சென்றன.

வேலன் முதலில் ராஜசந்திரனை அறிமுகப்படுத்தினன். பின்னர் முதுமாறனர்பற்றிக்கூறும்போது ''இவர் நம் நாட்டு வீரத்தளபதி முதுமாறனர்'' என்று சொல்லி முடிக்கக் கூடவில்லை.

''மாமா!'' என்று கதறிய வண்ணம் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தாள் இதுவரை புரியாதிருந்த பல விஷயங்கள், எல்லோருக்கும் புரிந்தன வள்ளி உண்மையிலேயே முதுமாறனரின் மருமகள். முதுமாறனரின் சந்தோஷம் எல்லையைக் கடந்துவிட்டது அப்படியே கூத்தாடினர் என்றுலும் மிகையாகாது.

* * * *

வள்ளியின் தாயார் இறந்து விட்டதால்தான் மறு வெள்ளிக்கிழமை அவள் தன்னைச் சந்திக்கவில்லை என்பது வேலனுக்குத் தெரிந்தது.

அதன் பின்னர் ஒரு பெரிய ஜமீன்தாரிணியிடம் பணிப்பெண்ணுக அமர்ந்தாள்.

வள்ளியின் தந்தை வள்ளி பிறந்த சில வருஷங்களில் இன்னெருத்தியின் மேல் கருத்து கொண்டார் என்ற காரணமாகத் தான் தாங்களிருவரும் தனியே செல்லவேண்டியிருந்தது என்ற உண்மையும் தெரிந்தது.

ராஜசந்திரனின் பெரு முயற்சியின் பேரில், உண்மையிலேயே மாறிய தந்தை வள்ளிக்கு மறுபடியும் கிடைத்தார் தந்தைக்கு, ராஜசந்திரனின் முயற்சியினல் அந்த விழாவின் முதல் பரிசைத் தட்டிக்கொண்டு போகும் பாக்கியம் கிடைத்தது

வேலனுக்கு வள்ளியும் வள்ளிக்கு வேலனும் கிடைத்தார்கள் என்பதை சொல்லவா வேண்டும்!

சேர நாட்டிலேயே ஒரு பெரிய திருவிழாவாக இருந்தது வள்ளி, வேலன் இவர்களுடைய திருமணம் சோழ அரசனுக்கும் சேர அரசனுக்கும் பல விதங்களில் நம்மையைச் செய்தது இந்தத் திருமணம.

தங்களுக்குப் பிறக்கும் குழந்தைக்கு ''ராஜ சந்திரா, அல்லது ராஜ சந்திரன்'' என்று பெயர் வைக்கப்போவதாக நிச்சயமாய் கங்கணம் கட்டிக்கொண்டார்கள் தம்பதிகள் இருவரும.

எல்லோரையும் விட ராஜசந்திரனுக்குப் பிரிந்திருந்த ஒரு குடும்பத்தைச் சேர்த்துவைக்கும் பாக்கியம் தனக்குக் கிடைத்ததே என்று அளவற்ற சந்தோஷம்.

சொப்பன வாழ்க்கை

'ஆர்வி'

13

"மன்னி!" என்று கூப்பிட்டுக்கொண்டே மேலே வந்தான் சுவாமி.

சுசீலா மிகவும் அசிரத்தையுடன் அவன் பக்கம் திரும்பி, "என்ன?" என்று கேட்டாள்.

"ஊரிலிருந்து எனக்குப் பதில் வந்துவிட்டது இதோ, பார்! அவள் பெயர் பானுமதியாம்!" என்றுன் சுவாமி. முன்பு அவளிடம் சொல்லியிருந்தபடி சுவாமி ஊரில் உள்ள தன் நண்பன் ஒருவனுக்கு எழுதி இந்த விவரத்தை அறிந்துகொண்டான். மன்னிக்கு இந்தச் செய்தி சுவாரஸ்யமாய் இருக்கும என்பதற்கு மாருக அவள் தன் முகத்தை வேறு புறம் திருப்பிக்கொண்டதைப் பார்தது அவன் மனம் வருத்தமடைந்தது மேலும் அவன், "பங்களூர் விலாசத்தையும் எனக்கு எழுதியிருக்கிருன் என் சிநேகிதன். பானுமதியின் அம்மாகூட இப்பொழுது தஞ்சாவூரில் வந்து தங்கியிருக்கிருளாம்..." என்றுன்.

"போதும் இதெல்லாம் தெரிந்து எனக்கு ஒன்றும் ஆகவேண்டியதில்லை. உனக்கு உன் அண்ணுவிடமிருந்து கடிதம் வந்ததே. குமாரிடம் அதைக் காட்டினுயா?" என்ருள் சுசீலா சற்றுக் கடுமையாக.

"அதிலென்ன விஷயம் இருந்தது ஒன்றும் பிரமாதமில்லை. இரண்டே வரிகள். லீவுக்கு என்னை வரச்சொல்லி அப்பாவிடமிருந்து அவனுக்குக் கடிதம் வந்ததாம்!"

சுசீலா அவன் வார்த்தையை இடைமறித்து, "நீ எப்பொழுது போகப் போகிருயாம்?" என்ருள். முன்பொரு நாள் கிருஷ்ணன் கேட்டதற்கு, 'நாளைக்கே போனுலும் போவான்' என்று தான் சொன்னது அவள் கவனத்துக்கு வந்தது. ஆனுல் எப்படியோ அவ்விதம் எதுவும நடக்கவில்லை கிட்டத்தட்ட இரண்டு வாரங்களுக்கு மேல் ஆகியும் சுவாமி ஊருக்குக் கிளம்பும் பேச்சையே காணவில்லை. சுசீலாவின் மனத்தில் இது உறுத்திக்கொண்டேயிருந்தது. மேலும் சீதா சொல்லிவிட்டுப் போன செய்தி அவள் மனத்தில் வேதனைத் தீ ஒன்றை மூட்டிவிட்டது திடீரென்று ஊருக்குக் கிளம்புவதா, கிளம்பினுல் சுவாமி என்ன செய்வான், என்ன காரணத்தைச் சொல்லிக்கொண்டு கிளம்புவது, சுவாமியும் கூடவே புறப்பட்டுவிட்டால் எது புகைகிறதோ அது ஊர் பூராவும் பரவாதா, முதலிய விஷயங்களினுல் அவள் தூக்கமே கொள்ளவில்லை. இரவு, பகல் துன்பப்பட்டாள். அந்தத் துன்பத்தின் வேதனையிலே தன் சுயநலம் மட்டும் தான் தெரிந்தது. ஒரு பாவமுமறியாத சுவாமி இந்த வேதனைககுக் காரணமாய் இருந்தான் என்பது அவனுக்கே தெரியாது ஒரு நாள் அவனைக் கூப்பிட்டுத்தானே ஊருக்குப் புறப்படச் சொல்ல வேண்டும; சொல்லிவிட்டு மறு நாளே தானும் தன் தந்தையிடம் புறப்பட்டுச் சொல்ல வேண்டும் என்ற தீர்மானக்துக்கு வந்திருந்தாள். அன்றுதான் இந்தப் பேச்சு வந்தது. சுவாமி இந்தக் கேள்வியை எப்படி எடுத்துக்கொண்டாலும் சரிதான், அதற்கெல்லாம அவள் எப்படிக் கவலைப்பட முடியும்? வாழ்க்கையில் அடிபடடு, அனுபவப்பட்டு, சுழன்று உழன்றவர்களுக்கே கிருஷ்ணன் போன்ற பிறரிடம் எந்த அளவுக்கு உறவு கொண்டாடுவது என்பது பிடிபடாமல் கஷ்டத்தில் சிச்கிக்கொள்ள நேர்ந்துவிடுகிறது ஆகவே இதை சுவாமிக்கு எடுத்து உணர்த்துவதில் தவறு ஒன்றும் இல்லை என்றே அவள் கருதினுள்.

சுவாமியின் முகத்தில் இருந்த உத்ஸாகம் படிப்படியாகக் குறைந்து வந்தது. "இது என்னவோ மன்னி, குமார்தான் என்னைப் பிடிவாதமாக இருக்கும்படி செய்துவிட்டான். சீக்கிரமே, நீ சொன்னுல், இன்றைக்கே நான் கிளம்பத் தயார்" என்றுன்.

"நான் எதற்காக உன்னைப் போகச் சொல்வது?"

சுவாமிக்கு உண்மையில் இது திரஸ்காரமாகப் பட்டது அவன் வருத்தந்தோய்ந்த குரலில், "தெரிந்தோ, தெரியாமலோ நான் உனக்குச் சங்கடத்தைக் கொடுத்துவிட்டேன் என்று தெரிகிறது. நானுகத் தெரிந்துகொண்டு கிளம்பியிருக்கவேண்டும். இதோ, இன்றைக்கே-இன்றைக்கு நினைத்தாலும் முடியாது—நாளைக்கே கிளம்பிவிடுகிறேன்!" என்றுன்.

ஏதோ பதில் சொல்லவேண்டுமே என்பதற்காக, "இன்றைக்கு என்ன இங்கே?" என்று கேட்டாள் சுசீலா.

இருந்த நிலைமையில் சுவாமி அதன் உண்மைக் காரணத்தைக் கூறிவிடுவதற்கு இருந்தான் ஆனுல் எப்படியோ தன்னைச் சமாளித்துக்கொண்டு," குமாரும் நானும் இன்று ஒருவரைப் பார்க்க வருவதாகச் சொல்லியிருக்கிருேம. அத்துடன் என் வேஷ்டி, சட்

டைகள் காலையில் தான் சலவை செய்துவரும்'' என்ருன்.

பின்னல் சொன்னது உண்மையாயிருக்கலாம் என்று சுசீலாவுக்கே பட்டது. அவன் அங்கிருப்பது பற்றித் தனக்கு ஒன்றும் ஆகிவிடவில்லை என்றும், அவனுடைய மதிப்புக்குத்தான் அது குறைவு என்றும குறிப்பிட விரும்பி, ''மன்னி சொல்கிருளே—என்று நீ நினைத்துககொண்டாலும் நினைத்துக் கொள். நீ அண்ணுவுக்குத் தெரியாமல் இங்கு வந்திருப்பது அவ்வளவு நன்ருயில்லை. நமக்கு எவ்வளவோ காரணங்கள் இருக்கலாம் எதற்காக நீ இங்கு வரவில்லையோ அந்தக் காரியத்தில் சந்தேகம் ஏற்படுவது சகஜம் இங்கு நீ தங்கியிருப்பதைப் பற்றி எனக்கு ஒருவித ஆக்ஷேபணையுமில்லை ஆனல் நான் இங்கு இருக்கப்போவதில்லை. நாளைக்கே நான் அப்பாவிடம் போகப் போகிறேன் ஸ்டேஷனுககு வரச்சொல்லி கடிதம் எழுதி விட்டேன் அப்பாவுக்கு. இஙகு ஒரு க்ஷணம் கூட இருக்கப் பிடிக்கவில்லை எனக்கு'' என்ருள் சுசீலா. சுவாமி இந்த வார்த்தைகளைக் கேடடு அசையாது உட்கார்ந்திருந்தான் தன்னுடைய மதிப்பு எந்தவிதத்தில் இதனல் குறையும் என்பது அவனுக்குத் தெரியாததுடன் தன் மன்னியின் பேச்சும் போக்கும் அவனுக்கு அடியோடு தெரியவில்லை கூடவே இன்னெரு சந்தேகமும எழுந்தது தான் ஊருக்குப் போகமுடியாமல் இருக்கும் உண்மைக்காரணத்தை மன்னி தெரிந்து கொண்டுதான் இப்படி வற்புறுத்துகிருளோ என்று அவன் எண்ணினன். கண்கள் கலங்கின.

வெடவெடவென்று வளர்ந்துவிட்டானே ஒழிய அவன் மனசு எத்தகையது என்பதைச் சுசீலா அறிவாள். அவன் கண்களிலிருந்து தாரையாய் நீர் வடிவதைக் கண்டு அவள் மனசு உருகிவிட்டது. கபடு, சூது தெரியாத உள்ளத்தில் விளையாட்டுத்தனமும, விஷமத்தனமும், குடிகொண்டிருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆனல் தன்னைச் சேர்ந்த மனிதர்களிடம் இத்தகைய அந்தரங்க பக்தியும் பவ்வியமும், இந்த இளநெஞ்சில் எங்கே மறைந்து கிடைக்கிறது?

''நான் உன்னைக் குற்றமாக எதுவும் சொல்லவில்லையே. நீ கண்ணீர் விடுவானேன்?'' என்ருள் சுசீலா. அவனே அவள் உத்தேசத்தைவிட விவரம் தெரிந்தவனுய் இருந்தான். ''உன்னுடைய தர்ம சங்கடமான நிலைமையை நான் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்காதே. நான் கண்ணீர் விட்டால் உனக்குக் கவலைவேண்டாம் அதைத் துடைத்துக்கொள்ள எனக்குத் தெரியும். தெரிந்ததா?'' என்று கூறிவிட்டு அவன் தடதடவென்று கீழே இறங்கிச் சென்ருன். சுசீலா வெகுநேரம் மௌனமாய் உட்கார்ந்திருந்தாள். அஸ்தமிக்கும் சமயம். மாலை வெயிலின் ஸ்வர்ணமயமான கிரணம அவள் முகத்தில் செம்மையைப் பூசியது மேற்குப் பக்கத்து ஜன்னலைத் திறந்து மலைவாயில் நுழைந்துகொண்டிருக்கும் ஆதவனையும அவனைச் சுற்றித் தென்படும் செக்கர் வானத்தையும் பார்த்தவாறு நின்ருள்.

தூரத்திலே மஞ்சள் வெயிலில் மினுமினுக்கும் பசுந்தளிர் நிறைந்த மரம ஒன்றில் இரண்டு பறவைகள் கண்ணுக்குத் தெரிகிற கிளையொன்றில் அமர்ந்து அலகுடன் அலகை நீவி விட்டுக்கொண்டிருந்தன. இன்பம் தருகிற விளையாட்டோ, உள்ளத்தைப் பொசுக்குகிற வேதனையோ, எதனல் அவை அப்படிச் செய்கின்றன என்பது அவளுக்குச் சிறிதும் புரியவில்லை. கீழே, பக்கத்து ஜன்னல் வழியாக தெரு வாசலில் விளையாடும் சிறுவர்களின் ஓட்டமும் கூச்சலும் அவள் செவிகளில் விழுந்தன. பொன்னிரக் கிரணங்களும் சிறுவர்களுடைய சப்த அலைகளும் நிரம்பிய அந்த அறையிலிருந்தபடியே சப்த லோகத்தையும தாண்டிப் பறந்துச்செல்வதுபோன்ற உணர்ச்சியை அவள் அனுபவித்தாள். இருண்டு, மௌனம் நிலவிய அவளுடைய எதிர்காலத்தில் எங்கோ, ஜோதிமயமான விளக்கின் வெளிச்சம் தெரிவது போல இருந்தது உற்றுப் பார்க்கும்போது அந்த வெளிச்சம பல யோசனை தூரத்துக்கு அப்பால் அறிவினலும் அணுகச் சாத்தியமற்ற எல்லையின் விளமபில் தகதகவென்று பிரகாசிக்கும் கதிரவனின் கோளம் என்பதை அவள் உள் மனம் உணர்ந்துகொண்டது. அந்த ஒளிப் பிழம்பின் வெகு சமீபத்திலே, அவளுடைய தாயின் முகம் தெரிவதுபோல ஒரு பிரமை உண்டாயிற்று இன்னும் அவளுடைய இமைக்காத கண்களுக்கு அந்தத் தாயின் நெற்றியிலணிந்திருக்கும் குங்குமம்தான் பகலவன் சொருபமோ என்றும் தோன்றியது. எங்கிருந்தோ தன உடம்பில் கணுக்கணுவாக ஒரு புதுச் சக்தி பரவி மனசிலும் ஒரு தெம்பு ஏற்படுவதுபோல அவளுக்கு இருந்தது. வழுவழுவென்ற சமதரையில் ஓடும் வண்டி கண்ணுக்குத் தெரியாத ஒரு நொடியில் விழுந்து எழுவதுபோல பின்னலிருந்து கலகல

வென்று சிரிப்புச் சத்தம் கேட்டு அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள். குமார் அங்கே நின்றுகொண்டிருந்தான். அவன சிரித்துக்கொண்டே, “சுசீ... அந்த ஜன்னலண்டை போய் நிற்காதே அதை யாருமே திறப்பதில்லை. அந்தப் பக்கத்து வீட்டுக் கிழவன் பிறகு இங்கே சண்டைக்கு வந்துவிடுவான். அவன் புடைவை தோய்ப்பதை நீ வேண்டுமென்றே பார்த்துக்கொண்டிருந்ததாக ஊரைக் கூட்டிவிடுவான். அவனுக்கு மூன்றாம் தாரம். எல்லாருக்குமே இது சுவாரஸ்யமான விஷயம். கிழவன் குதிப்பதைப் பார்த்து ரஸிக்கக் கும்பல் கூடிவிடும் இங்கே” என்றான்.

சுசீலாவுக்கும் இதைக் கேட்டுச் சிரிப்புத்தான் வந்தது என்னவோ திடீரென்று அசட்டுத்தனமாக, “பெண்ணாகப் பிறந்தால் இளையாளாக வாழ்க்கைப்பட வேண்டும்” என்றாள். மேலே பேச்சு வளருமுன்பு மெல்லிய இழையில் யாரோ பாடிக்கொண்டே வருகிற சந்தடி கேட்டது. சீதாதான்! அந்த வேளையில் அதுவும் அந்த அறையில் குமார் இருப்பான் என்று அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அதனால் அந்திப் பொழுதினிலே ஒரு நாள்’ என்ற பாட்டு திருகிவிட்ட ரேடியோ முள்ளைப் போல ‘பக்’கென்று நின்றுவிட்டது ‘இளையாளாக வாழ்க்கைப்பட வேண்டும்’ என்று சுசீலா கூறிய பிற்பகுதிச் சொற்கள் அவள் காதில் விழுந்தன. பேசாமல் திரும்பிவிட எண்ணிய அவளைப் பார்த்துச் சுசீலா, “அடீ பாடகியே, கொஞ்சம் உள்ளே தான் வந்து நில்லேன். உன்னை யாரும விழுங்கிவிட நான் விடமாட்டேன்” என்றாள்

குமாருக்குப் படபடவென்று இருப்பே கொள்ளவில்லை. சுசீலாவிடம், “கீழே அவர்கள் தயாராய் இருக்கிறார்கள். கிளம்பு-இன்றைக்குப் பாஸ் கொண்டு வந்திருக்கிறேன். உம—” என்று அவசரப்படுத்தும் குரலில் கூறினான்.

“சினிமாவுக்கா?” என்றாள் சுசீ. சற்றுமுன் மனசில் தோன்றிய தெம்பு வீறுடன் அவளைத் தலை தூக்க வைத்துவிட்டதுபோலிருந்தது. ஆயினும் தன்னைச் சுற்றியிருந்த சூழ்நிலையின் ஞாபகம் அவளை அடியோடு விட்டுச் செல்லவில்லை. மறுத்துவிட ஆனமட்டும் முயன்றாள். குமார், சாகஸத்திலேயே பிறந்து சாகஸத்திலேயே வளர்ந்தவன். மயிலாப்பூரிலிருந்து ஆபீஸ் நேரத்தில் டவுனுக்கு டிராம வண்டியில் செல்வது எவ்வளவு சாகஸம் நிறைந்த செயல் என்பது தெரிந்தவர்களுக்குத்தான் தெரியும். அவனோ தினம் இரண்டு தடவை அந்தச் சாகஸத்தைப் பயின்று. புரிந்து வருகிறான். அவனா சுசீலாவின் மறுப்பை ஏற்றுக்கொண்டு விடுபவன்?

கடைசியில் சுசீலா புறப்படவேண்டியதாயிற்று. அவள் சீதாவை அழைத்து, “இதெல்லாம் வேண்டாம் என்றாலும் நம்மைவிட்டுப் போகிற விஷயமல்ல. உம்; வீட்டுக்குப்போய்ச் சொல்லிக்கொண்டு தயாராய் இரு. இதோ நான் வந்து அழைத்துப் போகிறேன்” என்றாள். பிறகு குமாரைப் பார்த்து, “ஏண்டா குமார்—அவள் வரலாமோ இல்லையோ கீழே யார் யார் வருகிறார்கள்?” என்று கேட்டாள்

“சுவாமியும் [illegible]!”

“ஓ! ஹேமு கூட வா? அது தூங்கிப்போய்விடுமேடா, அதையுமா அழைத்துக்கொண்டு......”

“அது அழுகிறதே...”

சீதா இதற்குள் கீழே இறங்கித் தன்வீட்டுக்கு ஓடினாள். சுசீலா பெட்டியைத் திறந்து மேலே இருந்த மேக வர்ணப் புடைவையை எடுத்தாள். ஒரே கணத்தில் அவள் விரல்கள் ஆடின. கடைசியாக அவளும் விசுவமும் சினிமா ஒன்றுக்குச் சென்றபோது அதைத்தான் அவள் உடுத்துக்கொண்டுபோயிருந்தாள். அவனுக்கு மிகவும் பிடித்தமான புடைவை அது. ‘நீல வானத்தில் பௌர்ணமிச் சந்திரன் போல’ என்று இன்னும் என்ன வெல்லாமோ சொல்லி அவன் வர்ணிப்பான். அவள் அதை உடுத்துக்கொள்ளும்போதெல்லாம், இன்று சுசீலாவுக்கு அந்த நினைவு வந்துவிட்டது. அவனுடன் சென்ற படம் உலகப் பிரசித்தி பெற்ற ஆசிரியர் எழுதியது. தன் உயிருக்குத் தீங்கு இழைத்தவன் தன் காதலனே என்று அவளுக்குச் சந்தேகமறத் தெரிந்திருந்தும் சாகும தறுவாயில் மரணப்படுக்கையில் அந்தக் காதலி தன் காதலனைக் காட்டிக்கொடுக்க மறுத்து விட்டாள். அன்று படம் முடிந்து வெளியே வந்ததும்,—

சுசீலா வேகமாக அந்தப் புடைவையைஎடுத்துக் கீழே எறிந்தாள். ‘சரி; நீ புறப்படு. நான் கீழே இருக்கிறேன்” என்று சொல்லி விட்டுக் குமார் கீழே சென்றான். சுவாமியின் ஆவல் நிறைந்த முகத்தருகில் நெருங்கி, “சுசீ இதோ வந்துவிடுவாள். ஆனால் அதுதான் நிச்சயமாய் ஒன்றும் தெரியல்லேடா. அவள் எதுவுமே சொல்லாமல் என்னை [illegible]

முறைத்துப் பார்த்துவிட்டுப் போய்விட்டாள். வரா விட்டால் என்னடா செய்கிறது?'' என்று முனு முணுத்தான்.

"வராவிட்டால் நீ சினிமாவுக்கு வந்து கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்து இரு! என்ன செய்கிற தாம்! குமார் இப்பொழுதே சொல்லிவிட்டேன். மன்னி வரும்பொழுது இந்தமாதிரிப் பேச்செல்லாம் வேண்டாம். இல்லையோ இப்போதே சொல்லி விடு. நான் வரவில்லை'' என்றான் சுவாமி.

14

சரியாக ஆறு அடிக்கப் பத்து நிமிஷம் இருக்கும் போது சுசீலா கீழே இறங்கிவந்தாள். பளிச் சென்ற முகப்பொலிவுடன் இருந்த சுசீலா அதே மேகவர்ணப் புடவையுடன் காட்சியளித்தாள். எதை வேண்டாமென்று அவள் மனம் வெதும்பிக் கீழே எறிந்தாளோ அந்தப் புடைவையையே அணிந்துகொள்வதற்குள் அவள் இருதயரங்கத்தில் நடந்த பிரளய குழப்பத்தை அந்த இளைஞர்கள் எங்கே அறியப்போகிறார்கள்? அந்தச் சர்வேசுவர னைத் தவிர வேறு யாருமே அதை அறியவும் மாட் டார்கள். ஆயினும் நறுக்குத் தெறித்ததுபோல ஆடம்பரம் எதுவுமின்றி இருந்த சுசீலா இயற்கை யான பெண்மையின் பூரண எழிலுடன் துலங்கி னாள். முகக் குறிப்பினால் அவள் சிறிதும் தன் மனக் கவலையை வெளிக்காட்டவில்லை. தானாக இயங்குகிற யந்திரத்தைப்போல இருந்தாள் அவள். மென்மையும் அதற்குரிய கம்பீரமும் அந்தக் கலகல வென்ற சுபாவமும் துளிக்கூட மாறவில்லை.

சுசீலா வீட்டின் உள்புறம் ஒருதடவை கவனித் தாள். விமலா வெளியில் தலைகாட்டவே இல்லை. வீட்டில்தான் இருந்தாளோ அண்டை அயல் வீடு களுக்குத்தான் சென்றிருந்தாளோ அதைப்பற்றி அவள் ஒரு வார்த்தைகூடக் கேட்கவில்லை.

"ஹேமு கண்ணு ரெடியாக நிற்கிறதுபோ லிருக்கே! சரி, கிளம்பலாமா?'' என்றாள் சுசீலா.

குமாரும் சுவாமியும் பேந்தப் பேந்த விழித்தார் கள்; தயங்கினார்கள். எப்படியோ ஒருமட்டில் சுசீலாவைக் கிளம்பச் செய்தாகிவிட்டது. ஆனால் அவளை—? அதற்குள் சினிமாக் காட்சியே ஆரம்பித் தாகிவிடுமோ? ஆரம்பிக்கட்டுமே; அது அவ்வளவு முக்கியமா, என்ன?

"சுசீ பாஸ் நாலு பேருக்கு இருக்கிறது. ஹேமுக்குப் பாஸ் வேண்டியதில்லை.......'' என்று இழுத்தான் குமார்.

'நாலு பேர்தான் இருக்கோமே- அதோ எதிர்வீட்டு சீதா வரப் போகிறாளே!' என்றாள் சுசீலா.

குமார். "அப்படியானால் நேர மாகிறதே. ஆறரை மணிக்குப் படம் ஆரம்பம். நீ போய் அழைத் துக்கொண்டு வாயேன்'' என்றான்.

"சிறிது இப்படி வாசலில் நில் லுங்கள்' என்று சொல்லிவிட்டு சுசீ எதிர்வீட்டுக்குள் முதல் முத லாக நுழைந்தாள்.

"சீதா!''

உடனே சீதா வந்துவிட்டாள். அவள் பின்னால் அவளுடைய அம்மாவும் வருவதற்கு நின்றிருந் தாள்.

'என்ன இது! வேறு ஒன்றும் மாற்றிக்கொள்ளவில்லையா? ஆனால் இதுவே எவ்வளவு ஜோராய் இருக்கிறது உனக்கு -ம் சொல்லிக் கொண்டு வாயேன் சீதா-''

"நான் வரவில்லை'' என்று மட்டும் கூறினாள் சீதா.

"சீசீ பின்னே நான் கிளம்பி யிருக்கவே மாட்டேனே!''

சீதா பின்னால் தன் அம்மாவை ஒரு தடவை பார்த்துவிட்டு, ஊஹூம். நான் வரவில்லை'' என்றாள் மறுபடியும்.

சீதாவின் அம்மா இதற்குள் அவர்களிடம் நெருங்கி. "சினிமாவுக்கு நீ போவதாகச் சொன்னாள் இவள். அங்கேதானே !'' என்று கேட்டாள்.

"ஆமாம் : மாமி !''

"ஏண்டி சீதா. துணைக்குக் கூப்பிட்டால். போனால் என்ன ? மற்ற நேரமெல்லாம் கூடிக் கூடி பேசப் போய் விடுகிறாய் ! அவள் துணைக்கு என்றுதானே கூப்பிடுகிறாள் இந்தமாதிரி அழும்பு செய்வதெல்லாம் இந்த வயசில ஆகாது உனக்கு'' என்றாள் சீதாவின் தாய்.

"உனக்குத் தெரியாது-நான் போகமாட்டேன்.''

"இந்தமாதிரிதான் ஒவ்வொன்றிலும் இவள் படுத்துகிறபாடு நாளைக்கு ஒருவன் வீட்டில்போய் இந்த மாதிரியெல்லாம் இருக்கமுடியுமா, என்ன? நீ என்ன எப்போதுமேயா கூப்பிடவரப் போகிறாய்?''

சீதாவுக்குத் திடீரென்று என்ன தோன்றியதோ என்னவோ. 'சரி; புறப்படு இப்படியே-இதே டிரஸ் போரும் எனக்கு'' என்றாள்.

சுசீலாவின் சந்தோஷம் கரை கடந்து போயிற்று. "மாமி. சீதாவுகசு அவ்வளவு தைரியம் போறாது இருந்தாலும் நீங்கள் சொல்லாவிட்டால் இன்றைக்கு எனக்கும் சினிமா ஏது? ஏதோ பொழுதைப் போக்கவேண்டுமே!'' என்றாள்

"ஆமாண்டியம்மா ஆமாம்.'

"சரிதாண்டியம்மா, நான் போயிட்டு வறேன்'' என்று நீ டியாடி கேலியாகச் சொல்லிவிடு சீதா அவள் பின் சென்றாள். சுசீலாவுக்கு இந்த வெற்றி ஆனந்தம் கொடுத்தது இருக்கட்டும். அதைவிடப் பன்மடங்கு ஆனந்தப்பட்டான் குமார்.

வரிசையாக இடத்தில் உட்கார்கிற சமயத்தில் விளக்குகள் அணைந்துவிட்டன எதிரே காட்சி ஆரம்பமாகிவிட்டது முதலில் சுவாமி, சுசீலா சீதா ஹேமு கடைசியாகக் குமார். 'இபபடி உட்கார்ந்து கொள்வதற்குள் இரண்டு நிமிஷங்கள் ஆகிவிட்டன செய்திப படங்கள் முடிந்து, கதைப படம ஆரம்பமாகும்போது சுசீலா அன்று இரண்டாம் முறையாகத் திடுக்கிட்டாள். முதலில் எப்படியோ அவள் அதைப்பற்றி ஒன்றும் கேட்கவில்லை; தெரிந்துகொள்ளவுமில்லை. பார்த்த முகங்கள், பார்த்த ஜோடனைகள் கடைசியாகக் கதையும் விசுவத்துடன் பார்த்த அதே பிரபல ஆசிரியரின் கதைதான் ! இது எப்படி நேர்ந்தது !

மேற்குப்புறத்து ஜன்னலைத் திறந்துகொண்டு இன்னும் கற்பனை வெளியில்தான் சஞ்சரிக்கிறோமா என்று சுசீலா சந்தேகப்படடாள். அடுத்த கணம் இது உண்மை என்று பட்டதும் எழுந்துபோய்விட்டால் என்ன என்று தோன்றியது ஏதோ ஓர் எண்ணம், இதை மறுபடியும் பார். இன்று எப்படியிருக்கிறது என்றுதான் பாரேன் என்று உந்திக்கொண்டேயிருந்தது. வர வர இந்த எண்ணம் வலுத்து மனம் முழுவதையும் ஆக்ரமித்துக்கொண்டு. 'சரி, பார்க்கத்தான் வேண்டும்' என்று ஆமோதிக்க வைத்துவிடடது. கதாநாயகன் வந்துவிட்டான். அவளுக்கு ஏனோ அவனைப் பார்க்கும்போதெல்லாம் விசுவத்தின் ஞாபகமே வந்தது. விசுவத்துக்கும் இந்தக் கதாநாயகனுக்கும் உருவ ஒற்றுமையோ, வேறு எதுவுமோ இல்லாவிடினும் அவள்

ஞாபகம் மட்டும் விசுவத்துடனேயே அவனை ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டது. கடைசி முடிவு தெரிந்திருந்தது அவள் மனசில் தெளிவான பாகுபாட்டைக் கண்டுகொள்ள இடையூறாக இருந்தது.

சுசீலா இவ்விதம் தவித்துக்கொண்டிருக்கையில் சீதா மெல்ல அவள் பக்கம் நெருங்கிவந்து உட்கார்ந்து கொண்டாள்.

"என்ன?" என்றாள் சுசீலா சீதாவிடம் குனிந்து.

"முன் ஸீட்டில் அந்தத் தொப்பி மறைக்கிறது."

அவளை வேறு அடுத்த ஸீட்டில் உட்காரவைக்க முடியுமா என்று சுசீ கவனித்தாள். குமார் இந்தச் சமயத்தில் படத்தில் எதையோ கண்டு அவன் மட்டும் சிரித்துக்கொண்டிருந்தான்.

வேறு இடவசதி கிடைக்கவில்லை. படம் சுவாரஸ்யமான கட்டத்தை நெருங்கிக்கொண்டிருந்தது. கதாநாயகனும் கதாநாயகியும் முதன் முதலில் சந்திக்கப் போகிறார்கள்! சுசீலாவின் இருதயம் படபடவென்று அடித்துக்கொள்ள ஆரம்பித்தது எங்கேயோ இருக்கும் ஒருவனுக்கு எங்கேயோ இருக்கும் ஒருத்தி வந்து வாய்க்கப்போகிறாள் அதற்கு இது ஒரு வியாஜம் அவனைப் பார்த்து அவனிடம் அவள் தன் மனசைப் படிப்படியாகப் பறிகொடுக்கப் போகிறாள். தன்னுடைய அழகு, சௌந்தரியம், அன்பு ஆசை முதலிய யாவற்றையும் அவனுக்குக் காணிக்கையாகப் பலியிடப்போகிறாள். கடைசியாகத் தன்னையே பலிகொடுக்கப்போவது அவளுக்கே எங்கே இந்த மரத்தடியில் தெரியப் போகிறது?...தெரிந்தால்...முன்னதாகத் தெரிந்தால்...? நம்புவாளா என்ன. ஐயோ, வீட்டில் பூச்சியே!...

அவனுக்கோ விறைப்புக்கு ஒன்றும் குறைவில்லை. முதலில் பெண் இனத்தையே மதிக்காததைப்போன்ற பார்வைக்கும் ஜம்பத்துக்கும் பஞ்சமில்லை. பின்னால் சொல்லப்போகிறானே, 'உன்னைப்பார்த்த கண்கள் வேறொன்றைப் பார்க்க எப்படித் திரும்பும்?' என்று. அதற்காகவாவது அவளது மாசற்ற அன்பு பொழியும் முகமண்டலத்தை ஏறிட்டுப் பார்க்கிறானா? ஆனால் இது என்ன கடட்டுத்தனம்! அலட்சியமாய்ப் பார்ப்பதுபோல என்ன பார்வை! அந்தப் பைத்தியத்துக்கோ அவன் முறுக்கிக்கொள்ள முறுக்கிக்கொள்ள மனசு கிடந்து தவித்துப் போகிறது...

பெண்கள் ஜடமாக இல்லாமல் கல்வி கேள்விகளில் சிறந்த பண்டிதைகளாகலாம்; தீர்க்கதரிசிகளாகவும் ஆக முடியும். சமூகத்திலே தனக்குரிய பங்குக்கும் உரிமைக்கும் அவள் போராடலாம்; வெற்றியும் பெறலாம். ஆனால் ஆண்களிடம் உள்ள இந்தக் கம்பீரத்தைக் கண்டு அவள் மனந்தடுமாறாமல் எப்படி இருந்துவிடுவாள்! அப்படி இருந்துவிட்டால் அவளைப் பெண் என்று பெற்றவர்கள் வேண்டுமானால் சொல்லிக்கொண்டிருக்கலாம். மற்றவர்களுக்கு அது சந்தேகமாகத்தான் இருக்கும். மனசோடு மனசு ஒன்றிப் போகாத உறவு; உரிமை ஒன்றையே சதா அளந்து பார்த்துக்கொண்டிருக்கும் உறவு எத்தனை நாளைக்கு நிலைக்கும்? அப்படி நிலைத்தாலும் அந்த உறவு அவசியந்தானா?...

சுசீலாவின் பார்வை என்னவோ திரைமீது இருந்தாலும் கவனமெல்லாம் எங்கேயோ இவ்விதம் திரிந்துகொண்டிருந்தது. முடிவு என்னவோ அவள் நினைத்ததற்கு நேர் எதிராக ஏற்பட்டதை அவள் உணரவேயில்லை.

ஆனால் இந்தக் கதாநாயகனுக்கும் விசுவத்துக்கும் மனோபாவனையைப் பொறுத்த மட்டிலும் ஓர் ஒற்றுமை இருப்பதுபோல அவளுக்குத் தோன்றிக்கொண்டேயிருந்தது. என்னவோ குறிப்பிட்டுச் சொல்ல முடியாத, மனத்தினால் மட்டும் உணர முடிகிற ஒற்றுமை இருந்தது. அது என்ன முரட்டுச் சுபாவமா? கடட்டுத்தனமா? மமதையினால் ஏற்படும் கர்வமா? எல்லாம் சேர்ந்தா?......

இதோ கதாநாயகி தன் கை வரிசையைக் காட்டுகிற சந்தர்ப்பம் வந்துவிட்டது அவனைக்கதறக்கதற அடிக்கிறாள். அவனுக்கு வந்த காரியம்கூட மறந்துவிடுகிறது. சுவரில் அடித்த பந்துபோலத் திரும்பத் திரும்ப அவள் சந்நிதி நாடியே வருகிறான். அவள் சிரிப்புக்கு அவன் தவமே கிடக்கிறான். அவள் சிரிக்க நினைத்தால் சரிதான்—சிரிப்பை அவள் விழுங்கிவிட்டாலும் பரவாயில்லை—அவனுக்கு அது போதும்! ஸ்வர்க்கபோகத்தையே அடைந்துவிட்டவன்போல லேசாக மெய்தீண்டியதுமே மயக்க நிலையை அடைந்துவிடுகிறான். நிச்சயம் தன்னைப்போலவா அந்தக் கதாநாயகி இருக்கிறாள்? தனக்கும் அவளுக்கும் எவ்வளவோ ஒற்றுமை இருப்பதைப் போலத் தோன்றுகிறதே? அவள் நடந்துகொள்வதெல்லாம் திருப்திகரமாயும் பேசுவதெல்லாம் பொறுத்தமாயும், பார்ப்பதெல்லாம் பாந்தமாயும் இருக்கின்றனவே! இதில்தான் ஒற்றுமையோ?......

அவள் அவனுக்குப் பலியாகிவிட்டாள்!

முன்பு விசுவத்தின் அருகில் உட்கார்ந்து இதே கட்டத்தைப் பார்க்கும்போது இந்த இணக்கம் பலியாகவா தோன்றியது? இதோ பின்னாலும் முன்னாலும் கொட்டகையே விதிர்த்துப் போகிறதே இது ஆத்ம சமர்ப்பணம் என்று! அவர்கள் நினைப்பது பொய்யா? தான் நினைப்பதும் அன்று நினைத்ததும் பொய்யா?

"சுசீ மன்னி, இந்தக் கதை என்ன நிஜமாக நடந்த கதையா?" என்று குசுகுசுவென்று கேட்டாள் சீதா.

சுசீலா சற்றும் தயங்காமல், "ஆமாண்டி சீதா, இது நிஜமாகவே நடந்த கதைதான். நான் என் கண்ணாலேயே பிரத்தியக்ஷமாகப் பார்த்திருக்கிறேன். போதுமா?" என்றாள்.

சீதாவின் ஆச்சரியம் விலகுமுன் விளக்குகள் யாவும் இடைவேளைக்கு என்று ஏற்றிக்கொண்டன. குமார் சுவாமியை அழைத்துக்கொண்டு பரபரப்பாக வெளியே போனான்.

சீதா சுசீலாவை நோக்கி, "சுசீ மன்னி நான் அந்தப் பக்கம் வந்து உட்கார்ந்துகொள்கிறேன். என்ன. உட்காரட்டுமா?" என்ருள்.

"என்னடீ இது...அந்தப் பக்கம் வேறு யாரோ புருஷர்கள் உடகார்ந்திருககிருர்களே, தேவலையா?"

"பரவாயில்லை. நான் உன் பக்கமாய் நெருங்கி உட்கார்ந்துகொள்கிறேன். அவர்கள் இருவரும் சேர்ந்தாற்போல உட்கார்ந்துகொள்ளட்டும்" என்ருள் சீதா.

"சரி; உன்னிஷ்டம்."

திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டு, "ஏன், என்ன விஷயம்? தொப்பி மறைக்கிறதா அல்லது........." என்று சொனனவளுக்கு வார்த்தையைப் பூர்த்திசெய்ய முடியவில்லை. அதற்குள் வெளியே போகிறவர்களுக்கு ஒதுங்கிக்கொண்டு வழிவிடவேண்டியதாயிற்று. அதற்குப்பின் சுசீலாவுக்கு மேலே தன் கேள்வியைக கேட்க மனம் துணியவில்லை. சீதாவும் சொல்கிற வழியாயில்லை. முதலில் அவள் வர மறுத்தது. பிறகு குமார் அந்தப்பக்கம் உட்கார்ந்துகொண்டது கடைசியாக அவள் இடம் மாறி உட்காருவது முதலியவற்றிற்கு எல்லாம் ஏதோ ஒரு சம்பந்தம் இருப்பதுபோல. ஏதோ ஒரு தொடர்பு இருப்பதுபோல அவளுக்குப் பட்டது.

இடை வேளை முடிந்ததற்கு மணி கிளு கிளுத்தது.

"சுவாமி, மனசு எப்படி அடித்துக்கொள்கிறது தெரியுமோ எனக்கு?" என்ருன் குமார்.

"ஏன்? என்ன நடந்தது?"

"அவளிடம் அதைக்கொடுத்துவிட்டேன் திரும்பிப் பார்த்து அதை வாங்கிக்கொண்டுவிட்டாளடா!" என்ருன் குமார். அவன் முகம் ஏனே வேதனையால் துடித்துக்கொண்டிருநதது.

"அட பாவி" என்ருன் சுவாமி, இப்படி நடக்கும் என்று அவன் ஒன்றையுமே எதிர்பார்க்கவில்லை.

"ஏண்டா, மன்னிக்குத் தெரிந்தால் இது எப்படியிருக்கும்?" என்று திகைத்தான் அவன்.

"தலைக்குமேல் போய்விட்டது. ஆகிறது ஆகட்டும்! நான் என்ன வித்தியாசமாய் எழுதிவிட்டேன். ஒரே வரி: 'என்மீது உனக்கு இரக்கம்உண்டாகாதா!' உன் மன்னிக்குத் தெரிந்தால் உனககுப் பயம், எனக்கு என்ன? தம்பியிடம் இதையெல்லாம் ஒருத்தி கேட்கவே முடியாது" என்ருன் குமார்.

கனவில் நடப்பவன்போல சுவாமி புது இடத்தில் வந்து அமர்ந்துகொண்டான். குமார் என்னவோ சிறிதும் கலங்கவில்லை.

(தொடரும்)

உலகம் முழுதும் நிவாரண வேலையில் ஈடுபட்டுள்ள ஒரு சமூக சேவா சங்கத்தின் தலைமை ஸ்தலம் நியூயார்க்கில் இருக்கிறது: இதற்கு நாஷனல் கத்தோலிக் க்ஷேமாபிவிருத்தி ஸ்தாபனம் எனப் பெயர்; மலேரியா நோயினல் கஷ்டப்படும் இந்திய ஏழைகளுக்கு விநியோகிப்பதற்காக தலா 100 மாத்திரைகள் அடங்கிய 11537 சீசாக்கள் அடப்ரினை இது தானமாகத் தந்திருக்கிறது இந்தியாவில் உள்ள கிறிஸ்தவ மத குரு மேற்படி சீசாக்கள் அடங்கிய பெட்டியை மத்ய சர்க்கார் சுகாதார மந்திரி ஸ்ரீ அமிர்தகௌரியிடம் கொடுக்கிருர்

10

அன்புள்ள கீதாவுக்கு!

கோபாலனைப்பற்றி விசாரித்துவிட்டு போலீஸ் ஜவான் சென்றதுதான். அம்மாடி என்று தாராளமாக மூச்சுவிட்டார் மாமனார். அவர் தலையிலிருந்து ஏதோ பெரிய பாரம் ஒன்று கழிந்த மாதிரி தெரிந்தது அவருடைய முகத்தைப் பார்க்கும்போது. உண்மையிலேயே, பரம்பரையாய் கௌரவத்துடனும் கீர்த்தியுடனும் வாழ்ந்து வந்த குடும்பத்துக்குத் திடீரென்று ஒரு கெட்ட பெயர் வந்துவிட்டதாகவே நடுநடுங்கிப்போனவருக்கு, போலீஸ்காரர்கள் கண்ணனை உத்தேசித்து வரவில்லை கோபாலனை உத்தேசித்துத்தான் வந்தார்கள் என்று தெரிந்ததும் அந்த மனசு எப்படித்தான சந்தோஷப்படும்!

சற்று முன்பு அச்சமும் பீதியும்கொண்டு முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டிருந்த மாமியார் இப்பொழுது தலையை நிமிர்த்தினர். நிமிர்த்தினவுடனே என்னை நோக்கி கம்பீரமாகப் பார்த்தார். 'நீ எதிர்பார்த்ததெல்லாம வியர்த்தம்' என்று சொல்கிறமாதிரி இருந்தது அந்தப் பார்வை.

ஒருத்தி சொன்னளாம்; 'நான் விதவையாகப் போவதைப்பற்றி எனக்குக்கொஞ்சம்கூட வருத்தமில்லை. பக்கத்து வீட்டுக்காரியினுடையவும் எதிர் வீட்டுக்காரியினுடையவும் எதிரில் அந்தக் கோலத்துடன் நிற்க வேண்டுமே அதை நினைக்கும்போதுதான் கஷ்டமாக இருக்கிறது' என்றுளாம்.

அந்த மாதிரி, மாமியாருக்கு, தன்னுடைய குடும்பத்துக்கும் பிள்ளைக்கும் கெட்டபெயர் வருவதைப்பற்றிக்கூட வருத்தமில்லை என் எதிரில் விழிக்க வேண்டுமே அதைபபற்றித்தான் வருத்தமெல்லாம ஏன்? நான் பக்கத்தகத்து மாமியிடமும் எதிரகத்து மாமியிடமும என் புக்ககத்தைப்பற்றி 'டமாரமடித்து' இதெல்லாம் இன்றைககில்லாவிட்டாலும் ஒரு நாளைக்கு ஊர் சிரிக்க நிற்கப் போகிறதுகள்' என்று சொல்லித் திரிவதாகப் புகார் செய்துகொண்டிருக்கிருரல்லவா? அதற்குத் தகுந்த மாதிரி காரியமும் நடந்துவிட்டால், என்னைச சுட்டுத் தள்ளிவிடலாமா என்றுதான் தோன்றும்.

நானென்ன சிறு குழந்தையா? வயசாகவில்லையா? விவேகமில்லாதவளா? நமம குடும்ப ரகசியங்களையெல்லாம் பிறரிடம் சொல்வதினுல் ஏற்படும் அவமானம் நமக்கா? பிறருக்கா? மாமியார் நாட்டுப்பெண்களுக்குள் ஆயிரம தகராறு இருககும். அதற்காகப் பிறரிடம நம் குடும்ப ரகசியங்களையெல்லாம் சொல்லிக் கொண்டு திரிவார்களா என்ன? விவேகமில்லாதவர்கள். பிழைக்கத் தெரியாதவர்கள் செய்கிற வேலையல்லவா அது?

இப்பொழுதுதான்போலிருக்கிறது. என்னை முதல் முதல் புக்ககத்தில் கொண்டு விடும்போது அம்மா சொன்னுள்: 'மாமியார் நாட்டுப் பெண் தகராறு என்பது உலகத்தில் மாமியார்-நாட்டுப் பெண் என்று எப்பொழுது ஏற்பட்டதோ அன்று முதல் இருந்து வரும் ஒரு விஷயம். படித்தவர்கள், படிக்காதவர்கள், ஏழைகள், பணக்காரர்கள் எந்தக் குடும்பத்திலும் இது இல்லாமல இருக்காது. அப்படி இருந்தால் அது ஆயிரத்தில் ஒன்ருக இருக்கும். அதுவும் வெளிக்கு ஒன்றுமே இல்லைபோல இருக்குமேயொழிய உள்ளே புகுந்து பார்த்தால் அங்கும் ஒரு 'குமைச்சல்' இருந்துகொண்டுதான் இருக்கும். ஆகையால் நீயும் அந்தமாதிரியான ஒரு அனுபவத்துக்கு ஆளாக வேண்டியதுதான். பெண்ணைப் பிறந்த யாரையும் விடாது அது. ஆனல அதில் நீ முகயமாய்க் கவனிக்க வேண்டிய ஒரு விஷயம என்னவென்ருல், உன் குடும்ப ரகசியங்களைத் தெரிந்துகொள்ள பக்கத்து வீட்டுப பெண்களும் எதிர் வீட்டுப் பெண்களும் தவியாய்த் தவிப்பார்கள். நம்மிடமிருந்து ரகசியத்தை வரவழைக்க இல்லாத சாகஸ முறைகளையெல்லாம் கையாள்வார்கள். மாமியாருக்கு அடியோடு ஆகாதவாகள்போலவும நமக்கு ரொமபவும வேண்டியவர்கள் போலவும, அதிக அக்கரை உள்ளவர்கள் போலவும் நடிப்பார்கள். அந்த மாய வலையில் சிக்கி அசட்டுப்பிசடென்று எதையாவது உளறி வைக்காதிருப்பதுதான் விவேகிகளுக்கு அழகு நம குடும்ப ரகசியத்தைத்தெரிந்துகொள்வதில் அவர்களுககு என்ன அவ்வளவு அககரை என்று கேட்கிருயா? ஒரு உபயோகமுமில்லை. வீண் வம்புதான். ஸ்திரீகளுக்கு வழக்கத்தில் ஊறி வந்துவிட்ட தருமம் இது. நமக்கு மாமியாரிடம இருக்கும் ஒரு கோபத்தில் நம் குடும்ப ரகசியங்களையெல்

'............கம்பீரமாகப் பார்த்தாள்............'

லாம் சொல்லிவிடலாமா என்று தான் தோன்றும். ஆனால் அப்படிப்பட்ட சமயங்களில்தான் நமது சாமர்த்தியத்தைக கையாள வேண்டும் ஏனென்றால் பின்னிட்டு அதனால் ஏற்படும் கெடுதி நமக்குத்தானே! ஆகவே உன் புக்ககத்தினுடையவும் பிறந்தகத்தினுடையவும் கௌரவத்துக்குப் பங்கம் வராமல் பார்த்துக்கொள்' என்று சொன்னாள். இதற்குள்ளாகவா நான் அதை .மறந்துவிடுவேன்!

இத்தனைக்கும் நான் எவ்வளவோ ஜாக்கிரதையாகத்தான் இருந்துகொண்டு வருகிறேன். இருந்தும் என்ன பிரயோஜனம்? இங்கு எல்லோருக்கும் நான் என்றால் ஒருமாதிரிதான். மீதி பேர் என்றால் ஒருமாதிரிதான். ஒருவேளை என்னைப் பார்க்கும்பொழுதே ரொம்பவும் பொல்லாதவள் மாதிரி தோன்றுகிறதோ என்னவோ எல்லாம் கால வித்யாசம்தான்!

மாமனார் ஏதோ சொல்ல வாயெடுத்தார். எதிர் வீட்டு ஏகாம்பர மாமா வந்து சேர்ந்தார்.

'என்ன. வஸந்தாவை ஆஸ்பத்திரியில் 'அட்மிட்' செய்திருக்கிறதாமே? இப்பொழுதுதான் கேள்விப்பட்டேன். அவன் உருப்பட மாட்டான் ஸார். சுத்த அயோக்யப்பயல்!' என்றார் ஏகாம்பர மாமா.

மாமனார் ஒன்றும் புரியாமல் விழித்தார். ஏன்? எனக்கும் தான் ஏதோ புதிர் போடுகிற மாதிரி இருந்தது.

'எங்கப் பயல் அது? யாரைச் சொல்கிறீர்கள்?' என்று கேட்டார் மாமனார்.

ஒருவேளை சண்ணனைப்பற்றித்தான் குறிப்பிடுகிறாரோ என்ற சந்தேகம் மிரண்டவர்களுக்கு இருண்டதெல்லாம் பேய் என்று சொல்வதில்லையா?

யாரை? கோபாலனைத்தான் சொல்கிறேன். வேறு யாரைச் சொல்வார்களாம்! என்ன தைரியம்? என்ன பணக் கொழுப்பு ஸார். இவன்களையெல்லாம் செக்கிலவைத்து ஆட்டினால்கூடத் தோஷமில்லை என்று மேலே மேலே அடுக்கிக்கொண்டே போனார்.

அவா பாவம், எங்களுக்கு ஏற்கெனவே விஷயம் தெரியும என்ற எண்ணத்தில் சொல்லிக்கொண்டு போகிறார்.

ஏன்? என்ன செய்தான் அவன் என்றார் மாமனார்

ஏகாம்பர மாமா விழித்தார்.

'என்ன இது! ஒருவேளை நான் கேள்விப்பட்டதுதான் தவறா?!... என்று மேலே சொல்லத் தயங்கினார் ஏகாம்பர மாமா.

'என்னயோசிக்கிறீர்கள்? சொல்லுங்கள் பரவாயில்லை' என்றார் மாமனார்.

'வஸந்தாவையும், பத்மஜாவையும் ஆஸ்பத்திரியில் 'அட்மிட்' செய்திருப்பது வாஸ்தவந்தானே?' என்றார் அவர். மாமனார் சொல்கிற பதிலில் அதுவே பொய்யோ என்னவோ என்ற சந்தேகம் ஏற்பட்டுவிட்டது அவருக்கு. வாஸ்தவம்தான்' என்றார் மாமனார்.

'அதற்குக் கோபாலன்தானே காரணம?'

'கோபாலனா'? என்று மாமனார் விஷயம் தெரியாமல் வழித்தார்.

ஆமாம். ஆமாம். அந்த அயோக்கியப்பயல் கோபாலன்தான் என்றார் 'இவர்.'

'கோபாலனா? அவன் என்ன செய்தான்?' என்றார் மாமனார் ஆச்சரியத்துடன்.

'ஏன். உஙகளுக்கு சமாசாரமே தெரியாதா?' என்றார் ஏகாம்பர மாமா.

'எனக்கு ஒன்றுமே தெரியாது. நான் சற்று முன்புதான் வெளியிலிருந்து வந்தேன். வந்தவுடனே வஸந்தாவுக்குக் காயம் என்றும் ஆஸ்பத்திரியில் 'அட்மிட்' செய்திருப்பதாகவும் சொன்னார்கள். ஆஸ்பத்திரியிலிருந்து வந்தவர்களை விசாரிப்பதற்குள் கோபாலனைத் தேடிக்கொண்டு போலீஸ்காரர்கள் வந்தார்கள். இப்பொழுதுதான் அவர்கள் போனார்கள். இதோ உடனே நீங்கள் வந்தீர்கள். இன்னும் என்ன தகவல்



'.........சுத்த அயோகியப் பயல் ஸார்.........'

என்றே தெரியாது எனக்கு' என்றார் மாமனார்.

'அதான் கேட்டேன். தெருவே அமர்க்களப்படுகிறது. அப்படியிருக்க இதென்ன இப்படி ஒன்றும் தெரியாதவர்கள் போல் கேட்கிறீர்களே' என்று பிரமித்து விட்டேன் என்றார் ஏகாம்பர மாமா.

'நீங்கள் கேள்விப்பட்டது சரிதான் மாமா' என்று 'இவர்' சொல்லி விட்டு மாமனாரைப் பார்த்து, 'அந்த அயோக்கியப் பயல் கோபாலன் ரொம்ப நல்லவன் மாதிரி நடித்து, வந்துபோய்க் கொண்டிருந்தானே, என்ன செய்திருக்கிறான் தெரியுமோ? பத்மஜா நேற்று முன்தினம் காலேஜுக்குப்போயிருந்தபோது கோபாலன் அவளிடம் ஓர் காதல் கடிதத்தை வீசி எறிந்தானாம். 'அதில் மான். தேன், குயில், மயில், என்றெல்லாம பத்மஜாவைப்பற்றி வர்ணித்துவிட்டு, 'இந்த உலகில் என் ஹிருதயத்தில் நிரந்தரமாக ஓர் ஜீவனுக்கு இடம் உண்டு என்றால் அது நீதான் என்றும், இது இன்று நேற்று ஏற்பட்ட எண்ணமில்லை யென்றும், காலேஜுக்கு வந்த நாள் முதல் ஏற்பட்டுவிட்ட அபிப்பிராயமென்றும், ஸாக்ஷாத் ஸர்வேச்வரனே வந்தாலும இந்த எண்ணத்தை இனி மாற்ற முடியாதென்றும, அப்படி நீ இதற்குச சம்மதிக்கவில்லை யென்றால் நான் வாழ்நாள் முழுவதும் பிரம்மசாரியாகவே இருந்து விடுவேன் என்றும், இதற்கு உடனே பதில் தேவை' என்றும் எழுதியிருந்தானாம்.

வேறு பெண்களாக இருந்தால் அந்தக கடிதத்தைப் பிரின்சிபாலிடம், கொடுத்து அவன்மீது சரியான நடவடிக்கை எடுக்கும்படி செய்திருக்குங்கள். பத்மஜா கொஞ்சம் மானியோடு பொறுமைசாலியும்கூட பாவம். அவன் தான் தெரியாமல் அசட்டுத்தனமாக நடந்துகொண்டிருக்கிறான் தொலைந்து போகிறான் என்று பதிலுக்கு ஓர் கடிதம் எழுதிப் போட்டதாம். அதில் 'ஒரு படித்த பிள்ளைக்கு இதெல்லாம அழகல்ல இந்த தடவை மன்னித்தேன். இனி இந்த மாதிரியெல்லாம் அசட்டுப் பிசட்டென்று நடந்துகொள்ளாதே. நீயும் காஞ்சனாவும் (அதே வகுப்பில் படிக்கும் இன்னொரு பெண்) காதலிப்பது இங்கு யாருக்கும் தெரியாததல்ல. அந்த

"..............கடிதத்தை சுக்கல் சுக்கலாக கிழித்து............"

மட்டோடு நில். காலேஜில் படிக்கவரும் பெண்களெல்லாம் எப்படி வேண்டுமானாலும் கேட்டு விடுவார்கள் என்று தப்பெண்ணம் கொள்ளாதே, நாங்கள் படிப்பதற்காக வந்திருக்கிறோம். இங்கே. ஜாக்கிரதை' என்று எழுதியிருந்தாளாம்.

உடனே அந்தக்கடிதத்தைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்துவிட்டு பத்மஜாவை சுட்டெரிக்கிறமாதிரி ஒரு பார்வை பார்த்தானாம் கோபாலன். 'ஆகட்டும்! ஆகட்டும்! இவ்வளவு கர்வமா உனக்கு! என்னையா ஜாக்கிரதை என்று சொல்கிறாய்? பார்த்துக்கொள்கிறேன் ஒருகை' என்று எச்சரிக்கிற மாதிரி இருந்ததாம் அந்தப்பார்வை 'அவன கிடக்கிறான். அயோக்கியப்பயல்' என்று பேசாமல் இருந்துவிட்டாளாம் பத்மஜா.

இன்று காலை பத்திரிகையைப் பிரித்தால் அதில் 'காஞ்சனா கொலை செய்யப்பட்டாள்' என்று செய்தி வெளிவந்திருந்ததாம். அதுபற்றிக் கோபாலன்மேல் சந்தேகமாம்' என்று இவர் சொல்லிக்கொண்டிருக்கையில், 'அதற்குத்தான் போலீஸ்காரர்கள் கோபாலனைத் தேடுகிறார்களா?' என்றார் மாமனார். 'அதற்காகத்தான்' என்றார்' இவர்.'

மற்றவை அடுத்த கடிதத்தில்.

உன் அன்புள்ள

ரமா.

ZEISS IKON FOLDING CAMERA



மடிப்பு காமிரா தயாரிப்பு டெக்னிக்கில் இச்சிறந்த ஜெர்மன் தயாரிப்பைக்காட்டிலும் சிறந்தது வேறெதுவும் கிடையாது என்பதை நல்ல அமெச்சூர் போட்டோக்காரர் அறிவார்.

The Zeiss Ikon "ERCONA" takes 8 exposures of 6×9cm. ($2\frac{1}{4}'' \times 3\frac{1}{4}''$) on 120 roll film. Built with Novar F/4.5 lens in Compur Shutter, double exposure-prevention device, optical view-finder and attractively priced, it is the best value that money can buy.

விலை ரூ. 275; தோல் கேஸ் ரூ. 10.

NEW INDUSTRIAL & GENERAL IMPORTS Ltd.,
"BOMBAY MUTUAL ANNEXE,"
Gunbow St, Fort, P. O. Box 850. Bombay 1.

ஜாதகம்! ✶ ஆரூடம்!!

இன்றே எழுதுங்கள் பிறந்த தேதி. நேரம் அல்லது ஜாதக நகல் தேவை ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.



கட்டண விவரம்:–1 முதல் 3 உமது எதிர் கால கேள்விகட்கு ரூ. 2 3—க்கு மேல் கேள்வி 1–க்கு அணு 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு: வெளிநாடுக்கு இரட்டிப்புகட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள் —தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது எனக்கு திடீரென்று ரூ 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

★

மானேஜர்,

வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

பிரசுரமான க்ருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32–க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24–க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12–க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15–க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80–க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும்.

தபால் செலவு ப்ரத்தியேகம்,

மானேஜர்.

"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட் ரோடு, சென்னை.

சிறு விளம்பரங்கள்

சக்தி ஆரூடம்!

தபால், தந்தி இலாகா ஆபீசர் Sri K. S. சுப்பய்யா B. A., 23—5—48ல் எழுதுகிறார்:—"தாங்கள் கூறியபடியே நான் பிரமோஷனுடன் கெஜட் பதவி உத்தியோகம் பெற்றேன்."

3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ 1. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ 5 ஜாதகம் கணிக்க ரூ 2 சக்தி கவசம் ரூ 7-8-0. வி பி பி தனி ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை N. B:—வெளி நாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம்,
விருத்தாசலம் P. O. (S. I.)

ஆனந்த குஸுமாகர லேகியம்.

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டுவருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத் தளர்ச்சி, பசியில்லா திருத்தல், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு பித்தம், காசம் க்ஷயம்போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம் பெண்களும் அருந்தக்கூடியது பத்தியமில்லை

20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால செலவு அணா 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விவரமான காடலாக் இனாம்

மலையாள மெடிகல் ஹால் (Regd.)
189, வக்கீல் புது தெரு
Post Box No. 27. — மதுரை.

உயர்ந்த ஜவுளிகள் கிடைக்குமிடம்

V. N. சுப்ரமணிய அய்யர் ஜவுளிக்கடை

ராஜ வீதி : கோயமுத்தூர்

H. O. பெரிய தெரு,
கும்பகோணம்.

லெப்பர் க்யூர்

18 வகை குஷ்டரோகங்கள். வெண் குஷ்டம். தேக தழும்புகள். திமிர். முதலிய சர்மவியாதிகளுக்கும் சவாய். கனேரியா. முதலியவற்றிற்கும் உத்தரவாத சிகிச்சை.

ரிஜிஸ்டர்ட்

விவரங்களுக்கு

லக்ஷ்மி & கோ
ரிஜிஸ்டர்ட்

H.O. வால்டேர் R.S. போஸ்ட்

2/135 கிராட்சல் OF P.C. NO. 137 மதராஸ்

இப் பக்கத்தில் விளம்பரம் செய்யுங்கள்

★

2" X 2" அளவுக்கு கட்டணம் ரூபாய் பத்தே தான்.

ஆபீஸ் ஸ்தாபிதம் : 1924.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்கமெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு வருஷ பலன் எழுத ரூபா 5. ஆரூடம் மூன்று கேள்விகளுக்கு ரூபா 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

பண்டித காழியூர்
ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
தபோ நிதி, தியாகராய நகர்,
மதராஸ் 17.

பரிசு - பரிசு - பரிசு

ஸ்பெஷல் தயாரிப்பு.

31—3—49வரை பரிசுகள் வழங்கப்படும். 46" X 6. மூவர்ணக்கலர் பார்டருடன் வெள்ளை & கலர் சில்க் சாரி 1-க்கு ரூபா 12 வாங்குபவருக்கு ஒரு ஜெம்பர் வில்வெட் சில்க் துண்டு பரிசு வழங்கப்படும். முன் பணம் அனுப்புவோர் M. O. ரசீது அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்

THE KUMARAN TEXTILES HOUSE
Kottar, S. TRAVANCORE.

அறிவிப்பு

கீழே கொடுத்துள்ள விலாசதாரை எமது தினசரி வாரப் பதிப்புகளுக்கு ஏஜண்டாக நியமித்துள்ளோம். அன்னவரிடம் சந்தா செலுத்தி சந்தாதாரர்களாகப் பதிவுசெய்து கொள்ளுமாறு கோருகிறோம்.

கொழும்பு

ஸ்ரீ ஆர். தியாகராஜன்,
9, மிட்சோஸ் சந்து, பேட்டா கொழும்பு

சர்க்குலேஷன் மானேஜர்
சுதேசமித்திரன், விக்டரி ஹவுஸ்,
மவுண்டரோட், சென்னை 2



கலாமண்டபம்

சினிமாவும் காமிராமானும்

சாண்டில்யன்

வள்ளி கல்யாண சுப்பிரமணியர் ‘காயாத கான கத்தே—மேயாத மான், புள்ளி மேவாதமான், அந்த மான் இந்த மான்’ என்று பாடி ஆடிக் கொண்டு வந்தால அந்தக் காட்சியைப் பதிவு செய்ய வேண்டிய மான் காமிராமான் என்ற ஒளிப் பதிவு நிபுணர். இந்த மாதிரி ஒரு காட்சியை எப்படிப் படம் எடுக்கவேண்டும் என்று டைரக்டர் ‘ஷாட்’ எழுதினால் அந்த ‘ஷாட்டை’ பிலிமில் எடுக்க வேண்டிய வேலை காமிராமானைச் சேர்ந்தது ஒரு விதத்தில் பார்க்கப்போனால் சினிமாவில் சம்பந்தப் பட்ட எல்லோரையும்விட இந்த காமிராமான் என்ற காமிராக்காரர் மிகவும் முக்கியமான பேர் வழி. இவர் சரியாக படத்தை எடுததால்தானே அது கண்ணுககுத் தெரியும் ?

சரியாக படத்தை எடுப்பதென்றால் என்ன ? சாதாரணமாக டைரக்டர் உத்தரவுப்படி காமிராவை ஓட்டி சொன்ன அளவுக்குப் படம் எடுக்கும் காமிராககாரர்கள் உண்டு. சொந்த புத்தியை உபயோகப்படுத்தி நூதன போட்டோ முறைகளைக் கையாண்டு கதையின் நோக்கத்தை கதையைவிடப் பன்மடங்கு அதிகமாக சோபிக்கச்செய்யும் காமிராக்காரர்களும் உண்டு. கதையை இந்த மாதிரி சோபிக்கச் செய்யவேண்டுமென்றால் கதை காமிராக்காரருக்குத் தெரியவேண்டியது மிகவும் அவசியம். இப்படி கதையை அறிந்து படம் எடுப்பதைததான் சரியாக படம் எடுப்பது என்று சொல்லலாம்.

நமது சினிமா வட்டாரங்களிடை ஒரு அபிப்பிராயம் இருந்து வருகிறது. காமிராக்காரருக்குக் கதை எப்படியிருந்தால் என்ன? கதையைத்தான் டைரக்டர் ஒரு வழிப்படுத்தி இப்படித்தான் படத்தையும் எடுக்கவேண்டுமென்று நிர்ணயமும் செய்துவிடுகிறாரே. அப்படி இருக்க சொன்னபடி பிலிமில் படத்தை எடுககவேண்டியதுதானே, இதற்

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]

பனிக்கட்டிகளில் சறுக்கி விளையாடுவதை ஒரு பெரிய கலையாக மேல் நாட்டார் அபிவிருத்தி செய்திருக்கிறார்கள். இந்தக் கலையில் கை கால் உடைந்துபோவது சகஜம். அப்பேர்ப்பட்ட அபாயமான இந்தக் கலையில் உலகத்திலேயே இணையற்றவர் என்று பெயர் வாங்கியிருக்கும் அலேனா வார்ஸனேவா. வயது 18. செகோஸ்லோவேகியாவைச் சேர்ந்தவர்.

சினிமாவும் காமிராமானும்

[முன் பக்கத் தொடர்ச்சி]

குக் கதை தெரிவானேன்! என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இதன் காரணமாக கதையைப் பற்றி ஆலோசிக்கும் தருவாயில் காமிராக்காரரை அண்ட விடுவதே இல்லை.

இதைவிடப் பிசகான காரியம் எதுவும் கிடையாது. கதையை நன்றாகக் காமிராக்காரர் தெரிந்துகொள்வதில் உள்ள அனுகூலம் மிக அதிகம், ஒரு விஷயத்தை எடுத்துக்கொள்வோம் "கதாநாயகன் அந்த விஷயத்தைக் கேட்டதும் மிகவும் சோகித்துப் போனான். அவன் முகம் கனிவு கொடுத்து வாட்டமடைந்தது" என்று கதையில் ஒரு பகுதி வருவதாக வைத்துக்கொள்வோம். 'கதாநாயகன் இங்கு உட்கார வேண்டியது; மூஞ்சியை 'உம்'மென்று தொங்கப்போட்டுக் கொள்ள வேடியது' என்று டைரக்டர் தமது 'ஷூட்டிங் ஸ்கிரிப்ட்'டில் குறித்துவிடலாம். நடிகரும் தமது முழுத் திறமையையும் காட்டி நடிக்கலாம் ஆனால் காமிராக்காரர் இந்த இடத்தில் தமது சொந்த யோசனையை உபயோகப்படுத்தாதிருந்தால் கதையின் அபிப்பிராயத்தின் முழு வேகத்தை படத்தில் கொண்டு வரமுடியாது.

நடிகரின் முகத்தில் ஸ்டுடியோ விளக்கின் வெளிச்சம் எவ்வளவு தூரம் விழவேண்டும். நடிகர் முகத்தை வருத்தக் குறி தோன்றும்படி 'மிருதுவாகத் தெரியும்படி செய்ய எந்தமாதிரி 'வடிக்கட்டி'யை காமிரா கண்ணாடியில் மூடவேண்டும் என்பதையெல்லாம் தகுந்த யோசனையுடன் காமிராக்காரர் செய்யவேண்டும். இதற்கு 'மூட் லைட்டிங்' என்று ஆங்கிலத்தில் சொல்கிறார்கள் 'மூட்' என்றால் மனோநிலை 'லைட்டிங்' என்றால் வெளிச்சம் போடுவது நடிகரின் மனோ நிலைக்குத் தகுந்த வெளிச்சத்தை அவர் முகத்தில் போட்டு, அந்த வெளிச்சமும் பூராவாக காமிராவுக்குள் நுழையாதபடி காமிராக் கண்ணாடிக்கு நாம் கூலிங் கிளாஸ் போடுவதுபோல் ஒரு வடிக்கட்டியைப்போட்டு வெளிச்சத்தை சிறிது மங்கலாக்கி மழுப்பி படமெடுத்தால் கதையின் முழு வேகமும் முழு உணர்ச்சியும் படத்தில் பிரதிபலிக்கும் இப்பொழுது சொல்லுங்கள் காமிராக்காரர்களுக்கு கதை தெரியவேண்டுமா வேண்டாமா! கதையைப் பூராவும் தெரிந்துகொண்டு காமிராக்காரர் படம் பிடிப்பதில் அனுகூலங்கள் பல உண்டு கதாபாத்திரங்களின் போக்கையும் கதையின் ரஸங்களையும் அவர் அனுபவிப்பதால் 'லைடிங்' மூலம் அவர் கதையை எவ்வளவோ மடங்கு அதிகமாக சோபிக்கச் செய்யலாம்.

'மாண்டேஜ்' என்ற ஒரு முறையைப்பற்றி போன கட்டுரையில் பிரஸ்தாபித்திருக்கிறேன். கதாநாயகனுக்குப் பழய நினைவுகள் வந்தால் படம் பிடிக்கும் முறையைப்பற்றி லேசாகக் குறிப்பிட்டிருந்தேன். அந்தப் பழைய நினைவுகளைப் படத்தில் கொண்டுவந்து காட்டுவதில் காமிராக்காரருக்கு இருக்கும் பொறுப்பைச் சொல்லி முடியாது. ஒழுங்காக எடுக்கப்படாத 'மாண்டேஜை'ப் பார்க்கச் சகிக்காது 'கதாநாயகன் தான் கதா நாயகியுடன் விளையாடிய நாட்களை எண்ணுகிறான் என்று கதையிருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். காமிராக்காரர் முதலில் கதாநாயகன் முக மண்டலத்தை மட்டும் பெரிதாக 'மாஸ்டர் பாஸி

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]

ஆந்திர, கன்னடப் பிரதேசங்களில் சுமார் 16 தியேட்டர்களில் ஓடும் 'ரஞ்சித் மூவிடோன் தயாரிப்பான 'ஜெய் ஹனுமான்' என்ற படத்தில் இந்தமாதிரி அற்புதக் காட்சிகள் பல இருக்கின்றன.

சினிமாவும் காமிராமானும்

[முன் பக்கத் தொடர்ச்சி]

டிவ்' என்ற விசேஷ பிலிமில் படம் எடுக்கிறார். முகமண்டலத்தை எவ்வளவு தூரம எடுக்கவேண்டுமா தெரியுமா? பழய நினைவுகளை எவ்வளவு தூரம் படத்தில் காட்ட வேண்டுமோ, அவ்வளவு அடிகளே இந்த முகமண்டலத்தையும் போட்டோ எடுக்கவேண்டும். முகமண்டலத்தை அப்படி போட்டோ எடுக்குமபோது அதில் காட்ட வேண்டிய உணர்ச்சிகளை நடிகர் காட்டுவார். இப்படி எடுக்கப்பட்ட இந்த பிலிமிலிருந்து 'ட்யூப்' என்ற ஒரு படம் தயாரிக்கப்படுகிறது.

'ட்யூப்' என்ற வார்த்தை ஆங்கிலத்திலுள்ள 'ட்யூப்ளிகேட்' என்ற வார்த்தையின் சினிமாச் சுருக்கம். ட்யூப்ளிகேட்' செய்வதென்றால் இரட்டையாக்குவது என்று அர்த்தம். இந்த மாண்டேஜில் என்ன செயகிறார்களென்றால் மேலே கூறியதுபோல் எடுக்கப்பட்ட 'முகமண்டலப் படத்தையும் அதே நீளத்துக்கு வெட்டிய பழய நினைவுகளின் காட்சிகளையும் ஒன்றாக இணைத்து ஓட்டி மீண்டும் படம் எடுக்கிறார்கள் இதற்குத் தான் 'ட்யூப் நெகடிவ்' என்று பெயர். இதை திரைக்கு வர வேண்டிய 'பாஸிடிவ்' பிலிமில் அச்சிடும்போது முகமண்டலத்தில் பழய காட்சிகள் தோன்றுகின்றன இதற்குத்தான் மாண்டேஜ் என்று சொல்கிறார்கள் இதை எடுக்கும் முறையிலிருந்து காமிராக்காரருக்கு இருக்கும் கஷ்டத்தை நீங்கள் ஊகித்துக் கொள்ளலாம்.

சொந்த யோசனை இல்லாத காமிராக்காரர் படத்தை எவ்வளவோ கெடுக்க முடியும். நடிகர், நடிகைகளின் முகங்கள் எந்தப் பக்கத்திலிருந்து எடுத்தால் நன்றாய் விழும் என்பதை ஊகித்துச் செய்யவேண்டிய பொறுப்பு காமிராக்காரருடையது. சரியான வாட்டத்தில் காமிராவை வைத்து படமெடுக்காவிட்டால் அழகான நடிகையைக்கூட அவலட்சணமாகக் காட்டலாம்.

இவ்வளவு பொல்லாத காமிராககாரர் கெட்டிக்காரராயிருந்தால்மட்டும் போதாது, ரொம்ப தந்திரசாலியாயும இருக்க வேண்டும். இல்லாவிட்டால் களிமண் தானா யானையாகுமா? பொடலங்காய் தானாக நறுக்கிகொள்ளுமா? இந்த மாதிரி செப்பிடு வித்தைகளை யெல்லாம் யார் செய்வது? பாண்டுரங்கனும் ருக்மிணியும் கை காட்டிவிட்டால் போதுமா?

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]



'நல்லதம்பி' ஸகஸ்ரநாமம் பார்க்கிற பார்வையிலிருந்து பானுமதியின் அழகைப்பற்றி ஆயிரம் தடவை வர்ணித்தாலும் போதாதென்று அபிப்பிராயப்படுவதாகத் தெரிகிறது

சினிமாவும் காமிராமானும்

[முன் பக்கத் தொடர்ச்சி]

காமிராக்காரர் தம்புவின் தயவில்லாமல் மண்ணோ, புடலங்காயோ, கத்தரிக்காயோ ஒரு அங்குலங்கூட நகர்ந்திருக்கமுடியாது. ஆகையால் 'என்னய்யா காமிராவுமாச்சு, கத்தரிக்காயுமாச்சு' என்று நாம் புறக்கணிப்பதற்கில்லை.

'சக்ரதாரி' மிகச் சமீபத்தில் வந்த படமாதலாலும் அதிலிருக்கும் தந்திர வேலைகளை ஜனங்கள் பெரிதும் அனுபவிப்பதாலும் அதை எப்படி காமிராக்காரர் எடுத்திருக்கிறார் என்பதைச் சொல்கிறேன். முதலில் சக்கிரம் தானே சுழன்று மண் தானாகவே பானையாவது எப்படி என்று பார்ப்போம். முதலில் காமிராக்காரர் ஒரு சிறு வேலை செய்திருக்கிறார். லைட் வெளிச்சம் உண்டைக் களிமண் மீதும் கீழுள்ள சக்கிரத்தின் மீதும் விழும்படி செய்கிறார். இரண்டுக்கும் இடையேயுள்ள பாகத்தில் இருட்டடிக்கிறது. இந்த மாதிரி லைட் போட்ட பின்பு காமிரா லென்ஸின் (காமிராவின் முனையிலிருக்கும் கண்ணாடி) மேற்பாகியை மறைத்துவிட்டு சக்கரத்தை சுற்றிவிட்டு அதை மாத்திரம் படமெடுக்கிறார் பிறகு லென்ஸின் கீழ்ப்பாகத்தை மறைத்துவிட்டு சக்கிரத்தின் மேல் பாகத்தில் ஒரு உண்டை களிமண் வைக்கப்படும். பிறகு சக்கிரம் சுற்றப்பட்டு படம் எடுக்கப்படும் இதனால் அந்த மண் சுற்றுவது மட்டும் தெரியும். பிறகு குயவரை விட்டு பாண்டத்தில் ஒரு அங்குல உயரம் செய்யச் சொல்வார்கள். அப்படிச் செய்யப்பட்ட ஒரு அங்குலம் மட்டும் சுற்றும்போது படம் எடுக்கப்படுகிறது. இப்படிச் சிறிதுச் சிறிதாக பானையைச்செய்து நிறுத்தி நிறுத்தி சக்கிரத்தை சுற்றவிட்டு ஒவ்வொரு அங்குலம் பானையாகப் படம் எடுக்கப்படுகிறது இவ்விதம் படம் எடுக்கப்பட்ட பிறகு நீங்கள் பார்த்தால் களிமண் தானாகப் பானையாவதாகத் தெரியும. இடையே காமிரா நிற்கும் இடங்கள் அந்த வேகத்தில் தெரிவதில்லை.

இந்தப் பானை செய்வதற்கு மாத்திரம் காமிராமான் தம்புவுக்கு $\frac{1}{2}$-நாள் பிடித்திருக்கிறது. புடலங்காய் நறுக்க 4 மணி நேரமும், வாழைககாய். கத்தரிக்காய் நறுக்க 3மணிநேரமும் பிடித்திருக்கிறது. புடலங்காயை ஒவ்வொரு அங்குலமாக நகர்த்திபோட்டோ எடுத்து தானாக ஓடி நறுக்கிக் கொள்வதுபோல் காட்டுவது எவ்வளவு சிரமம் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். புடலங்காயை ஒரு அங்குலம் அரிவாள்மணையை நோக்கி நகர்த்தி காமிராவை ஒருமுறை சுற்றவேண்டும். மறுபடியும் ஒரு அங்குலம் நகர்த்தி இன்னொரு சுற்று. இப்படி படமெடுத்து புடலங்காயை அரிவாள்மணைகிட்டே கொண்டுவந்து ஒரு அங்குலம் நறுக்கி அரிவாள்மணையில் நிற்க வைக்கவேண்டும். ஒரு சுற்று காமிராவை சுற்றி படமெடுக்க வேண்டும். இப்படியே சிறிது சிறிதாக் புடலங்காயை நறுக்கிய பிறகு மீண்டும் அது பின்னுக்கு வாங்கி ஒன்றாய்ச் சேர வேணடுமே, அதற்காக ஒரு அங்குலம் புடலங்காய் பிளவுகளை பின்னுக்கு வாங்கி ஒரு ஊசியைப் போட்டு குத்தி ஒன்றாகத் தெரிவதுபோல் படமெடுக்க வேண்டும். மறுபடியும் இன்னொரு அங்குலம் பின்னுக்குக் கொண்டுவந்து இன்னொரு ஊசி குத்தி இன்னொரு படம் எடுக்கவேண்டும் இப்படிச் சிறிது சிறிதாகப் பின் வாங்கி ஊசி குத்தி ஒன்றாககி எடுக்கப்படும் புடலங்காய் ஒன்று பட்ட மாதிரி தெரிகிறது. பின்பு அதை பக்க வாட்டில் திருப்பி முதல் குண்டூசி இருக்குமிடத்தில் நறுக்கி நறுககப்பட்ட துணடுகளுடன் புடலங்காய் அரிவாள்மணை முதலிய எல்லாமே சேர்த்து படம் எடுக்கப்படுகிறது இம மாதிரி சிறிது சிறிதாகத் துண்டிக்கப்படும் புடலங்காய் தானாக நறுக்கிக்கொள்வதுபோல் படத்தில் தெரிகிறது காமிராக்காரர் இவ்வளவு சிரமப்பட்டால்தான் நீங்கள் தியேட்டரில் உட்கார்ந்து சபாஷ்போடலாம்.

ஒரு படத்தை வெற்றிகரமாகக் கொண்டுவரும் பொறுப்பில் பெரும்பாகம் காமிராக்காரருடையது. காமிராக்காரர் மூளையில் சதா படம ஓடிககொண்டிருந்தால் தான் படத்தை அவர் சரியாக எடுத்துககொடுப்பதும் சாத்தியம். கதைப் போக்கு, லைட்டிங் முறைகள் இரண்டையும்நன்றாகஅறிந்து முன்யோசனையுடன் காமிராக்காரர் வேலை செய்யாவிட்டால் படம் படமாக வெளிவருவது பிரம்மப் பிரயத்தினமாகிவிடும்.

கர்பரக்ஷா மாத்திரை

பெண்கள் கர்ப காலங்களில் இதை சாப்பிட்டுவந்தால் எவ்வித கோளாறுமின்றி சுகப்பிரசவமாகும். கர்பச் சிதைவைத்தடுக்கும். நூறு மாத்திரை ரூ. 6—4—0. ஐம்பது மாத்திரை ரூ. 3—8—0.

★

தசமூலாரிஷ்டம்

பிரசவமான பிறகு உடம்பைத் தேற்றிக்கொள்ள இதுபோல் கைகண்ட ஔஷதம் வேறு கிடையாது. ஹிருதய பலவீனத்திற்கும், நரம்புத் தளர்ச்சிக்கும் ஆண்களும் உட்கொண்டால் பரிபூர்ண குணம் கிடைக்கும். 24 அவுன்ஸ் புட்டி ரூ. 6—0—0.

விவரங்களுக்கு:—

ஆரிய வைத்தியன் பி. ஜி. வாரியரின்

ஆரிய வைத்தியாசிரமம், குமரன் வீதி, திருப்பூர்.

பிராஞ்சு : பல்லடம்.

Estd: 1920

சேலம் மூன்றுதாமரை

பீடிகளை உபயோகித்து சந்தோஷமடையுங்கள்

S.A.H

Rgd. No. 2221.

Prop: S. அஹமத் உசேன்,

கோட்டை, சேலம். S.I.R.

"ரோட்டரி பேப்பர் கட்டிங் மிஷின்கள்"

சுதேசிய தயாரிப்பு.



மின்சார சக்தியினுலும், கையினுலும் ஓட்டக்கூடியது ஒவ்வொரு அச்சகத்துக்கும் பைண்டிங் ஷாப்புகளுக்கும் இன்றியமையாதது சுத்தமானதும் உறுதியுமான வேலைப்பாடு. நமபிக்கையாகவும் நீடித்தும் உழைக்கக்கூடியது.

2 தினுசுகளில் எப்போதும் விற்பனைக்குத் தயார்

கிடைக்கும் சைஸ்கள் : 18" X 24" விலை விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதுக

SRI RAMAKRISHNA MILL STORES,

Mill Stores & Machinery Merchants.

6-B Errabalu Chetty Street. G.T., MADRAS.

பலே பல்!

'சுதி'

இது நாள்வரை. எதைத் துச்சமாக நினைத்து வந்தேனே, அதுவே உச்ச நிலையில என்னைப் படாத பாடு படுத்துகிறது. மனுஷனுகப் பிறந்தவர்களுககு சாவு எப்படி பிறப்புரிமையோ, அது போல பல் வலியும் என்றுவது காதல் மாதிரி கிடீரென்று வந்தே தீரும். இன்றில்லா விட்டால் நாளை, அதற்கு மறுநாள். காதலும் இன்சூரன்ஸ் ஏஜண்டும் தவிர்க்க முடியாத பொருள்கள். இந்த இரண்டோடு, மூன்றுவதாகப் பல் வலியைக் கொள்க! கொல்க!! வெல்க!!!

எனக்கு இந்தச் சனி இரண்டு மாதத்திற்குமுன் வந்து, ஒரு பல் வேலை செய்ய மறுத்தது கூச்சம என்றுல் உங்கள் வீடடுக் கூச்சம் எங்கள் வீட்டுக் கூச்சமன்று. கூச்சத்தோடு வலி வேறு. இதனுல் முக்கிய உபத்திரவமும் ஆபத்தும் சாப்பாட்டுககுத்தான் நேரிடுகிறது. சாப்பாடு வேண்டாம். துளி தண்ணீர் இறக்க விடுகிறதா?

தாகம் எடுத்தால், வாயில் தண்ணீரைக் குதப்பிக் குதப்பிக் குடிப்பது சுபாவம். எனககு சுவாரஸ்யம். அந்த சுகமே தனி. ஜில்லென்று இருக்கிறது. தண்ணீர் பட்டதும் ஆயிரம் நெருப்பூசிகளைக் குத்துவதுபோல ஈறுகள் அலறும். காதல் கொண்டவர்களுக்கு மென் காற்றும், குளிர் நிலவும் தீப் பந்தமாகச் சுடும என்கிறுர்களே அந்த ரீதியில் பல் வலிக்காரனுக்கு குளிர்ச்சி ஒரு முககியமான எமன் நாக்கைச் சுழற்றிச் சுழற்றி தண்ணீரைக் குடிகக முடியாமல வாயைத் திறந்து நேரடியாக வயிற்றுக்குள் கொட்டிக் கொள்ளும் வித்தையை என்னுல் செய்யமுடியாது!

பல் வலி வந்ததும், நேரடியாக டாக்டரே எனது வீட்டுக்கு வந்து விட்டார் (என் நண்பர்களின் நண்பர் மூலம் கேள்விப்படடுத் தாஞக வநது சேர்ந்தார்) இவர் பல்லின் யமனல்ல, அசல் பத்தரை மாற்றுத் தங்கம என்று சொல்லும்படி நடந்துகொண்டார். பல்லைப் பிடுங்கக்கூடாதென்று சொல்லவே எனக்கு ஆறுதலாக இருந்தது. (வைத்தியர்கள் சர்க்கரை பொதிந்து கசப்பு மருந்து கொடுககிறவர்கள் என்பதை எப்படி மறந்தேன்) எனக்கு ஒருபொடியைச் கொடுத்து தண்ணீரில் போட்டு "முக முக முக கழ கழ கழ" என வாயில் உழட்டிக் கொண்டிருந்து கொப்புளிக்கச் சொன்னுர். மகானுபாவன் நல்லபடியாக இருக்கட்டும் என்று ஆசிர்வாதம் செய்துகொண்டே முக கழ செய்தேன்.

மருந்துத் தண்ணீரைக் கொப்புளித்தபோது என் பல்லொன்று (அதாவது நோயற்ற செல்வம் வெண்முத்து) வெளியே வந்து விழுந்தது. சரி இனிமேல் பல் டாக்டர்களிடம் நம்பிக்கையில்லை யென்று தீர்மானம் செய்தேன்

"...நேரடியாக வயிற்றுக்குள்..."

நமது பெண்கள் எத்தனையோ துறைகளில் முன்னேற்றம அடைகிறுர்களே. பல் டாக்டராக எத்தனைபேர் வந்துள்ளார்கள் என்ற சமூகக் கவலை என்னைப் பற்றிக் கொண்டது. பல்லைப் பிடுங்க பருந்தாட்டம் ஆட்டுவதில் பெண்கள் புகழ்பெற்றவர்கள் அப்படி இருநதும் எனது ஜில்லாவில் ஒரு பல்-வைத்தினி இல்லையே.

பல் டாக்டர்களாக வருபவர்கள் அவ்வளவு பெரும புகழும் அடைய முடிவதில்லை. இவர்தான் "எமது குடும்ப வைத்தியர்" என்று நமக்குப் பெருமிதத்தோடு அறிமுகம் செய்வதைபபோல பல் வைத்தியரை யாராவது ஒரு பொக்கை வாயர் "இவர் எங்கள் குடும்பத்தில்—பல் வைத்தியர்" என்று சொல்லுகிறுரா? இல்லை

பல் இல்லாவிட்டால் வாழ்க்கையே பொக்கையாகி விடுகிறது! பல் வலி வந்தால் முகக் கோணல் முற்றும் கோணலாக்கி வாழ்வையே கெடுக்கிறது. யுத்த களத்திலே பல்லைப் பிடுங்கிவிட்டு, தாங்கள் சிப்பாய்களுக்குத் தகுதியில்லையென்பதை நிரூபித்து தப்பியோடுவது உண்டாம். பல்லினுல் எத்தனையோ உபயோகங்கள். முடிந்த கயிற்றை அவிழ்க்க, காகித உரையை கிழிக்க இப்படி. சிப்பாய்க்கு பல் ஒரு முக்கிய ஆயுதம். பல் போனுல் சொல் மட்டுமல்ல, சிபபாய் உத்யோகமும் போச்சு......என்பதை ரெண்டாம் உலக மகா யுத்தத்தில் படித்திருக்கிறேன்!

பல்லின் உபயோகங்கள் பல. கடித்துத் தின்பதிலுள்ள ருசி நறுக்கித் தின்பதில் இல்லையென சிறு பிராயத்தில் அறிந்த உண்மை. நம்முடைய பாட்டனுர்

கள், முப்பாட்டனுர்கள் பல் டாக்டரைப் பார்த்ததில்லை. அவர்கள் பல்லினுலேயே தேங்காய் உறிக்க முடியும் என்று செய்து காட்டுவார்கள். பல்லின் அவசியத்தையும், சுத்தமாக வைத்துக்கொள்ளும் முறையையும், பற்பசை நிபுணர்கள் பிரஷ்வாலாக்கள் விளம்பர மூலம் பத்திரிகைகளில் பிரகடனம் செய்கிருர்கள். நம்முடைய பணத்தின்—பல்லின்—மீது அவ்வளவு மோகம்! நாகரீக மங்கையர் பல்வித கோணங்களில் புன்னகை தவழ வெண்முத்துப் பற்களை காட்டி 'நீங்களும் இப்படிப் பல் துலக்குங்கள்' என்கிருர்கள்.

நானும் எத்தனை எத்தனையோ பசை, பொடிகள் தேய்த்துப் பார்த்தேன். என் பற்கள் சினிமா ராணிகள் பற்களைப்போல ஆகவே இல்லை. நிஜப்பல்லாகவே இருக்கின்றன.

பார்த்தால் சைக்கிளின் ஒட்டும் 'ரப்பர் ஸொல்யூஷன்'! அன்று முதல் பற்பசைக்கு முழுக்குப் போட்டவன் போட்டவனே.

'பல்லுக்கு எடுத்தது, ஏற்றது வேப்பங்குச்சிதான். அதைத் தேய்த்தால் ஒரு பல்கூட ஆடாது அசையாது.'

இப்படிப் பட்டிக்காட்டுப் பல் வாணர்கள் அல்லது பழைமை மோகனர்கள் சொல்வதை அறிவேன். வேப்பங்குச்சியை என்னிடம் சொல்லிப் பயனில்லை; நான் தான் வாயில் பல் முளைத்தநாளாக வேப்பமரத்தை மொட்டையடிக்கிறவன் ஆச்சே! ஓடிக்கொண்டிருக்கும் ரயிலுக்குள்ளிருந்தபடியே ஸ்டேஷனில் நிற்கும் வேப்பங்குச்சிகளை ஒடிப்பேன் மரமே வேரோடு பதறிக்கொண்டு பின்னுல் ஓடிவரும். வேப்பங்குச்சி எனக்கு **உயிர்; நான்** வேம்புக்கு எமன்!

பற்பொடிகளில் **எத்தனை** எத்தனை வகை. மணம், குணம், காரம் இவைகளுக்குள்ளாக அனந்த கோடி வித்தியாசங்கள். உப்பு முதல் கற்பூரம் வரை சகல சத குப்பையையும் பற்பொடி என்ற நாமத்திற்குள் அடக்கி விடுகிருர்கள். அகற்குள்ள பெருமையும் அருமையும் மேலே உள்ள பேப்பர், டப்பா, சிமிழ் வாசனை இவை பற்றித்தானே தவிர்த்து, பற்பொடிக்குத் தேவை வெகு சொற்பம்.

கொஞ்சம் உப்பு மண் பொடிப் பொடியான கண்ணுடித் தூள்..... மற்றவை வியாபார ரகஸ்யம்!



பற்பசைகளைக் கண்டாலே எனக்கு வெறுப்பு அதுக்கு முக்கிய காரணம்! பற்பசையை அந்த தகரத்துக்குள்ளேயே என்னுல் வைக்க முடியாது. மண்ணுளிப் பாம்பாக பசை வந்து விட்டால் அதை, பணவீக்கத்தைப் போல அடக்க முடியாது. இப்படி பசை வீணுவதோடு, ஒரு சமயம் இருட்டிலே காலை நேரத்து ரயிலுக்குப் போகும் அவசரத்தில் பல்லை விள்க்க ஆரம்பித்து உதட்டோடு உதடு ஒட்டிக்கொண்டு வாயே திறக்க முடியவில்லை. வெளிச்சத்தில் வந்து

வேம்புக்கு எமனுக இருந்தும் என் பல்லுக்கு நோய் வந்து விட்டது. முட்டைகோஸ் தின்பதால் பல்லுக்கு (ஆலும் வேலும் தவிர்த்து) உறுதி தருகிற பொருள் என்பதை அறிந்து, மூட்டை மூட்டையாக 'அபேஸ்' செய்தேன். பல்களில் பலவிதம் உள. யானைப் பல், அரிசிப் பல், மாதுளை முத்தன பல், மல்லிகை மொக்கென விழும் பல் என இருக்கின்றன. 32 பல்லுக்கு இந்தக் கஷ்டமும் பொருள் செலவும் செய்கிரும், 30 ஆயிரம பல்லுள்ள

ஆஸ்திரேலிய நத்தையும், மிக்க நீளமுள்ள மெக்ஸிகோ யானையும் பல்லைப் பாதுகாக்க ஏதாவது செய்கின்றனவா? நமது பல்லைக் கொண்டு ரேஷன் அரிசியைக் கடிக்க முடியாது திணறுகிறோம்; இந்த உடும்பு தனது பல்லைக் கொண்டு இரும்பையே சுவைக்குமாம். பல், பலே!

கவிகள் வாயிலாக பல்லைப்பற்றி நமது காவியங்கள் என்ன சொல்லுகின்றன எனப் படித்தேன். நூல் எவ்வளவுக்கெவ்வளவு பழமை வாய்ந்ததோ அவ்வளவுக்கவ்வளவு பல்லுக்குக் கேடு என்றறிந்தேன். இற்றை நாளிலும், பல்கலைப் பயின்றோர் என்று தீய்த்துப் பல்லுடைக்கும் எழுத்தாளர் குழாம், நம்மிடையே இருக்கத்தான் செய்கின்றனர். கம்பன், ஒட்டக்கூத்தன், புகழேந்தி முதல் நேற்றைய பாரதி வரை, பல் பற்றிய வர்ணனைகளைப் பார்த்தேன்- சிலப்பதிகாரமும், மணி மேகலையும் பார்த்தாயிற்று. அங்கங்கே நிலவுகள் மாடங்களில் தெரிவதை வர்ணிப்பதுபோல பல்லையும் வர்ணித்தார்கள். கவிகளிடம் பல்லைக் காட்டாத கதா பாத்திரங்கள் ஒன்று கூட எந்தக் காவியத்திலும் இல்லை! பதிற்றுப் பத்து, ஐங்குறு நூறு, நெடுநெல் வாடை ......பார்க்கப் பார்க்க, பல்லெல்லாம் கூசின: நடுங்கின; வேரோடு விழ முயற்சி செய்தன....

நான் இப்படி இலக்கியப் பற்களை பதம் பார்க்கிற சமயம் பல் வைத்தியர் என் பல்லைப் பதம் பார்க்க அழைத்தார். போய்ச் சேர்ந்தேன். 'நாளை பல்லை எடுக்கலாம்; வருவீர்களா?' என்றார். ஆகா, என்று விட்டு வந்து விட்டேன். அவர் மாடியிலிருந்து பல் வைத்தியமே மாடி வைத்தியந்தான். இறங்க இறங்க என் வலியும் இறங்கு திசையில் ஓடிக் கொண்டிருந்தது. பல் வலியே இல்லாத மாதிரி எனக்குப் பட்டது.

ஆதிநாளில் எப்படி பல் வைத்தியம் செய்தார்கள் என்று டாக்டரிடம் கேட்டபோது 'பல் வைத்தியத்தை 13-ம் நூற்றாண்டில் பிரான்சு நாட்டில் கருமான்கள் செய்து வந்தார்கள். அதாவது' கெட்டியான குறடை பல்லில் கொடுத்து அந்தக் குறடை ஒரு கயிற்றோடு சேர்த்துக கட்டிவிடுவாாகள். பழுக்கக் காய்ந்த கடப்பாறையை தக தகவென கூர்படுத்திக்கொண்டு தாக்குவதற்கு ஒருவன் ஓடி வருவானும். இதற்குப் பயந்து பல்வலியர் ஓட முற்பட்டால்......பல், பஸ்மம் ஆகி பல் பிடுங்கவேண்டிய ஆசாமி ஓடியே விடுவானும்...ஓடும்போது பல்லைக் குறடு பிடுங்குவது வெள்ளிடைமலை! இந்த முறையிலிருந்துதான் தற்கால பல் வைத்தியம் முன்னேறி இருக்கிறது. பல் வைத்தியத்தில் தந்தை பிரான்சு கருமான்'! என்றார் எனது பல்வைத்தியர்.

ஆண்டவனே புத்த பகவானே, நீ பாக்கியசாலி. இந்தக் கதையை புத்த பகவான் கேட்டிருந்தால்?

கண்டியிலே இப்போது அவருடைய பல்லுக்கு கோவில் இருக்குமா? இலங்கையின் நடுநாயகமாக உள்ள கண்டிக் குளத்தருகிலே பற்கோயில் காணவேண்டிய காட்சி. அந்தப் பல்லை, அல்லும் பகலும் காப்பாற்ற காவலாளர்கள் இருக்கிறார்கள். மணியின் வடிவங்கொண்ட பொன் பேழையில் வைத்து ஆடம்பரத்தோடு வருஷத்தில் ஒருநாள் பன்னூட்டு மக்கள் குழுமியுள்ள வீதியிலே, தரிசனத்திற்காக பவனி கொண்டு போகிறார்கள். இது ஆயிரமாயிரம் வருஷங்களாக நடைபெறும் மஹோத்சவம். நாற்பது யானைகள், பொன்னும் வெள்ளியும் போர்த்திய முகப்படாம் அணிந்து வரிசை வாரியாகச் செல்லுமாம். ஒரு கம்பீரமான யானை இப் பொன் பேழையைச் சுமந்து செல்ல தீவர்த்திகள் வானளாவ சுடர்விடும. சங்கங்கள் ஒலிக்க, முரசங்கள் கொட்ட, தூப தீபங்கள் தாங்கி புத்தரின் பல்லை—பௌத்தத்தின் ஒளியை எடுத்துச் செல்வதை நினைக்கும்போது பல்தான் மனித அங்கங்களில் அஹிம்ஸா மூர்த்தியின் அஸ்தியைப்போல் பெருமை வாய்ந்தது என்ற முடிவுக்கு வருகிறேன்.

ஆனாலும் பல்—வைத்தியரிடம் போவதற்குப் பயமாக இருக்கிறதே. புத்தம் சரணம் கச்சாமி! சங்கம் சரணம் கச்சாமி! என்று உச்சாடனம் செய்தவன் மனைவி மக்களைத் துறந்து புறப்பட்ட புத்தரைபபோலவே, பல்வைத்தியரிடமிருந்து நானும துறவு கொள்ளுகிறேன்!

பாடகர்:—ஏன் தலைமேலே அடிச்சக்கறேள், பாட்டு சகிக்கலையோ?

ரஸிகர்:—சே, சே! வித்தியாசமா நினைச்சிக்காதேங்கோ! தலைமேலே தாளம் போட்டுண்டிருந்தேன்..."

மெய்விளங்கிய அன்பர்கள்



பெரியபுராணப் பூங்கோயிலில்

பி.ஸ்ரீ.

நெருப்பிலோ ஞானநெருப்பிலோ முங்கி முழுகி நந்தனர் நந்த மாமுனி ஆவதற்குக் காரணமான பக்தி-அனுபவம் எத்தகைய உச்ச நிலையில் இருந்திருக்க வேண்டும்! ஏதோ விட்ட குறை வந்து தொட்டது போல்,

மெய்ப்பரிவு சிவன் கழற்கே
விளைத்த உணர்வொடும் வந்தார்-

அதாவது ஓதாதுணர்ந்த சிவஞானியாகத் தோன்றித் திகழ்ந்தார் சேரியிலே. ஓட்டியும் ஓடாமலும்—என்பர் சேக்கிழார் கோயில்களின் வாசற்புறத்திற்கு எதிரே நின்று கசிந்துருகிக் கண்கள் நீர் சோர மெய்ம் மறந்து ஆடுவதும் பாடுவதுமாய் நெஞ்சிலே பக்திப்பயிரை வளர்த்து வந்தார்' என்றும் சேக்கிழார் கூறியுள்ளார்

'நாளைப்போவேன் நாளைப்போவேன்' என்பதாகச் சிதம்பரப் பித்தம் முறுகி வளர்வதற்கு முன்பே திருப்புன் கூரில் நந்திவிலகச் சிவலோகநாதன் நந்தனருக்குக் காட்சி வழங்கியதாகச் சேக்கிழார் கூறுவதால், அப்போதே பக்தி வெங்கனலில் வெந்து ஆயிரம் மாற்றுத் தங்கமாகி விட்டது நந்தனரின் அருமையான ஞான உருவம் என்று ஊகிக்கலாம்

சிறப்பியல்பு

சிதம்பரம் என்ற காதல் உணர்வு வந்துதித்து ஒழியாது நிற்க, இவர் அந்த உணர்வுடன் இரண்டறக் கலந்து நின்று, 'நாளைப்போவாராகி விட்டாரே இத்தகைய பக்தி அனுபவம்தான் சாமான்யமா? 'இன்று இருள் நிறைந்திருக்கிறது சோகம் அதிகமாயிருக்கிறது; இன்று வழி துறை தெரியவில்லை ஆனால் நாளை வானம் தெளிவு பெறும்; சூரியன் முகம் காட்டுவான்; நாமும் கவலையை உதறித் தள்ளி உத்ஸாகமாக முன்னேறுவோம்' என்ற மனநிலை தனி மனிதர்களின் வாழ்க்கையில் தோன்றுவதோடு சமுதாய வாழ்க்கையிலும் தோன்றுவதுண்டு—நமது தேசிய சரித்திரத்தில் இடை

44
நந்தனரின் பக்தி - அனுபவம்

★

யிடையே தோன்றியதுண்டு இம் மனநிலையைத் திருநாளைப் போவார்' என்ற நந்தனரின் பக்தியனுபவங்களின் சிறப்பியல்பு எனலாம் இதனை நன்குணர்ந்துதான் 'நாளைப் போவானுக்கும் அடியேன்' என்று 'தம்பிரான் தோழ'ரான சுந்தரமூர்த்தி நாயனர் பாடுகிறார் என்று தோன்றுகிறது.

இத்தகைய பக்தியனுபவமே போதும், புன்புலைபோய் மூவாயிரவர் கைகூப்ப முனியாதம அருள் பெறுவதற்கு என்று 'தமிழ்ச்சைவ உலகின் வியாசரான நம்பியாண்டார் நம்பியும் நம்புவதுபோலத் தோன்றுகிறது. இத்தகைய பக்தி—அனுபவங்கள் வழிநூலான சரித்திரக் கீர்த்தனையில் தமக்குரிய முழு வளர்ச்சியும் எழிலும் அடைந்திருக்கின்றன என்பது என் அபிப்பிராயம்

நந்தனருடைய பக்தியனுபவங்களை இந்தக் கீர்த்தனை ஆசிரியர் எத்தனை வகையான 'பேசும் பட'க்காட்சிகளில் பிரதிபலிக்கச் செய்கின்றார்! இவற்றில் அதியற்புதமானது. நந்தனரின் உன்னதநிலையை உள்ளபடி அறிந்துகொள்ளும் ஆற்றல் பெறாத சேரி வாசிகள் இவர்மீது கோபங்கொண்டு எசமானனிடம் குற்றம் சொல்லத் தொடங்கும் காட்சி!

குற்றப் பத்திரிகையில் ஹாஸ்யமும் பக்தியும்

சேரி வாசிகள் தூரத்திலே நின்று கூவி அழைத்தது கேட்டு ஆண்டை தன் மாளிகையைச் சார்ந்த புறக்கடைத் தோட்டத்தில் வந்திருந்து கொண்டு, 'வந்த சேதி என்ன?' என்று கேட்பதாக வைத்துக்கொள்ளலாம் அப்படி உத்தரவுகிடைத்தபின்,

ஐயே! ஒரு சேதிகேளும்—உங்கள்
அடிமைக்காரப் பயல்
நடத்தையெல்லாம்
வரவரக் கெட்டுப் போச்சு

என்று தொடங்குகிறது குற்றப் பத்திரிகை.

........சேரியில்
வழக்கம் இல்லாதபடி
பழக்கம் இட்டான்;
குடி இருக்கமாட்டோம்!

என்று மிராசுதாரனையும் பயமுறுத்திக்கொண்டு பேசத் தொடங்குகிறாகள்

நாளைப் போவார் சிவநாம சங்கீர்த்தனம் செய்து செய்துகொண்டிருப்பார் அல்லவா ?

நாளைப் போவேன், நாளைப் போவேன்' என்று சொல்லிக்கொண்டிருப்பாரல்லவா? இது குறித்துத்தான் ......—எப்போதும்

கூக்குரல் போடுறன் ஆக்கை
மறந்தே இருப்பான் ஒருவேளை

(ஆக்கை—உடம்பு) என்று சொல்கிறார்கள் தியானத்திலும் அமர்ந்திருப்பாரல்லவா! அதையும் சேர்த்துத்தான் 'ஆக்கை மறந்தே இருப்பான் ஒருவேளை என்கிறார்கள்

மேலும் குற்றஞ் சாட்டுகிறார்கள்.

......—பொல்லாத
ஏக்கம் அடைந்தவன்போல்
நாக்கை வளைத்துச்
சிரிப்பான் ஒருவேளை! —'தில்லைச்
சிதம்பரம்' என்று சொல்லி
மதம் பிடித்தே அழைப்பான்
ஒருவேளை!

நாளைப் போவாரின் ஆன்ம ஏக்கமும் (Spiritual Agony) ஞானபைத்தியமும் எவ்வளவு நன்றாகச் சித்திரிக்கப் படுகின்றன !

அந்தப் பைத்தியம் 'சிவனே' என்று ஒதுங்கிக் கிடக்கிறதா? அதுதான் இல்லை என்றும் பரிதாபப்படுகிறார்கள்

........—எங்களையும்
அண்ணேவா' என்று சொல்லிக்
கிண்ணாரம் கொட்டிக்
குதிப்பான் ஒரு வேளை!

'அணை கடந்து போகும் பேரின்ப வெள்ளத்தைப் பருக வாருங்கள். என்ற குதூகல அழைப்பல்லவா இந்தத் தம்பிமாருக்கு இவ்வளவு உபத்திரவமாய்க் காண்கிறது? அந்த

வாயால் சொல்லத்தான் வருகிறதா
அந்த நெஞ்சு காண்பதெல்லாம்?
குதிப்பான் ஒருவேளை
திக்குமுக்கல்
கொண்டவன்போல், எத்தையோ
கண்டவன்போல்,
களிப்பான் ஒருவேளை !

மனக்கண் கொள்ளாத காட்சிகள் அவை. அந்த அகக் களிப்பெல்லாம் இப்போது உள்ளே. உள்ளே இன்னும் உள்ளத்தின் ஆழத்திலே, போய் அடங்கி ஒடுங்கிப் போகிறது. சமாதி நிலை வந்து விடுகிறது—ராமகிருஷ்ண பரமஹம்ஸர் போன்ற பெரியோர்களை வந்தடைந்த நிர்விகல்ப சமாதி, அதுதான் சேரிபாஷையில் வருகிறது

களிப்பான் ஒருவேளை—
மரம்போல
கைஅசைத்தல் கால்அசைத்தல்
மெய்அசைத்தலும்
இருக்கா தொருவேளை!

என்று.

உபமானங்களும் உயர்வுநவிற்சியும்

நந்தனுருடைய பக்தியனுபவங்களைத் தாங்கள் கண்டபடியே பேசுகிருர்கள் சேரிவாசிகள் தங்களுக்கு விளங்காத யோக அனுபவங்களைக் குற்றம்போலச் சொல்லி வரும்போதே. தங்களுக்குத் தெரிந்த உபமானங்களை உபயோகித்து ஆண்டைக்கு விளக்க முயல்கிருர்கள்.

......—கண்டதெல்லாம்
புரட்டென்று சொல்லுவான்,
முரட்டுத்தனம்,
மன்னுரச் சாமிபோல—கிளம்பி
வாய்விட் டலறும்குரல்
ஊரெட்டுமே!

தூண்டி(ல்) மீன் அதுபோலே
துள்ளித்துள்ளித் துடிப்பான்!

சில சமயங்களில் முரட்டுத்தனமுள்ள தங்கள் மன்னுரச் சாமிபோலக் கிளம்பி அலறுகிருர் நந்தனுர் என்றும், வேறு சமயங்களில் தங்கள் தூண்டில்களில் அகப்பட்டுக் கொண்ட மீனைப்போல் துள்ளித் துள்ளித் துடிக்கிருர் என்றும், சேரிவாசிகள் கூறுவது எவ்வளவு பொருத்தமானது பாருங்கள் !

பேச்சினிடையே தங்களையும் பக்தி பண்ணும்படி நந்தனுர் ஹிம்ஸிப்பதாய்க் குற்றஞ் சாட்டுகிருர்கள்:

சிவனென்று மூன்று வாட்டி—
நாங்களும் செப்பவேணும்.
இல்லாவிடில் வப்பில் உதைப்பான்;
கோவிலுக்குப் போவோம்
என்பான்—எங்களையும் கும்பிடச்
சொல்லி, இல்லா வம்புபண்ணு
வான்; சுற்றிவரச் சொல்லி அடிப்
பான் 'சிவன்பேரைச்' சொல்லடா
சன்னதியில் 'நில்லடா' என்பான்;
சொல்லித் தொலைக்க வேணும்—
இல்லாவிடில்
சுக்குமாந் தடிகொண்டு
நோக்கிவிடுவான்!

இது என்ன காரணமோ?—
எங்களுக்கு
ஈனமா யிருக்குது,
மானம் அல்லவோ?

இந்தக் குற்றச் சாட்டில் மிகைபடக் கூறல் மட்டுமா, புனைந்துரைத்தல், கதை கற்பனைகள், கலந்திருக்கின்றன: குதூகலமாய்க் கலந்து கூத்தடிக்கின்றன

சிவசன்னிதிக்கு எதிரே
நின்று சிவன் பெயரைச்
சொல்லுவதென்ருல்,
ஈனமா யிருக்குது,
மானம் அல்லவோ ?

என்கிருர்கள் 'இப்படித் தன்மானம் பறிகொடுத்துத் தவிப்போமோ ? என்று இவர்களைக் கதற அடிப்பது எவ்வளவு நவீனமாயிருக்கறது பாருங்கள் !

ஆட்டிவைக்கும் தெய்வம்

சிவன்பேரைச் சொல்வதால் மானம் போய்விட்டதென்று சொல்லுகிறவர்கள், அப்படியெல்லாம் நந்தனுரைப் படாதபாடு படுத்துவதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கிருர்கள் முதல் முதல் நந்தனுரை ஆட்டிவைப்பது சேரித்தெய்வங்களில் ஒன்றே என்று நினைத்தார்கள்:

கறுப்பண்ண சாமிதானே ?
இருளன்,
காட்டேறியோ ? இவன்
வீட்டேறியோ ?
பாவாடைத் துரைதானே?—ரண
பத்திரகாளியோ உன்மத்த
வீரனே?

சேரித் தெய்வங்களில் மகாவிஷ்ணுவுக்குப் போட்டியாக இருக்கும் கறுப்பண்ணசாமியின் ஆவேசமோ?—என்று ஆலோசித்த பின், அந்தச் சாமியும் இல்லை, இருளனுமில்லை என்று தீர்மானித்தார்கள் ஒரு ஜமீன்தாராகத் தடபுடல் செய்து கொண்டிருக்கும் 'பாவாடைத் துரைதானே?' என்று சந்தேகப்பட்டார்கள்.

புதியதொரு தெய்வமா?

பிறகு, காட்டேறியோ? இவன் வீட்டேறியோ?' என்று சந்தேகப்பட்டார்கள். காட்டிலே குடியேறிய தெய்வம் காட்டேறி: ஒருவேளை நந்தனுர் காட்டேறிக்குப் போட்டியாக வீட்டில் ஏறிவந்த ஒரு புதிய பேயோ?—என்று சந்தேகித்து இந்தப் புதிய பேய்த்தெய்வத்தைக் குறிப்பதற்கு 'வீட்டேறி' என்ற புதுமைப் பெயரையும் சிருஷ்டித்துத் தங்கள் சேரி-அகராதியில் சேர்த்துக் கொண்டார்கள் இத்தனை தெய்வங்களுக்கும்,

பூசைகள் போட்டுப் பார்த்தோம்—
ஒன்றிலும் போவதில்லை காரியம்
ஆவதில்லையே!
என்று ஏங்கினுர்கள்.

பழைய உருத்திரனுர்தான்

கடைசியாகக்குலகுருவான வள்ளுவனைக் கலந்து ஆலோசித்தார்களாம். இவர்களைக்காட்டிலும் உலகம் தெரிந்தவன் புத்திசாலி. அவன் தெளிந்து சொன்னதையும், தெளியாதென்று சொன்னதையுந்தான் எவ்வளவு தெளிவாய்ச் சொல்லி விடுகிருர்கள்!

எங்கள்வள்ளுவரைக் கேட்டோம்—
அவர் எடுத்துச் சொன்னுர்,
இதை விடுத்துச் சொன்னுர்:
மயான உருத்திரனுர்—பிடித்து
வாட்டுதடா, இப்படி ஆட்டுதென்ருர்;
தெளியாது என்று சொன்னுர்—
ஐயே! தெளியாதுஎன்றுசொன்னுர்,

நந்தனுருடைய பரம பகதி நிலையைச் சேரி வாசிகளைக் காட்டிலும் தெளிவாகத் தெரிந்துகொண்ட வள்ளுவன். 'நந்தனுர் சிவபக்தர், அவருடைய பக்தி நீங்காது' என்பதை இவர்களுக்கு விளங்கும் பாஷையில் சொல்லித் தீர்த்துவிட்டான் 'நந்தனை ஆட்டி வைப்பது நமது சேரித் தெய்வங்களில் ஒன்றும் இல்லை வேறொரு பொல்லாத பழைய தெய்வம்: பெயர் மயான உருத்திரனுர் என்ருன் சிவபெருமானைக் குறிக்கும் 'மயான உருத்திரனுர்' என்பதைத்தான் வள்ளுவன் இப்படி நீட்டி முழக்கிச் சொன்னுன். 'அந்தத் தெய்வம் பிடித்துக்கொண்டால்.- ஐயோ!-நோய் தெளியாது' என்றுயுக்தியாகச் சொல்[illegible]ன்.

சேரிவாசிகள் தங்கள் வள்ளுவன் வாக்கை வேதவாக்காகநம்பி, அதைத் தங்கள் ஆண்டையிடம் ஒளியாது வெளியிடத் துணிந்தார்கள். துணிந்து, ஒரு முறைக்குஇரு முறையாக,

தெளியாது என்று சொன்னுர்—
ஐயே! தெளியாது என்று சொன்னுர்

என்று பிரலாபித்து நந்தனுர் மீது தங்களுக்குள்ள அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிருர்கள். சேரிக்கு நஷ்டம் ஓர் அருமையான மனிதன் ஆண்டைக்கு நஷ்டம் ஓர் அருமையான வேலைக்காரன்!—என்பது போலச் சேரி அக்கிரகாரத்துடன் சேர்ந்து துக்கம் கொண்டாடப் பார்ப்பது எவ்வளவு ரஸமாயிருக்கிறது !

* * * *

கோபால கிருஷ்ண பாரதியார் நந்தனுரின் பக்தியனுபவங்களை எவ்வளவு உசிதமாக எவ்வளவு கற்பனைத் திறமையோடு. எவ்வளவு சிருஷ்டி உத்ஸாகத்தோடு வெளியிடுகிருர் பாருங்கள்! கதா பாத்திரங்களுக்குப் பொருத்தமான முறையில், சொல்லும் பொருளும் இசையுடன் இசைந்து ஜீவவேகத்துடன் பொங்கி வருகின்றன. இல்லையா?



தேர்த்தட்டு வார்த்தை

'குகசரன்'

வாரன்

'யோகம் வெகு சுலபமாய் அறிந்து கொள்ளக்கூடிய சாதனம் பிரசாதனங்களால்பெறு தற்கு அரிதான ஆத்ம ஞானத்தையும் அதனுல் அடையலாம்' என்று கண்ணன் சொன்னபோது அர்ஜுனனுக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. கண்ணன் இதுவரை சொல்லி வந்த யோகத்தை கைக்கொண்ட ஒருவனுக்கு உயர்ந்த பலனுகிய ஆத்ம ஞானம் கிட்டியது அல்லது கிடடவில்லை என்பதை எவவாறு சோதிக்க முடியும்? ஆத்ம ஞானியின் தன்மையை அறிந்தால்தானே யோகத்தால் அபபலன் கிடைத்தது. கிடைக்கவில்லை என்று அறியலாம்? என்று ஆலோசனைக்குள்ளான அர்ஜுனன் "கண்ணு! ஆத்ம ஞானத்தால் நிலைத்த புத்தியையுடையவன் எவ்வாறிருப்பான்? உலகில் எப்படி நடந்துகொள்வான்?" என்று கேட்டான் அக்கேள்விகளுக்கு விடையாகக் கண்ணன் ஞானத்தால் நிலைத்த அறிவுடையவன் (ஸ்த்திதப் பிரஜ்ஞன்) தன்மையை விவரித்தார்

துன்பத்தில் என்றும் துளங்கா

மனத்தனுய் இன்பத்திடை ஆசை
இல்லவனுய்ப்—புன்பற்றில் அன்பு
பயம்வெகுளி அற்றவனே
ஆங்குணர்வின்
வன்பு பெறுமுனியா மற்று

(இ-ள்) துன்பத்தில்—கஷ்டங்களில். என்றும் துளங்கா மனத்தனுய்—எப்பொழுதும் சலியாத மனமுடையவனுய். இன்பத்திடை ஆசை இல்லாதவனுய்—சுகங்களில் ஆசையற்றவனுய் புன்பற்றில்—இழிந்த ஆசையால் வரும், அன்பு பயம் வெகுளி அற்றவனே—அன்பு பயம் கோபம் இல்லாதவனே, உணர்வின் வன்பு பெறு—நிலைத்த ஞானம் பெற்ற முனியாம்—முனியாகச் சொல்லப்படுகிருன் (ஆங்கு, மற்று, அசைச் சொற்கள்.)

18

ஆமையை நிகர்ப்பவன் ஆத்ம ஞானி

★

3 2 3 3
துக்கேஷு அநுத்விக்ந மநா:
2 3
ஸுகேஷு விகதஸ்ப்ருஹ:
3 4 4 2 4
வீத ராக பயக்ரோத: ஸ்திரதீ:
முநீ; உச்யதே

(இ-ள்) துக்கேஷு—துக்கங்களில், அநுத்விக்ந மநா:—கலங்காத மனமுடையவனுய். ஸுகேஷு—இன்பங்களில், விகதஸ்ப்ருஹ:—ஆசையற்று வீதராக பயக்ரோத:—அன்பு பயம் கோபம் இல்லாதவனுய், முநி -(இருக்கும்) முநி ஸ்திரதீ: உச்யதே—நிலைத்த ஞானியாகச் சொல்லப்படுகிருன்

'முனி' என்பதற்கு ஆத்மத்யானமுள்ளவன் என்று ராமானுஜர் உரை கூறியிருக்கிருர் நீரில் கை வைத்தால் குளிரும் நெருப்பில் கைவைத்தால்சுடும் குளிர்ச்சியையும் சூட்டையும அந்தந்தச் செயலுக்குரிய பலன் என்கிருேம். அவ்வாறே லாப நஷ்டங்களை வியாபாரத் தொழிலுக்குரிய பலன்கள் என்போம் பலன்களில் இச்சை இல்லாமல் கடமை என்றுணர்ந்து யோக பாவம் பூண்டு கருமத்தைச் செய்பவனுக்கு அக் கருமத்திற்கனுகுணமாகச் சுக துக்கங்கள் இவ்வாழ்வில் வரலாம். சுகத்திற்கு விருப்பமும் துக்கத்திற்கு மனக்கலக்கமும் ஏற்பட்டால் ஞானத்திற்குச் சலனம் உண்டாகும் அவ்வாறே உலக விஷயத்தில் ஏற்படும் ஆசையில் பிறக்கும் அன்பு பயம் கோபம் காரணமாகவும் ஞானத்திற்குச் சலனம் ஏற்படும். ஞானம் அல்லது புத்திககு நிலையான தன்மை ஏறபடாமல் தடை செய்பவை யாவும் இன்றிருப்பவனே நிலைத்த ஞானமுடைய முனி என்பது இதன் மூலம் சொல்லப்படுகிறது. மேற்கொண்ட கருமத்திற்குச் சம்பந்தமில்லாத பலன்களும் பலருக்கு உண்டாகின்றன. அவை சுக துக்கத்திற்கோ, விருப்பு வெறுப்பிற்கோ விஷயமாயிருக்கலாம் சமூகத் தொண்டு தேசத்தொண்டு செய்பவனுக்குக் கசை அடியும் சிறைச்சாலையும் கிடைக்கலாம். அவமானம் வரலாம். அபாரமான கியாதி ஏற்பட்டு அதனுல் முன்னே தன்னை மதியாதவர்களிடமிருந்து சன்மானங்களும் பாராட்டுக்களும் கிடைக்கலாம். அவற்றை நேரடியாக, எடுத்த காரியத்திற்குரிய பலன்களாக எப்படிச் சொலலமுடியும்? அக்காலங்களில் நிலைத்த ஞானமுடையவன் எவ்வாறிருப்பான்? என்பதைக் கண்ணன் அடுத்த சுலோகத்தில் சொல்லுகிருர்

எங்கு மருவுநசை ஏதும் அறத்
துறந்து தங்கு நலந்தீங்கு
தானணைந்தே—அங்கங்கு முந்தும்
உகப்பும் முதிர்வெறுப்பும்
அற்ருர்க்கு வந்து நிலையாம் மதி.

(இ-ள்) எங்கு மருவு நசை—எல்லா வஸ்துக்களிலும் பொருந்திய ஆசையை, ஏதும் அறத்துறந்து—கொஞ்சமும் இல்லாமல் விட்டு, தங்கு நலம் தீங்குதான் அணைந்தே—அவற்றிலுள்ள நன்மை தீமைகளை, தான் அணைந்து—தான் அடைந்து, அங்கு அங்கு—அவ்வவ்விடங்களில், முந்தும் உகப்பும்—எதிர்கொண்டு சந்தோஷித்தலும். முதிர் வெறுப்பும்—(விலக்க வேண்டும் என்று)—மிக்க வெறுப்பும், அற்ருர்க்கு இல்லாதவர்கட்கு. மதி வந்து நிலையாம்—ஞானம் சேர்ந்து நிலையாகவிருக்கும.

4
யஸ்ஸர்வத்ர அநபிஸ்நேஹ:
4 4
தத்தத்ப்ராப்ய சுபாசுபம்
4 3 3
நாபிநந்ததி நத்வேஷ்டி தஸ்ய
2
ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா.

(இ-ள்) ய:—எவன், ஸர்வத்ர—எல்லா வஸ்துக்களிலும், அநபிஸ்நேஹ:—அபிமானம் இல்லாதவனோ தத்தத்—அவ்வவற்ருல் வரும் இஷ்ட அநிஷ்டங்களை. ப்ராப்ய—அடைந்து. நாபி நந்தநி—சந்தோஷிக்கமாட்டானோ. நத்வேஷ்டி—வெறுப்புக் கொள்ள மாட்டானோ. தஸ்ய—அவனுக்கு பரஜ்ஞா—ஞானமான துப்ரதிஷ்டிதா நிலைபெற்றதாம்.

அழுக்கும் கந்தலும் நிறைந்த ஆடையைத் தாறுமாருகக் கட்டிக் கொண்டிருந்த ஞானியொருவன் மற்றொரு ஞானியிடம் சென்று 'ஞானி எப்படி இருப்பான்?' என்று கேட்டான் அதற்கு விடையாக ஞானியை அறிய நான்கு லக்ஷணங்கள் சொன்னனும்

(1) கொக்கைப் போல்: — தண்ணீர்க் கரையில் வாடி வதங்கியது போல் கொக்கு அசைவற்றிருக்கும் ஓடி விளையாடும் சிறிய மீன்களை எல்லாம் விடுத்து சந்தர்ப்பத்தைத் தவற விடாமல் பெரிய மீன் வந்த போது கொத்திப் பிடிக்கும் அது போல் ஞானி அற்ப கருமங்களையும் அற்ப பலன்களையும் விடுத்து எக்கருமத்தையும் யோகபாவத்துடனே செய்து மிகப் பெரிய பலனுகிய பந்த நிவர்த்தியாகிய மோட்சத்தையே பெறுவான் (2) கோழியைப் போல்:—பல பொருள்கள் நிறைந்த குப்பையைக் கிளறும் கோழி அசத்தை விலக்கிச் சத்தாகிய ஆகாரத்தையே பொறுக்கி உண்ணும். ஞானியும் அவ்வாறே பலவற்றைக் கூறும் வேதத்திலோ சாஸ்திரத்திலோ அஸாரமானவற்றை விலக்கி ஸாரமானவற்றைக் கிரகிப்பான் (3) உப்பைப்போல்:—நீரில் இட்ட உப்பு தன் உருவத்தை அழித்து தண்ணீர் போலாகிப் பிறருக்கு ருசியைக் கொடுக்கிறதுபோல ஞானி தன் உடலை விட்டாயினும் பிறருக்கே இன்பத்தைத் தருவான் (4) உம்மைப்போல் என்று நான்காவது லட்சணம் சொல்லி அதன் பொருளை விளக்காமல் மௌனமாக இருந்தான் அதன் பொருளை விளக்கச் சொன்னபோது கேள்வி கேட்ட ஞானியை அவ்வூரில் வந்தவர்களுக்கெல்லாம் சமாராதனை (விருந்து) செய்துகொண்டிருந்த ஒரு தனிகனைப் போய்க் கேட்டுத் தெரிந்துகொள்ளச் சொன்னன்

ஞானி வேகமாக ஓடி அப்பொழுது சமாராதனை நடத்திக்கொண்டிருந்த தனிகனிடம் தன் சந்தேகத்தைக் கேட்டான் 'பந்தியில் போய்ச் சாப்பிடு பிறகு சொல்லுகிறேன்' என்று வீட்டிற்குள்ளே ஞானியை அனுப்பினன் எல்லாப் பந்திகளிலிருந்தும் அந்தஸ்தில்லை எனத் தள்ளப்பட்டு ஞானி இடமில்லாமல் ஸமாராதனை நடக்கும் வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்தான். சாப்பாடு முடிந்ததும் பிற்பட்டு வந்தவர்களுக்காக மறுபடி இலைகள் வைத்துப் பரிமாறப்பட்டது. ஞானி மறுபடி சாப்பிட உள்ளே நுழைந்தான் முன்னைப்போலவே ஞானியை வந்திருந்தவர்கள் எல்லோரும் தங்கள் பந்தியில் சேர்க்காமல் வெளியே தள்ளிவிட்டார்கள் சமாராதனைசெய்யும் தனிகன் எல்லாவற்றையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். சாப்பிட இடம் கிடைக்காததால் ஞானியைக் கொல்லைப்புறத்திலிருந்த மாட்டுத் தொழுவத்தில் குப்பை கூளத்திற்கு நடுவே உட்கார வைத்து ஆகாரத்தைப் பரிமாறச் சொன்ஞன் ஞானி வருத்தமோ கோபமோ கொள்ளாமல் வயிறு நிரம்பச் சாப்பிட்டான் அவன் செயலாலும் முகபாவத்தாலும் அவமானமாக உணர்ந்ததாகவே தெரியவில்லை சாப்பாடு முடிந்ததும் தனிகனிடம்போய் ஞானியின் லட்சணம் கேட்டான் தனிகன் 'மானம் அவமானம்' என்று பிரித்துப்பாராட்டாமல் எல்லாவற்றையும் ஸமமாகப் பாவிக்கும் உம்மைப்போல்' ஞானி இருப்பான் என்றனும்

தென்னப்ரிக்காவில் மஹாத்மாவை கோச் வண்டியிலிருந்தும் ரயில்வண்டியிலிருந்தும் அகாரணமாய் வெளியில் தள்ளி அவர் சாமான்களைத் தூர எறிந்தார்கள் அக்காலங்களில் தன்னை அவமானம் செய்ததாகக் கருதி வருத்தமோ கோபமோ வெறுப்போ காட்டியிருந்தால் நிலையான ஞானம் ஏற்பட்டிருக்குமா? எவ்வளவு சிந்தித்துப் பார்த்தாலும இவ்வாழ்வில் ஒருவன் மேற்கொண்டு செய்கிற கருமத்திற்கு உரிய பலன் என்று கருதமுடியாதபடி மான, அவமானங்கள் நன்மை தீமைகள் உண்டாகலாம் அத்தருணத்தில் விருப்பு வெறுப்புக்கொள்ளாமல் மனதைச் சம நிலையில் வைத்திருப்பவனுக்கே ஞானம் நிலையாயிருக்கும் என்பது இதன் மூலம் கூறப்படுகிறது.

மனதின் சமநிலையைக் குலைக்கும் உலக விஷயங்களைத் தாமாகவே வந்து இந்திரியங்களைத் தாக்கி அவற்றின் மூலம் மனதில்சென்று கோபம் காமம் விருப்பு, வெறுப்பு முதலியவற்றை உண்டாக்கினல் என்ன செய்வது? விஷய சம்பந்தமில்லாமலே வளர்க்கப்பட்ட ருச்யச்ருங்கரின் காதைத தங்கள் கானத்தாலும் கண்களைத் தமது ரூபத்தாலும் தாஸிகள் கவர்ந்து சமநிலையைக் குலைத்துவிடவில்லையா? இந்திரியங்களைக் கவரும் விஷயங்களின் நடுவில் இந்திரியங்களைப் பெற்ற ஞானி சமநிலை கெடாது எப்படி இருக்கமுடியும்? என்று ஆலோசிக்கும் அர்ஜுனனுக்குக் கண்ணன் மேலும் சமாதானம் கூறுகிருர்

அங்கங்கள் ஆமை
அகத்தடக்கு மாறுபோல்
இங்கைம் பொறிகள்
இயல்பனைத்தும்—பொங்கைம்
புலனின்று அகத்தடக்கும்
போதில் தனக்கு
வலன்நின்ற ஏற்குமே வந்து.

(இ-ள்) ஆமை—ஆமையானது, அங்கங்கள்—தன் அவயவங்களை. அகத்து அடக்கும் ஆறுபோல்—தன்னுள்ளே இழுத்துக்கொள்ளும் செயல்போல, இங்கு ஐம்பொறிகள். இயல்பனைத்தும்— (பூதசரீரத்தோடு வாழும்) இவ்வுலகில் பஞ்சேந்திரியங்களின் தன்மைகளை எல்லாம், பொங்கு ஐம்புலன் நின்று அகத்து அடக்கும் போதில் கிளறும் சப்தாதி விஷயங்களினின்றும் தன்னுள்ளே இழுக்கும்பொழுது, தனக்கு—அவனுக்கு. நின்ற வலன்—ஸ்திரமான ஞானவலிமை, வந்து ஏற்கும்—வந்து கிட்டும்

3
யதா ஸம்ஹரதே சாயம்
3
கூர்மோங்கா நீவ ஸர்வச:
3 3 2 4
இந்த்ரியாணி இந்த்ரியார் தேப்ய:
2
தஸ்யப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா.

(இ-ள்) யதா அயம்-எப்பொழுது இவன் இந்த்ரியாணி—இந்திரியங்களை கூர்ம—ஆமையானது. அங்கா நீவ—அவயவங்களை (இழுத்துக் கொள்வது) போல் இந்த்ரியார்த் தேப்ய;—(சப்தாதி) விஷயங்களினின்றும், ஸம்ஹரதே—இழுக்கிருனோ. ததா—அப்பொழுது. தஸ்ய—அவனுடைய, ப்ரஜ்ஞா—ஞானம். ப்ரதிஷ்டிதா—நிலைபெற்றது

இந்திரியங்களைக் கிளறும் விஷயங்களின் நடுவில் அவற்ருல் தாக்குண்டு சமநிலை கெடாமல் வாழ்வது துர்லபம்தான் ஆனல் யோகி, ஆமை அவயவங்களை இழுத்துக்கொள்வது போல் இந்திரியங்களை விஷயங்களில் போகும்படி வெளியே விடாமல் தன்னுள்ளே இழுத்துக்கொள்வான் அப்பொழுது நிலையான ஞானம் சலனமற்றே இருக்கும்

ஞானிக்கு ஆமையை உதாரணமாகக் காட்டியதற்கு ஸ்ரீதரர் தமது உரையில் ஒரு காரணம் சொல்லுகிருர் அது -ஆமை தனக்கு ஆபத்தை உண்டுபண்ணும் விரோதி நெருங்குவது தெரிந்ததும் தன் அவயவங்களை வருந்தமின்றிச் சுலபமாய் உள்ளே இழுத்துக்கொள்ளும். அவ்வாறே ஞானியும் அவசியம் நேரும்போது உடனே இந்திரியங்களை சுலபமாய்த் தன்னுள்ளே இழுத்துச் சுவாதீனப்படுத்துவான் ஆகவே இந்திரியங்களைச் சுவாதீனப்படுவத்து ஞானிக்குச் சுலபமாகவும் விரைவாகவும் நடக்கும் என்பதைக் காட்டவே அங்ஙனம் தெரிவிக்கப்பட்டது.

மூர்த்தி:—காசியில் எம். எஸ. சி படிக்கும் மாணவன்,

ஜானகி:—அவன் தாய்.

சுப்பய்யர்
காவேரி } —ஜானகி குடும்பத்து நண்பர்கள்.

ருக்குமணி:—மூர்த்தியின் நண்பன் மகாலிங்கத்தின் தங்கை.

[வீட்டின் முன் அறை வலது கதவு வாசற் திண்ணைக்கு. இடது கதவு வீட்டுக் கூடத்திற்கு எதிரில் ஒரு கதவு திரையுடன் கூடியது மாலை சுமார் 4-மணி]

(எதிரறையிலிருந்து ஒருபெட்டியைக் கொணர்ந்து வலது சுவரோரம் கதவருகு வைக்கிறான் மூர்த்தி ஒரு பெரிய ஓசையுடன் வைக்கிறான் உள்ளே போய் மீண்டும் வருகிறான் ஒரு 'ஹோல்டால்' சகிதம் அதையும் பெட்டிமேல் போடுகிறான்)

(இடதினின்று அவன் தாய் ஜானகி வருகிறாள்.)

ஜா:—ஜட்கா கொண்டு வந்தாச்சா? புறப்பட வேண்டியதுதானா இப்பவே! உம். கித்தான் பை உள்ளே தானே இருக்கு?

மூர்:—ஏன்? அதையும் இங்கே கொண்டு வரட்டுமா? (சிரிக்கிறான்)

ஜா:—வேண்டாம், வேண்டாம்! வண்டி கொண்டு வா. போதும்!

மூர்:—உம். கொண்டுவர வேண்டியதுதான்! இதோ லிங்கம் வீட்டிலிருந்து இன்னும் அந்தலோட்டா, டவராக்கள் வரக் காணோமே. அம்மா! ஸ்டேஷனுக்குப்போகிற வழியிலே அந்த வீட்டில் இறங்கி எடுத்துக்கொண்டு போகட்டுமா?

ஜானகி:—அப்படி என்னடாப்பா? அவன் மறந்து போன சாமானை நீ கொண்டுபோகணும்னு! அது போகுதுன்னு வீட்டுக்காரர்களுக்குக் கொண்டுவர அக்கறையில்லாததை நீ போய்......

மூர்:—மற்றவர்களைப் போலவாம்மா, மஹாலிங்கம்! பாவம்! தானே தினம் இரவில் டீ போட்டுக்கொண்டு எத்தனை நேரம் படிக்கிறான்? அவனுக்கு இந்த லோட்டா டவரா இல்லாமல் எவ்வளவு சிரமமாயிருக்கும்! பாவம்! பள்ளிக்கூடம் திறக்கிற அன்னிக்கே, சரியாக அங்கே காலேஜ் திறக்கிற அன்றைக்கே—ஆஜராயிருக்கணும் என்று அவசர அவசரமாகப் புறப்பட்டுப் போனான். தீபாவளியாகி இரண்டே நாள்தான் ஆகியிருந்தது வீட்டில் பரபரப்பு மறந்துவிட்டான்!

ஜானகி:—உனக்குத்தான் பளு பெரிசாகிறது வழியில் பிடித்துக்கொள்ளப்போகிறான் டிக்கட்டுக்காரன்!

மூர்:—அதான் மற்றவர்கள் கொடுத்ததையெல்லாம் மறுத்துவிட்டுப் போகிறேனே! இந்த மூன்று கிண்ணிகள் என்ன கனம்?

ஜானகி:—அது வாஸ்தவம்தான்! கனமிருக்காது! கனமில்லாதது ஒன்றுதான் குழந்தைகளண்டை கொடுத்தனுப்புவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களையும் காணோம் அதற்காக நீ போய்க் கேட்டு எடுத்துண்டு போகணுமா என்ன?—நல்ல பொறுப்பு!......

மூர்:—ஏன் வரக்காணோமே?—நான் போனபோது கிண்ணிகளை அப்போதான் பரண்மேலிருந்து எடுத்தார்களாம் பளபளன்னு தேய்ச்சுத்தரணும்.—எடுத்துண்டு போகிறவனுக்கும் மதிப்பாய் இருக்கணும்னு தான் அப்போதே தரவில்லை! தேய்த்துத் தருகிற வரைக்கும் என்னைக் காக்கவைக்கவும் மனசில்லை. அப்புறம் அனுப்புகிறதாகச் சொன்னார்கள்

ஜா:—அவர்களே கொண்டுவந்தால் வரட்டும்!......நீ ஒன்றும் அங்கே போகவேண்டாம் மெனக்கெட! பீங்கான் படிப்பு என்னமோ படிக்கிறானே கிட்டு, அவனுக்குக் கொண்டுபோகணும்னு பத்தான் செருப்பு தந்தாரே அவன் அண்ணா எங்கே அது?

மூர்:—கூடத்துப் பைக்குள்ளேதான்! (சிரிக்கிறான்)

ஜா:—பழைய செருப்போ, என்ன கஷ்டகாலமோ? யார் கண்டா!—(செருப்போசை கேட்கிறது வாசலில்) அப்பாவா?

மூர்:—சென்டிரல் ஸ்டேஷனுக்கு, நேரே ஆபீஸிலிருந்து வந்துவிடுவதாக அல்லவா சொன்னார் அப்பா!

ஜா:—ஒருவேளை-உனக்காக வேலையைச் சீக்கிரம் முடிச்சுண்டு வராரோ என்னமோ?

மூர்:—அப்படி முடியுமா என்ன?

ஒரு குரல்:—எப்படியாவது முடிக்கணும் இந்த ஆசையை! மாட்டேங்கக்கூடாதுடா அப்பா!

மூர்:—யார், சுப்பைய்யரா? வாங்கோ! உங்கபையன் ஏதாவது கேட்டிருக்கிறனா என் மூலம் அனுப்பும்படி?

[சுப்பையர் உள்ளே நுழைகிறார்]

சுப்:—அவன ஒன்றும் கேட்கவில்லை. நான்தான் இந்தச் சிறு பொட்டலத்தை......

ஜா:—தபாலில் அனுப்பக்கூடாததோ ஏதாவது?

சுப்:—உம் ......அனுப்பலாம் அதாவது அனுப்பக்கூடாது என்று ஒன்றுமில்லை! ஆனால் அனுப்பினால் உடைந்துபோய் விட்டால்.

மூர்:—என் பெட்டிக்குள் உடைந்துவிட்டால்?

ஜா:—அவனை தண்டம் கேட்க மாட்டீர்களே! (சிரிக்கிறாள்)

சுப்:—அப்படியெல்லாம் கேட்கமாட்டேன்! உடையவும் உடையாது பெட்டியில்!

மூர்:—சரி, கொடுங்கோ;......சிறிதாகத்தானே இருக்கிறது! (கைநீட்டுகிறான்)

சுப்:—ரொம்ப சந்தோஷம்! சங்கரன் மைனிங் காலேஜ் ஹாஸ்டல் விலாசமும் மேலேயே எழுதியிருக்கிறேன்.

ஜா:—அவனுக்கே எழுதி உங்கள் பையனையே இவன் ரூமுக்கு வந்து வாங்கிக்கொள்ளச் சொல்லிவிடலாமே! கொள்ளைப்பேர் சாமான்கள் கொடுத்திருக்கிறார்கள், எல்லோருக்கும் இவன் போய் பட்டுவாடா செய்து சாத்தியமாகாதுன்னு மற்றவர்கள் இவன் ரூமுக்கு வந்து எடுத்துப் போகும்படிதான் ஏற்பாடு ஆகியிருக்கு.

மூர்:—வேண்டாம் அம்மா! சங்கரன் இருக்கிற இடம் கிட்டத்தான். போய்த்தந்துடறேன்

ஜா:—பேஷாச்செய்யலாம். ஆனால் ஒருத்தருக்கு ஒரு மாதிரி இன்னொருத்தருக்கு இன்னொரு மாதிரி செய்தால் ஏதாவது மனஸ்தாபம் கினஸ்தாபம் வருமோன்னு ....

மூர்:—பரவாயில்லேம்மா இது சின்ன விஷயம் ஏன், மாமா என்ன இருக்கு இதுலே! (பொட்டலத்தை அழுத்திப்பார்க்கிறான்)

சுப்:-ரொம்ப அழுத்தாதேப்பா...உடைந்துவிட்டால்...

மூர்:—அவ்வளவு லேசாகவா உடையக்கூடியது! என்ன இது! சொல்லுங்கோளேன்! (சிரிக்கிறான்) நானாகப் பிரித்துப் பார்ப்பது அயோக்கியத்தனம்!

சுப்:—பாரேன் குற்றமில்லை. (சிரிக்கிறார்)

மூர்:—வேண்டாம். வேண்டாம்!...சும்மாக் கேட்டேன்.

(பெட்டியைத் திறந்துவைக்கப் போகிறான்)

ஜா:—இது எதுக்குடாப்பா! கூடத்து பையிலேவை மற்றதுகளோடே! கொண்டா!

(பொட்டலத்தை வாங்கிக்கொண்டு, காகிதச் சுற்றைப் பிரிக்கிறாள்)

இதென்ன! பையனுக்கு டானிக்கா?

மூர்:—மசிபோலிருக்கே நிறம்!

சுப்:—மசிதான்!......வீட்டிலிருக்கும் எட்டு பேனாக்களுக்கும் நான் ஒரே அடியாக நாற்பது அவுன்சு மசி வாங்கினேன்-அவுன்சு இரண்டணா வீதமே ஆகிறது. சங்கரன் காசியில், கொஞ்சங் கொஞ்சமாக வாங்கினால் நஷ்டம்தானே என்று.........

மூர்:—நீங்கள் இதைக் கொடுத்தனுப்புகிறீர்களாக்கும்! எத்தனை அவுன்சு?

சுப்:—எட்டு அவுன்சு!

மூர்:—என் பெட்டிக்குள் இது கசிந்து என் உடுப்புகளையெல்லாம் நாசமாக்கிவிட்டால் எனக்கு நஷ்டம் எத்தனையாகும்!

சுப்:—கசியாது! நல்ல சீசா! நல்ல இங்க் வேறே! அதனால்தான் மூர்த்தி—தயவுசெய்து நீ......

மூர்:—சரி...ஆனால் பெட்டியில் வைக்காமல் இன்னொரு பையில் வைத்துக்கொண்டு போகிறேன்

சுப்:—சரி...பத்திரம்—அதிலே உடையாதே!

ஜா:—உடைந்துவிட்டால் எங்கள் சாமான்களுக்குத்தானே ஸ்னானமும் ஆபத்தும்! (சிரிக்கிறாள்) பத்திரமாய்க் கொண்டுபோவான்.

மூர்:—இருந்தாலும் பைக்குள் வைத்தால் அபாயம் தான்! (சிரிக்கிறான்)

ஜா:—மறுக்காதேயப்பா மூர்த்தி! இந்த இங்கியை மந்திரித்துக் கொடுத்திருக்கிறாராக்கும் சங்கரன் பரீக்ஷையில் முதலாவதாகத் தேறணுமென்று!

சுப்:—அப்படித்தான் என்று நினைத்துக்கொள்ளுங்கள்! நான் போய் வருகிறேன்...இப்பொழுது பேச்சுக்கொடுத்து நான் உங்கள் பொழுதை வீணாக்குவது நியாயமில்லை!

மூர்:—சரி, நமஸ்காரம், மாமா! (கை கூப்புகிறான்)

சு:—சங்கரனைக் கவனித்துக்கொள்ளப்பா! பாவம், வராமல் இருந்துவிட்டான் லீவுக்கு...வந்திருந்தால் நவராத்திரி, தீபாவளி...ரெண்டுக்கும் இருந்திருப்பான்.

மூர்:—பெரிய லீவுக்குவருவான், மாமா கொஞ்ச மாசங்கள்தான்

ஜா:—நீயும் போய் அவருடன் ஜட்கா கொண்டு வா... மூர்த்தி!

மூர்:—சரி அதற்குள் நீ...

சுப்:—மூர்த்தி... இன்னும் ஏதாவது காரியமிருந்தால் கவனி, போ நான் ஒரு வண்டியை அனுப்புகிறேன் தெருக்கோடி போய்...காசிம் சாயபுகூட இருந்தான் பார்த்தேன்

(மறைகிறார் வலதில்)

மூர்:—ரொம்ப சந்தோஷம் மாமா!...காசிமின் ஜட்காவையே அனுப்புங்கள்! நல்ல குதிரை!

ஜா:—ஏண்டாப்பா காசியில் எட்டு அவுன்சு இங்கி என்ன விலை?

மூர்:—ஆறு ரூபாய் இருக்கலாம்! (சிரிக்கிறான்)

ஜா:—இந்த இங்கி ஒரு ரூபாயாம்! இங்கேயே இதை நீ வைத்துவிட்டுப் போய்விடு!...ஐந்து ரூபாய் நஷ்டஈடு நீ அங்கே சங்கரனுக்குக் கொடுத்தாலும் கொடு!...இது பைசாமான்களோடே தான் இருக்கணும்!

மூர்:—நீயும் சுப்பய்யருக்கு ஒரு ரூபா கொடுத்துவிடடு. சீசாவை வைத்துக்கொண்டுவிட்டால் மந்திர மசியினுல் அப்பாவுக்கு ஆபீஸ் வேலை மாயமாக நடக்குமே!

(சிரிக்கிறான்)

ஜா:—(குரல்) பணத்தை எடுத்துண்டாச்சா? எல்லாவற்றையும் எண்ணிப் பார்த்தாயா? பத்திரம்!

மூர்:—இதோ உள் சட்டைப் பையிலே! (தட்டிக் காட்டுகிறான்).

ஜா:— (மூர்த்தி அருகே வருகிறான்) சரி ஜகன்னுதய்யர் கொடுத்த எண்பது ரூபாயோ?

மூர்:—அடடா...பெட்டியின் அடியில் இருக்கிறதே! இப்பொழுது எடுத்தால்—அடுக்கி வைத்ததையெல்லாம் கலைக்கணுமே!

ஜா:—இவ்வளவு மறதியாயிருக்கிறவன் எப்படித் தான் `படிப்பிலே சுளை சுளையா மார்க்கு வாங்கறயோப்பா!''

மூர்:—பயமில்லேம்மா......பத்திரமாயிருக்கேன் ரயிலில் பெட்டிக்குள்ளேயே இருக்கட்டுமே அந்தப் பணம்!

ஜா:—உங்கப்பா நினைவா என்னிடம் சொல்லிவிட்டுப் போனர் ஜகன்னுதய்யர் பணத்தையும் உள் சட்டைப் பையிலேயே வைத்துக்கொள்ளச்சொல்லி...உன்னைக் கட்டாயம் ஸ்டேஷனில் கேட்பார் பார்! எம். ஏ. பரீட்சைக்குக் கட்டணுமாம் அந்தப் பணம்...பிள்ளைக்கு மணியார்டரில் அனுப்பினுல் கட்டணம் ஒரு ரூபாய் செலவு ஆகுமே என்று உன் தலையில் பொறுப்பைக் கட்டுகிருர் என்று காலையிலேயே ஒரு கூப்பாடு போட்டார்...மறுபடியும் பிளாட்பாரத்தில் அந்த வசவு ஆரம்பிப்பார் உங்கப்பா!

மூர்:—அப்பாக்கு எப்பொழுதும் இந்தப் பயம்பெட்டி காணுமற் போய்விடும் என்று! பெட்டியில் துணியும் மணியும் 500-க்கு மதிப்பு இருக்கும் அதுபோனுல் மட்டும் குறைச்சலா?

ஜா:—காணுமல் போகவேண்டாம் என்றுதான் பிரார்த்தனை ஆனுல் திண்டாடி நிற்கவேண்டி வந்தால், கையில் பணம் இருப்பது நல்லதல்லவா?

மூர்:—இந்தத் துணிப்பஞ்ச காலத்தில்... துணியைவிட பணம் கையிலிருப்பதா மேல்?...

ஜா:—அதெல்லாம் பேசாதே! பணம் எதுக்கும் அவசரத்துக்கு உதவும்! துணி உதவுமா? உம். எடு...அந்த எண்பது ரூபாயை! நாழியாச்சு!

மூர்:—சரி......பித்ருவாக்கிய பரிபாலனம் செய்கிறேன்...எடுக்கிறேன் உம். ஆனுல் அந்த எண்பதும் ஒற்றை ரூபா நோட்டுக்களாக அல்லவோ இருக்கின்றன? எப்படிப் பையில் வைத்துக்கொள்வது ஐம்பது மணி நேரம்!

ஜான:—அடப்பாவி!...முன் ஜாக்கிரதையாக மாற்றி வைத்துக்கொள்ளக்கூடாதோ நீ!

மூர்:—மறந்தே போய்விட்டேன்!

ஜா:—நல்ல மறதி போ! பணத்தைச் செக்காகவும் டிராப்டாகவும் உனக்கு அனுப்புகிருர் உன் அப்பா உன் உடம்பிலே காசு தொங்கககூடாது என்று! பிறத்தியார் பணத்தை நீ இப்படியா கவலை தின்க சுமக்கிறது.

மூர்:—பெட்டியைத் திறந்து எடுக்கிறேன் அம்மா...நீ கவலைப்பட வேண்டாம் (குனிகிருன்)

ஒரு குரல்:—நல்ல வேளைடாப்பா! பெட்டியைத் திறக்கிற சமயத்துக்கு வந்தேன்.

ஜா:—வாங்கோ காவேரி மாமி!

[காவேரி நுழைகிருள்]

காவேரி:—என்ன செய்வது ஜானகி?...“பொருவிளங்காய் உருண்டை ராமமூர்த்தி மூலம் நீ அனுப்பாவிட்டால், என் பல்லை வேறு வழியில் உடைத்துக்கொள்ளப் போகிறேன்!” என்று மிரட்டி எழுதியிருக்கிருன் பிள்ளை! கொஞ்சம் செய்துகொண்டு வந்தேன் பாலுவுக்குத் தந்துடணும்டாப்பா மூர்த்தி! எப்போ பயணம்?

மூர்:—(பெட்டியைத் திறக்கக் குனிந்தவன் திறக்காமல்) இதோ இந்த நிமிஷமேதான்! புறப்பட்டுண்டேயிருக்கேன்!

ஜா:—இதோ வண்டிக்கும் ஆள் போயாச்சு!

காவேரி:—நல்ல வேளை சமயத்துக்கு வந்தேன் பாலுவைத் தெரியுமோல்லியோ உனக்கு!... 'அகரிகாச்ச' காலேஜாமே...அதிலிருக்கான் இந்தா...சின்னதுதான் பொட்டணம்.

மூர்:—சின்னதுதான்! ஆனல் பெட்டியில் இடம் இல்லையே!...

ஜா:—கூடத்துலே ஒரு கித்தான்பை இருக்கே அதுலே வைத்தால் போச்சு!

காவேரி:—பையிலே வச்சால் ஜாக்கிரதைக் குறை வாச்சே வழியில் யாராவது...

மூர்:—யார் பார்க்கப்போகிருன்...நான்தான் பார்க்கணும்... (சிரிக்கிருன்.)

ஜா:—பார்த்தால் பார்!......தின்றுவிடாதே! பாவம், பாட்டிக்கு...

காவேரி:—சேச்சே!...வேண்டியது எடுத்துக்கொள்ளட்டும்...எடுத்துக்கோப்பா ராமமூர்த்தி!...நானே உனக்குக் கொணர்ந்து தரணும்னுதான் எண்ணம் ஆனல். "லஞ்சமா, சுமை கூலியா?" என்று நீ கேட்பாயோ என்று பயந்துதான்...ஒரே பொட்டலமாய் எடுத்து வந்தேன். நீயும் எடுத்துக்கணும் ஆமாம்!...

மூர்:—பரவாயில்லேமாமி!...பொருவிளங்காய் என்னல் தின்க முடியாது! பல் கெட்டியில்லே எனக்கு!

ஜா:—ரொம்பச் சிரித்துச் சிரித்து இன்னும் பல்லின் பலமே போச்சாம்!

கா:—ஓஹோ!...என் பிள்ளை பாலுவும் சதா கேலியும் சிரிப்பும் தான்!

ஜா:—ஆனல் உங்களை மட்டும் மிரட்டுகிருனுக்கும்! நேற்று எங்களைப்பார்க்க வந்தாள் சத்தியவதி. அவள் பிள்ளை தியாகராஜன் கூட காசியில் எஞ்சினீர்க்குப் படிக்கிருனே !...

கா:—இங்கே பட்டணத்தில் இடத்துக்கு முட்டிக்கொண்டு கிடைக்காமல் அங்கே போயிருக்காக்கும்!

ஜா:—அப்படிப் பார்க்கப் போனல், என் பிள்ளை, உங்கபிள்ளை, சுப்பய்யராத்துப்பிள்ளை...எல்லாருமே முதலில் சென்னைப்பட்டணத்துலே அலேந்து பார்த்துக் கிடைக்காமல் காசி போனவர்கள்தான்!

கா:—அதுனலே—இதுகள்ளாம் அசடுகளா? முதற் கிளாசில் தேறினவர்கள்தான்!

மூர்:—எங்களையெல்லாம்விட கெட்டிக்காரன் தியாகு !

ஜா:—அவன் என்ன எழுதியிருக்கிருனும் அம்மாவுக்குத் தெரியுமா? எனக்குப் பக்ஷணம் கிக்ஷணம் ஒன்றும் நீ அனுப்பவேண்டாம்! நீ கஷ்டப்பட்டு நெருப்படியில் நாள் முழுதும் உட்கார்ந்து செய்தனுப்பினுல் நான் இங்கே இருபது சிநேகிதர்களுடன் பகிர்ந்து தீர்த்துவிடுகிறேன் அரை மணிக்குள்! ஏன் உனக்குச் சிரமம்?" என்று எழுதினுனும்!

கா:—ஐயையோ, பாவி! மற்ற பையன்களுக்குக் கொடுத்துக் கட்டுமோ? அப்பா, ராமமூர்த்தி பாலுவிடம் சொல்லு. இதைப் பத்து நாளாவது வச்சுண்டு தின்கும்படி !

மூர்:—சொல்கிறேன் மாமி! ஆனல் அப்படி அவன் ஒளித்துத்தின்ருல் வயிற்றுவலி வந்ததும் குட்டு வெளியாகி விடாதா டாக்டர் மூலமாய்!

ஜா:—டாக்டர்கள் அப்பட்டமாய்ச் சொல்லமாட்டார்கள்!

கா:—கொஞ்சம்கொஞ்சமாய் தினம் தின்னல், வயிற்று வலி வருமா? பயமுறுத்தாதே பாவம் அவனை!

மூர்:—சரி, பாட்டி! ஆனல் காசியில் மாணவர்கள் என்ருல் எப்படித் தெரியுமா? ரொம்ப ஒற்றுமையும், கட்டும் உண்டு! அதுவும் தீனிவிஷயத்திலே ரகசியமே கிடையாது!

கா:—சத்தியவதி பின்னே என்ன கொடுத்திருக்காள் பிள்ளைகளுக்கு! கடுதாசி மட்டும்தானு?

மூர்:—கடுதாசிக்குத் தபால் செலவு பார்க்கவில்லை அவர்கள். துணி மூட்டைதான் கொடுத்திருக்கிருர்கள். அதையும் தபாலில் அனுப்பக் கூசியிருக்கமாட்டார்கள் அவர்கள். ஆனல் அனுப்பக்கூடாது என்று சட்டம் இருக்கிறது அதனல் பிள்ளை தீபாவளிக்கு வரவில்லையே என்று இரண்டு ஜோடி வேஷ்டிகள்தான் அவை அதோ ஹோல்டாலில் இருக்கு எனக்கு ஒரு கஷ்டமும் இல்லை. படுத்தால் மெத்தென்றுதான் இருக்கும்!

கா:—என்னவோப்பா என் பெற்ற மனசும் கேட்காமல், பிள்ளைக்கும் பயந்துகொண்டு, கொடுத்திருக்கிறேன் இந்தப்பொட்டலம்!

மூர்:—கொண்டுபோகிறேன் மாமி! (சிரிக்கிருன்)

ஜா:—ஒரு பயமுமில்லை அந்தக் கித்தான் பையில் வைத்தால் (மறைகிருள்)

கா:—மறக்காமல் கொண்டுபோப்பா!

மூர்:—மறப்பேனு மாமி? அடுத்ததெரு கோபாலய்யர் ஒரு இருபத்திநாலு அவன் சீசா நிறைய தேங்காயெண்ணெய் கொண்டு வந்தார் 'பங்களாத் தென்னைகளிலிருந்து காய் பறித்து உடைத்து உலர்த்தி ஆட்டிய வீட்டு எண்ணெய்!... கொண்டு போகணும்!' என்று மன்ருடினர். ஆனல் அப்பா முடியாது என்று விட்டார் கண்டிப்பாய்!

ஜா:—அப்படியென்ன அது வாசனைத் தைலமா? வெறும் வெள்ளை எண்ணெய், மாமி!

கா:—தேங்காய்கள் தராமல் போனுனே தம்பிரான் புண்ணியம்! நான் போய் வரட்டுமா?...பாக்கி உருண்டைகள் பிடிக்கணும், பாகு அப்படியே இருக்கு... போட்டபடியே!

மூர்:—சரி ஓடுங்கோ—உங்கள் பேரன் தெண்டு காலி செய்யு முன்னே!

கா:—வரட்டுமப்பா!

மூர்:—சரி மாமி!...நமஸ்காரம்.

கா:—நானே கிழவி என் காலில் சாஷ்டாங்கமாகத்தான் விழுந்து பண்ணினல் என்னடாப்பா?

ஜா:—பாட்டி கேட்கிருர் வாய்விட்டு...பண்ணப்பா, மூர்த்தி!

மூர்:—சரி, இதோ பாட்டி!...எப்படியும் சட்டை அழுக்காகத்தான் ஆகப்போகிறது ரயிலில்!

கா:—அப்படிச் சொல்லாதே! மகராஜனு இரு! மகராஜியைக் கலியாணம் பண்ணிண்டு சுகமா இரு!

மூர்:—(நமஸ்காரம் செய்து எழுகையில்) இன்னும் இரண்டு வருஷத்துக்குக் கல்யாணப் பேச்சு கிடையாது மாமி!

கா;—எல்லாம் வாயால் சொல்லுவாய் ஆனல் முடித்துவிடுவாய் சீக்கிரம்! பாட்டி சொல்றேன் பார்!

(வெளியில் மறைகிருள்).

[அடுத்த இதழில் முடியும்]

சிறு விளம்பரங்கள்

தொண்டைப் புண்,
ஜலதோஷம்
இன்புளூயன்ஸாவுக்கு

சமனமூட்டி வியாதி பரவுதலை தடுக்கும் பெப்ஸ் உமக்கு தேவையாகவிருக்கும்

நல்ல ருசியுள்ள பெப்ஸ் வில்லையில் மருந்து சத்துக்கள் இருப்பதால் உடது தொண்டைக்கும் சுவாசப்பைக்கும் சமனமூட்டும். பெப்ஸின் சமனமூட்டும், குணமாக்கும் கிருமிநாச ஆவிகள் தொண்டை, மார்பு, சுவாசப்பை இவற்றுக்கு சுவாசத்துடன் கலந்து பலனளிக்கக்கூடியவை. புண், கமைச்சல் வீக்கம் இவற்றை குணமாக்கி, கிருமிகளை நாசம் செய்து அடைப்பை நீக்கும்.

ஏஜண்டுகள்:— மெஸர்ஸ். தாதா & கம்பெனி.
பி. டி. மதராஸ்.





பெப்ஸ் மருந்து சத்துக்கள் ஒவ்வொரு சுவாச உறுப்புக்கும் போவதைக் குறிக்கும் படம்.

PEPS

கிருமி நாச
தொண்டை & மார்பு வில்லைகள்

தொண்டை, மார்பு சுவாசப்பை தகராறுகளுக்கு சிறந்த பலனளிக்கவல்ல நிவாரணி

ஜாதகம்! ஆரூடம்!!

ஜோதிஷ சாஸ்திரத்தில் 30 வருஷங்களுக்குமேல் அனுபவம் வாய்ந்த ஜோதிடரால் ஆச்சரியமான ஜோதிடம்!

இன்றே எழுதுங்கள். உங்களுக்குத் தேவையான ஏதாவது உங்களுடைய எதிர்காலத்தைப் பற்றிய ஐந்து கேள்விகளை எழுதி கவரில் வைத்து அனுப்புங்கள். உங்கள் கேள்விகளுக்குச் சரியான பதில் ஜோதிஷ சாஸ்திரத்தில் 30 வருஷங்களுக்குமேல் அனுபவம் வாய்ந்த ஜோதிஷரால் தெளிவாகவும், விவரமாகவும் எழுதியனுப்பப்படும்.

பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:- 1 முதல் 5 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8 ஜாதகம் கணிக்க. ஜாதகம் ஒன்றுக்கு ரூ. 2. நவக்ரக கவசம் ரூ. 7/8

1 வருஷத்துக்கு தசாபுக்தி அந்தர வாரியாக பலன் எழுத ரூ. 5.

விவரங்களுக்கு:

Prof. T. S கிருஷ்ணசாமி ஐயர்,
ஜோதிஷர் & மானேஜர்

சத்ய நாராயண
அஸ்ட்ரலாஜிகல் ப்யூரோ,
தண்டலை, கள்ளக்குறிச்சி P. O.
தென்னாற்காடு. (தென் இந்தியா)

★

குகன்
சோப்புகள்

சுதேசி தயாரிப்பு
சலவைக்கு மிகவும்
சிறந்தது.

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

ஜீவான்ஜன்

ரசாயனக் களிம்பு
மிருகக் கொழுப்பு சேராதது

ஜலதோஷம், மார்சளி உடம்பு வலி முதலிய சகல வேதனைகளுக்கும் நிவாரணமளிக்கிறது.

சோல் ஏஜண்டுகள்:
K. K. பிள்ளை & கோ
ராயப்பேட்டை, மதராஸ் 14.

பிரபல ஸ்தாபனங்களிடமிருந்து வினியோகஸ்தர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

நாமொன்று நினைக்க...!

ய. மகாலிங்க சாஸ்திரிகள் எம்.ஏ., பி.எல்.

செல்லம் காந்திமதிகளின் கல்யாணத்தேதி நெருங்கி வந்துகொண்டிருந்தது

குடும்ப வாழ்க்கையில் கல்யாணமென்பது ஒரு முக்கியமான கட்டம். அது வம்ச விருக்ஷத்தின் வளர்ச்சிக்கு அறிகுறியான போத்து வெடிக்கும் கணுபோன்றது கணு. வளரும் மரத்தின் சாரம் சத்து எல்லாம் தங்குமிடமாவதுபோல், கல்யாண கட்டமும் குடுமபத்தின் ஐச்வரியம். சேர்க்கைபலம் இவற்றின் ஊற்றுக் கண்களைத்திறந்து கொண்ட மட்டும் இறைத்துத் தேக்கி உபயோகப்படுத்திக்கொள்கிறது. எவ்வளவு கருமியும் அதன் நிமித்தமாய்க் கைவிரித்துச் செலவு செய்ய அஞ்சுவதில்லை எவ்வளவு எளியவனும் தன் நிலைமையை மீறி அதற்காக எட்டின மட்டும் வீச்சாதக் காலைவைத்து விடுகிறான். திக்குக்கு ஒருவராய் பிரிந்து நிற்பவரானாலும் ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள் கல்யாணத்தை முன்னிட்டு ஒன்றுகூடிக் களிக்கின்றனர். குடும்பத்தின் சரித்திரத்தில் கல்யாணம் மிக்க ஆவலுடன் வரவேற்கப்படும் ஒரு சந்தோஷ நிகழ்ச்சி. லௌகிக ரீதியில் பார்த்தால் கொண்டாட்டங்களில் அதுவே முதன்மையானது. சாஸ்திர ரீதியில் பார்த்தால் ஸம்ஸ்காரங்களில் விவாகமே பிரதானமானது அது வேத மந்திரங்களும் அக்னியும் சாட்சியாக தேவ பித்ரு ருணங்களை போக்கிக்கொள்ள ஆரம்பிக்கப்படும் ஒரு மஹா விரதமாகிறது. ஸர்வ தர்மானுஷ்டானங்களுக்கும் ஸமூகத்திற்குரிய கடமைகளைச் செலுத்துவதற்கும் இன்றியமையாததான கிருஹஸ்தாச்ரமத்தை மேற்கொள்ளும் புனிதமான கட்டம் அது

வேங்கிட சுப்பையரைப் போன்ற தனவந்தர்கள் குடும்பங்களில் நேரும் இந்த மங்களகரமான நிகழ்ச்சி ஊருக்கே ஒரு உத்சவம் போன்றது ஒரு குடும்பம் மட்டுமல்ல. பந்துமித்ரர்கள் மட்டுமல்ல, அக்கம் பக்கத்தவர்களும், ஏழை எளியவர்களும் அந்த மாபெரும் கொண்டாட்டத்தின் வைபோகங்களைக் கலந்து அனுபவிக்கிறார்கள்.

மானிட வாழ்க்கையில் இன்பம் தரக் கூடியதை தத்துவ அறிஞர் “விஷயம்” என்று கூறுவார்கள் “விஷய”த்திலிருக்கும் பற்றுபிராணிகளுக்கு இயற்கையிலுள்ளது. அதை தவிர்க்க யாவராலும் இயலாது மக்களின் விஷய”பபற்றினால்தான் ஸம்ஸார சக்ரம் அனாதி காலமாய்ச் சுழன்று வருகிறது ஈச்வர ஸங்கல்பத்தினால் விநோதமான இந்த சிருஷ்டியில் இரு வகைப்படும் ஸ்திரீ புமான்கள் பரஸ்பரம் நிராகரிக்க முடியாமல் ஐக்ய பாவத்தை விரும்புவது. ஜீவ வாழ்க்கையின் அடிப்படை தத்துவமாயிருக்கிறது இதை அங்கீகரித்தே சாஸ்திர விதிகள் பிறந்திருக்கின்றன பிரவாஹம் பள்ளத்தை நோக்கி ஓடுகிறதென்றாலும் அதற்கு கரை அமைத்துச் செல்லும் வழியை திட்டப்படுத்துவதன் மூலம் தங்கள் சீரிய வாழ்க்கைக்கு அதை மக்கள் பயன்படுத்திக்கொள்வதுபோல் சாஸ்திர விதிகள் சில கோட்பாடுகளின் மூலம் காம போகத்தைப் புடம் வைத்துச் சுத்தி செய்து அதை உயரிய நோக்கங்களுக்கு ஏற்றதாக்கி உண்மையானதும் நிலையானதுமான இகபர பலன்களை மக்கள் சுலபமாய் அடையும்படி உதவவே பிரவர்த்திக்கின்றன. பார்வதி, பரமேச்வரர்களும் ஆதி தம்பதிகளாயிருந்து உலகத்திற்கு உதாரணமாக நெறியுள்ள நிஷ்களங்கமான இந்த விவாஹ வைபோகத்தை அனுஷ்டித்துக் காண்பிக்கிறார்கள். அந்த உதாரணத்தைப் பின்பற்றியே உலக மக்கள் தம்பதிகளாகிப் பரிசுத்தமான பாரம்பரியத்தை ஸ்தாபித்து வந்திருக்கிறார்கள் கல்யாண காலத்தில் ஸுமங்கலிகள் “கௌரீகல்யாணமே வைபோகமே” என்று பாடுவது வழக்கம். விவாக தினத்திற்கு முன் ஸௌபாக்கிய தேவதையான கௌரீயின் பூஜையைச்செய்வது கன்னிகையின் முக்கியமான காரியம் என்பது பழயகதை புராணங்களில் வெளியாகிறது இன்றும் விவாகமாகப்போகும் ஒவ்வொரு கன்னிகையும் கௌரீயைப்போல் ஸௌபாக்ய வதியாகத்தான் வாழவேண்டுமென்று மனதுக்குள் பிரார்த்தித்துக் கொள்கிறாள். வாழ்க்கை இன்பத்தின் அடிப்படைத்தத்துவமான தாம்பத்தியத்தைத் தோற்றுவிக்கும் இந்த விவாக மகோத்சவத்தைச் சிறப்பிக்கச் சந்தனம் புஷ்பம், வஸ்திரம் ஆபரணம் கீதர் வாத்யம், பக்ஷ்யம் போஜ்யம், அன்னபானாதிகள், அன்பர்களின் கோஷ்டி முதலிய சுக போக சாமக்ரிகள் போட்டிபோட்டுக் கொண்டு சன்னத்தமாகின்றன வேங்கிட சுப்பையர் ஒவ்வொரு வகையிலும் சிறந்ததும் பிரஸித்திபெற்றதுமானது எதுவோ அதையே கோரித் தருவித்தார். ஜவுளிக் கடைகள், வெள்ளி பித்தளைப்பாத்திரக் கடைகள். நகைக்கடைகள் இவைகளுக்குப் பணம் பிரவாகமாய் ஓடிக்கொண்டிருந்தது

ஆயிரக்கணக்கில் வந்த ஜனங்களுக்கு நாலு தினங்களிலும் அன்னமளிக்க திட்டம்போடப்பட்டுமளிகை சாமான் சேகரிப்பு இலாகா ஒன்று பிரத்யேகமாய் ஸ்தாபிக்கப்பட்டது பால் ஸமுத்திரமாய் பொங்கிவர ஏற்பாடு செய்யப்பட்டது முதல்தரமான ஸங்கீதக் கச்சேரிகளுக்கும். பிரஸித்திபெற்ற மங்கள வாத்தியக்கார கோஷ்டிகளுக்கும் அட்வான்ஸ் கொடுக்கப்பட்டது

முகூர்த்த தினம் நெருங்க நெருங்க ஐயர் அவர்களின் பங்களா குதூகலமும். சுறுசுறுப்பும் ஆரவாரமும். அலங்காரமும் விசேஷமாய்த் தோன்றப்பெற்று அளவற்ற சோபையுடன் விளங்கலாயிற்று. உபாத்தியாயரும், உதவியாளர்களும், பந்துமித்திரர்களும், பணிப்பெண்களும், வேலையாட்களும், வண்டிகளும் போவதும் வருவதுமாயிருந்ததால் பங்களா ஜே ஜே என்றிருந்தது. “கார்” நினைத்தபோதெல்லாம் பங்களாவிலிருந்து கிளம்புவதும் பங்க

ளாவுக்குத் திரும்புவதுமாகவிருந்தது. ஒவ்வொருசமயமும் சொந்தக் காரின் ஊழியம் போதாமல் டாக்ஸி கார்களும் ஓடின. சிவராமனும் கோபிநாத்தும் அக்கம்பக்கத்து வேலையில்லாத தோழர்களைச் சேர்த்துக்கொண்டு கல்யாணத்தை முன்னிட்டு ஐந்தாறு தினங்கள் முன்னதாகவே புகையிலைக் கத்தைகளுடன் சீட்டுக் கச்சேரியில் மெய்மறந்து ஈடுபட ஆரம்பித்தார்கள். டிபனுக்குக் கொண்டுவரப்பட்ட நெய் பட்சணங்களை எடுத்துக்கொள்ளக்கூட அவர்களுக்கு அவகாசம் அரிதாயிருந்தது. இரண்டு முகூர்த்தப் பத்திரிகைகளும் ராமனாதனின் கல்யாணப் பிரஸ்ஸிலேயே அச்சிடப்பட்டன. அவைகளை அட்ரஸ் எழுதி நேரிலும் தபால் மூலமாகவும் வினியோகிக்கும் ஏற்பாடுகளில் ஸீதாராமனுக்கும் ராமனாதனுக்கும் இரண்டு, மூன்று தினங்களுக்கு வேலை சரியாகவிருந்தது.

விவாகத்திற்குமுன் கடந்து செல்ல வேண்டிய பாக்கி தினங்கள் அந்த நிகழ்ச்சியில் அக்கரையுள்ள எல்லோராலும் ஒரே மாதிரியாக அளவிடப்பட்டதாகச் சொல்லமுடியாது. கல்யாணக் காரியங்களை இரவும் பகலுமாய்ச் செய்துகொண்டும் ஸம்பாரங்களைச் சேகரித்துக்கொண்டும் நினைத்து நினைத்து திட்டங்களை வகுத்துக்கொண்டும் இருந்த சங்கரி அம்மாளுக்கு நாட்கள் விரைந்தோடிப் போவதாய்த் தோன்றிற்று. கவலையும், உழைப்பும், அவளுக்கும் மற்ற வீட்டுப் பெண்டிருக்கும் நாளுக்கு நாள் தீவிர[illegible]ங்கொண்டிருந்தன. ஆனால் கல்[illegible]ப் பெண்களுக்கோ நடுவே நின்ற நாட்கள் வெறும் தூங்குமூஞ்சிகளாய்த் தென்பட்டன. அவை நகர மறந்துவிட்டனவா என்றுகூட அவர்கள் சந்தேகப்பட்டார்கள். ஒரு தரம் (காலையில்) எண்ணிப் பார்க்க நான்கு தினங்கள் குறுக்கே வழி மறைத்துக்கொண்டிருந்தன. மறுமுறை (அன்று மாலையிலேயே!) எண்ணிப் பார்க்கும்போது அந்த நாட்கள் அப்படியே அழிவன்றித் தேயவன்றி இருப்பது அவர்களுக்கு ஆச்சரியமாயிருந்தது. அச்சுமுறிந்த தேர்போலக் கிடந்த விடத்திலேயே அந்நாட்கள் கிடப்பதாக அவர்கள் எண்ணி ஏங்கினர்.

அவர்களுக்குள் செல்லம்காலத்தின் மந்தி கதியால் ஏற்பட்ட ஜாட்யத்தை ரகசியமாய் "வெந்த உள்ளத்" தின் கவிதையைப் பாராயணம் செய்வதின் மூலம் சற்று வெல்ல முயற்சித்தாள். காந்திமதிக்கு அவ்வித உபாயம் ஒன்றும் கையில் இல்லாததோடு தன்னைப் பாணிக்ரஹணம் செய்யப் போகிறவன் தோற்றத்தில் வசீகரமுடையவனாயிருப்பானோ இல்லையா என்றே அவள் அறியாதவளாதலால் அவள் மனம் பல விகல்பங்களால் சஞ்சலப்பட்டிருந்தது. பேசுகிறவர்கள்—முக்கியமாக அத்திம்பேரும் கோமதியும்—எப்போதாவது புது மாப்பிள்ளையின் நிறம், உயரம் ஆக்ருதி, முகக்களை, குணம் முதலியவற்றைப்பற்றி ஏதாவது வருணிக்கிறார்களா என்று அவள் இருந்து இருந்து கவனித்து ஏமாற்றமடைந்தாள். முத்துஸ்வாமிக்குத் தன் நாயகன் தாழ்விலாததோற்றமுடையவனாக வேண்டுமென்றும், அப்படி இல்லாத போனால் தான் இன்னது செய்துகொள்வதென்று முன் கூட்டியே சொல்லமுடியாதென்றும் அவள் தனக்குள் சபதம் செய்துகொண்டாள். மாப்பிள்ளைப்பையன் இஞ்சினீருக்குப் படிப்பதும் சம்பந்தி ஏராளமான பணத்தேக்கமுடைய கண்ணியமான கனவானாயிருப்பதும் அடிக்கடி விஸ்தரிக்கப்பட்டதே ஒழிய மணமகனின் அங்கலக்ஷணங்களைப்பற்றி பிரத்யேகமாய் யாதொரு புகழும் பிரஸ்தாபிக்கப்படாததால் அந்த விஷயம் அவனிடம் மத்திமம் என்றே காந்திமதி முடிவு செய்துகொள்ள வேண்டியதாயிற்று. ஆனால் செல்லத்திற்கு உத்தேசிக்கப்பட்ட வரனைப்பற்றி அவள் தாயார் அந்தரங்க திருப்தியுடையவளாக இல்லை. சிவராமனின் சம்சாரம் மீனா வாழ்க்கையில் மிக்கச் சிறுமைப்பட்டவள். சம்பத்துள்ள குடும்பத்தில் பிறந்து சம்பத்துள்ள குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டு சுகத்தை அறியாதவள். அவளுக்கு மாமியார் ஒரு பக்கம் அனுதாபமற்ற சண்டைக்காரியாயும், புருஷன் மற்றொரு பக்கம் பொறுப்பற்ற தரிதலையாகவும் இருந்ததால் இன்பமாய் இல்லறத்தை அனுபவிக்கவேண்டிய பிராயத்தில் துன்பத்தையும் துயரத்தையும் தான் கண்டுகொண்டாள். அவளுக்குச் சுயேச்சையாய் குடும்ப நிர்வாகம் கிடைத்த காலத்தில் சிவராமன் சுற்றித்திரிந்து ஆஸ்திபாஸ்திகளைத் தொலைத்துவிட்டு ஆடிப்போன பம்பரம்போல் வீடு வந்து சேர்ந்தான்.

அவனிடத்தில் சில ஜரிகை அங்கவஸ்திரங்களும், கிறுக்குப் பாபாஸமும், டாம்பீகமும், விறைப்பும், அட்டகாசச்சிரிப்பும்தான் மிச்சமாயிருந்தன. மீனாவுக்குச் சேர்ந்தாப்போல் நல்ல நாட்களில் கட்டிக்கொள்ள பளிச்சென்று இரண்டு பட்டுப்புடவைகள்கூடப் பெட்டியில் இருப்பிலில்லை. இந்த நிலைமையில் அவளுடைய பெண் கல்யாணம் நாத்தனார் அகமுடையானால் நிச்சயிக்கப்பட்டு நாத்தனார் பெண் கல்யாணத்துடன் ஒரே பந்தலில் பராதீனமாக நடத்த ஏற்பாடாயிருந்ததை அவள் முழு மனதுடன் அங்கீகரிக்கவில்லை. ஆனால் முரடனான தன் புருஷனுடன் தர்க்கம் செய்தோ, நயமாய் எடுத்துரைத்தோ அவன் போகிற போக்கைத் தடுத்துவிட முடியுமென்று அவள் நம்பாததால் காலத்தை அனுசரித்துப் படிந்து போனாள். இருந்தாலும் நிச்சயம் செய்யப்பட்ட வரனாகிலும் சிலாக்கியமாக அவளுக்குத் தோன்றினால் கொஞ்சம் ஆச்வாசம் ஏற்பட்டிருக்

கும். முத்துஸ்வாமி பி ஏ. படிக்க வேண்டிய வயதில் ஆறுவது பாரம் படித்துக்கொண்டிருந்ததும், சாப்பாட்டிற்கு வழியில்லாமல் மூன்றாம் மனுஷ்யன் வீட்டில் ஒண்டிக்கொண்டு தர்மச் சாப்பாடு சாப்பிட்டுக்கொண்டிருந்ததும், மிகத் தாழ்ந்த நிலையிலுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவனாயிருந்ததும், அவளுக்கு அவன் ஒரு சிலாக்யமான வரன் என்று ஒப்புக்கொள்ளத் தடங்கல்களாயிருந்தன ஆனால் மீனு தன் கோப தாபங்களை என்றுமே அடக்கிக்கொண்டு சமயோசிதமாக நடந்துகொள்ளும் பயிற்சிபெற்றவளாதலால். வெளிப்படையான சுறு சுறுப்பு உத்சாகம் ஊக்கம். பொறுப்பு இவைகளினுல் தன் மனக்குறைவைப் பிறர் கண்டுகொள்ளாமல் சமாளித்துக் கொண்டாள்.

கல்யாணத்திற்கு இரண்டு மூன்று தினங்களுக்கு முன் சம்பந்திகள் இறங்குவதற்காக உத்தேசிக்கப்பட்டிருந்த ஜாகை காலிசெய்யப்பட்டுக் கல்யாணக்காரர்கள் உபயோகத்திற்காக விடப்பட்டது அதைப் பார்வையிட்டு வருகிறவர்கள் வாஸத்திற்கு வேண்டிய சௌகரியங்களை முன்னதாகவே செய்து வைக்க சிவராமன் சங்கரி முதலியவர்கள் அங்கு சென்ருர்கள். சிறுவர்களுள்பட மற்றவர்களும் குதூகலத்தின் பேரில் அவர்களுடன் கலந்துகொண்டார்கள். பங்களவில் மீனுவும் மதுரப்பாட்டியும்தான் பாக்கி அப்படி இருவர் தனியே ஓரிடத்தில் கூடியிருக்கும்போது எவ்வளவு நாழிதான் பேசாமலிருக்க முடியும்? மதுரப்பாட்டிக்கு மீனுவின் வாயைக் கிண்டி வம்பு வளர்க்கவேண்டுமென்ற ஆவல் மனதை அரித்துக்கொண்டிருந்தது. மீனுவின் மனதில் ஓடும் திருப்திக்குறைவுள்ள சிந்தனைகளின் நிழலை மதுரப்பாட்டி அவள் முகத்தில் அவசரத்திற்குத் தருவிக்கப்பட்ட பிரகாசத்தினிடையே சூக்ஷ்ம திருஷ்டியுடன் குறிப்பெடுக்காமலில்லை.

"ஏண்டி அம்மா! ஒரு ஜாகை பார்த்திருக்கிருர்களோ? இரண்டு ஜாகைகள் பார்த்திருக்கிருர்களோ?'

"ஏன் பாட்டி கேழ்க்கிறேள்! எனக்கு என்ன தெரியும்!" என்ருள் மீனு சோபையற்ற முகத்துடன்.

"ஏன் கேழ்க்கிறேனு? இரண்டு சம்பந்திகளாச்சே! இரண்டு ஜாகைகள் உண்டோ என்பதற்குத்தான் கேழ்க்கிறேன் அவர்கள் சம்பந்தி ஜாகையை ஆஜர் பார்க்க அவர்கள் போகிறதுபோல. உன் சம்பந்தி ஜாகையை நீ போய் ஆஜர் பார்க்க வெண்டாமோ?"

'நானு! நான் எதிலே சேர்த்தி? என்னைக் கேட்டுத்தான் எல்லாம் நடக்கிறதோ?"

"ஏண்டி! நீ பெண்ணைப் பெத்தவள் இல்லையோ? உனக்கில்லாத பாத்தியம் யாருக்கு? நன்னு உன்னைக் கேழ்க்க வேண்டாமென்ருய்! உன்னைத்தான் கேழ்க்கவேண்டும்!"

"என்னைக் கேழ்க்கவேண்டியதற்கெல்லாம் கேட்டாகி விட்டது! ஜாகை விஷயத்திற்குத்தான் கேழ்க்கப் போகிருர்கள்!"

"ஆனுல் உன்னைக் கேழ்க்கமலா கல்யாணம் நிச்சயம் பண்ணினுர்கள்! உன் ஆத்துக்காரர் ஊருக்குப்போனபோது உன்னைக் கேழ்க்கத்தன் போயிருந்தாராக்கும் என்றல்லவா நான் நினைத்தேன்! எந்தப்புருஷனுவது பெண்ணைப் பெத்தவளைக் கேழ்க்காமல் பெண்ணுக்கு வரனை நிச்சயம் பண்ணுவானே! இது ஏதுடி அதிசயமாயிருக்கு! அப்போ உனக்கு இங்கே என்ன வேலை?"

'அப்பளாம் இடுவதும் அதிரஸம் தட்டுவதும்தான் வேலை! நீங்கள் இல்லாவிட்டால் இட்லிக்கு அறைக்கிற வேலையும் எனக்குத்தான் வரும்."

"போகிறது போ! நான் இருக்கிறதை நீ ஒரு பிராணியாவது ஸாதகமாய் நினைக்கிருயே, அதுவே எனக்குப் போதும். ஆனுல் உனக்கு ஒன்றுமே தெரியாது என்று சொல்லு பட்டணத்திற்கு உன்னை அழைத்துவரும் போதாவது உன் ஆத்துக்காரர் உன் பெண் கல்யாணத்திற்காக உன்னை அழைத்து வருகிறேன் என்று உனக்குச் சொன்னுரோ, அதுவும் இல்லையோ?"

"அவருக்குத்தெரிந்ததை அவர் சொன்னுர். அதற்குமேல் கேட்டால் அக்காவையும் அத்திம்பேரையும் கேழ்க்கவேண்டுமென்று சொல்லுவார் நாம் அதிகப்படியாய் பேச்சு வைத்துக்கொண்டால் அதற்குமேல் கோபம் வந்து விடும் ஆகையால் நான் நடக்கிறது நடக்கட்டும் என்ற இருந்து விடுவதுதான் வழக்கம்" "நீ செய்வது சரி, அடி! மீனு! நானும் பார்த்துக்கொண்டுதானிருக்கிறேன். உன் ஆத்துக்காரர் பரமார்த்தி புகையிலை உண்டு அவர் உண்டு உலக வர்த்தமானம் ஒன்றும் தெரியாது எல்லாம் அக்கா போடும் திட்டப்படிதான் நடக்கிறது. அவளுக்கு அவ்வளவு "பவர்" இருக்கிறது. ஆனுல மனுஷி

மட்டும் இருக்கிற இடம் தெரியாது. பேசுகிறது மூன்றும் மனுஷ்யாள் காதில் விழாது.

"சாமர்த்தியசாலிகள் எல்லாம் வீண் சத்தம் போடுவார்களோ! காரியத்தைக் கொண்டு போகிற வழி அவர்களுக்குத்தெரியும்"

"இருந்து இருந்து உன் பெண்ணுக்கு வரன் பார்த்தாளே! அதுதான் எனக்கு ஆறவேயில்லை இந்த வீட்டிற்கு மாட்டுப்பெண்ணாய் வர வேண்டியவளை..."

'அலத்தான் முதலிலே முதல் கொண்டே அக்காகாரிஆக்ஷேபித்துக் கொண்டிருந்தாளே! ராமனுதனுக்குப் பண்ணிக்கொள்கிறா இல்லையா என்று இரண்டிலொன்று அத்திம்பேரை நேராகக் கண்டிப்பாய்க் கேட்டுக்கொண்டு வந்துவிடுகிறேன் என்று என்னிடம் சொல்லிவிட்டுத்தான் இவர்கள் பட்டணம வந்தார்கள். இங்கே வந்ததும் அக்கா என்ன பொடி போட்டாளோ தெரியாது அத்திம்பேரிடத்தில் அந்தப்பிரஸ்தாபத்தையே எடுக்காமல் செய்துவிட்டாள்."

'செய்ததற்கு அவளுக்கும் கைமேல் பலன் கிடைக்காமலில்லையே?"

"அவளுக்கு என்ன குறைவு பாட்டி!"

"என்ன குறைவா! உனக்கு இல்லை என்று சொன்ன பிள்ளை தேவடியாளைச்கட்டிக்கொண்டு வீட்டை விட்டே தொலைந்தன்'

"அப்படியே போனலும் போகட்டும் என் சம்பந்தம் வேண்டாம் என்கிற எண்ணம்தானே அவளுக்கு?"

"அது சரி, அது சரி இப்போது நீ சொன்னயே! இது நூற்றில் ஒரு வார்த்தை"

"ஒருவிதத்தில் ராமனுசன் அவருக்கு மாப்பிள்ளையாகிவிட்டான் எனக்குத்தானே அவன் மாப்பிள்ளையாகவில்லை அவருக்குத் திருப்தி தான்போலிருக்கிறது"

"ஐய்யோ! வெட்கக்கேடு! அந்தப் பேசசை எடுக்காதே! எனக்கு நாக்கைப் பிடுங்கிக்கொள்ள வேண்டும். போலிருககிறது அது போகட்டும். தன் பிள்ளைக்குத்தான் பண்ணிக் கொள்ளவில்லையே! வேறு பிள்ளையை நாலு இடத்தில் அலைந்து திரிந்து பார்த்து மனதிற்கு திருப்தியாய் ஒரு தீர்மானத்தைப் பண்ணக்கூடாதோ? ஏதோ கதை சொல்லுவார்களே— தூங்கி விழிசதுக்கொண்டதும் முதலில் கண்ணில் படுகிறவனுக்குப் பெண்ணை வாழ்க்கைப்படுத்துவதாய் ஒருவன் பிரதிக்ஞை செய்ததாக— அதுபோல். உடனே எவன் கண்ணில் பட்டானே அவனை இழுத்து மனையில் உட்கார்த்திவிட்டார்களே!—"

"ஆமாம்: அவர்கள் என்னசெய்வார்கள்! உன் ஆத்துக்காரரோ புகையிலையைபபோட்டு அறைத்துக்

கொண்டு இருந்தவிடத்தை விட்டு நகருவதில்லை. காந்திமதிக்கோ முகூர்த்தம் வைத்தாகிவிட்டது. சேர்ந்தார் போல் கல்யாணத்தை நடத்த வேணுமே! அதற்கு என்ன செய்வது? கிடைத்தவரையில் போதுமென்று தீர்மானித்து விட்டார்கள்; நாளைக்கு மாற்றுகிற பண்டமா? பெரியமனுஷ்யாள் போக்கு அப்படித்தான்"

'ஆமாம் ஏழைக்குச்தகுந்தது என் அந்தஸ்துக்கு இது போதாதோ என்றுதான் இப்படி வரன் பார்த்திருக்கிருர்கள் இவர் பராதீனமாய் அவாத்துக்கல்யாணத்திலே ஒண்டிக் கொண்டு தானும் கல்யாணத்தை எப்படியாவது முடித்துவிடவேண்டுமென்று அவாளிடத்தில் சரணுகதியாக வந்துவிட்டபடியால் அவர்கள் செய்த தீர்மானப்படி அங்கீகரித்துப் போகவேண்டியதுதானே?"

"ஆனல் பிள்ளை கண்ணுக்கு நன்ருயிருக்கிருன் செல்லத்தின் அழகுக்கு ஏற்ற அழகு நாளைக்குக் கல்யாணப் பந்தலில் நிற்கும்போது உன் பெண் மாப்பிள்ளை ஜோடிதான் திருஷ்டியாய்போகிருப்போலிருக்கும் அந்தப் பணக்கார ஜோடி அடுத்தபடிதான"

"அழகுமட்டும் போதுமா" பாட்டி நாளைக்குப் படிபபை நிறுத்திவிட்டு தர்ப்பக்கட்டை எடுத்துக்கொண்டு புறபபட்டுவிட்டானேயானல் அப்போதும் அழகாய்த்தானிருக்கும்!"

"அப்படிப் போக விட்டுவிடுவார்களா? இனி நம்ம சரக்காய் போய் விட்டபடியால் ஆத்தில் கொண்டு வந்து வைத்துக்கொண்டு மேலே படிக்கவைத்து ஒரு வேலையையும் பண்ணிவைக்கவேண்டிய பொறுப்பு நம்மைச் சேர்ந்ததுதான். அவனுக்கு வேறே மனுஷ்யாளும் கிடையாது"

"சரிதான் பாட்டி! இதையெல்லாம் அவாளாகச் செய்தால்தானே உண்டு. நாம் சொல்ல முடியுமா! அப்படி அவாள் செய்யாவிட்டால் நம்மால்தான் செய்யமுடியுமா?"

"ஏன் செய்ய மாட்டார்கள்? வழியிலேபோகிற பிள்ளை ஒருவன்—தாயாதியா? உறவா?—மூன்று நாலு வருஷங்களாய் பெத்த பிள்ளைக்கு ஒருபடிமேலாகவே வீட்டிலே வளரவில்லையோ! செல்லத்தின் அகமுடையானுக்குச் செய்யாமலென்ன! பேஷாய்ச்செய்வார்கள். அதில் மட்டும் எனக்கு நம்பிக்கைதான் செல்லத்திற்கு ஒரு முகவெட்டு இருக்கிறது அவள் விஷயத்தில் எல்லோரும் எதையும் செய்யத் தயாராயிருப்பார்கள்.

"போகிறது எனக்கில்லாத முகவெட்டு அவளுக்காவது இருக்கிறதே! அவள் அபபாவைக்கொண்டிருக்கிருள் அவருக்கும் எல்லா ஆஸ்தியையும் தோற்றுவிட்டாலும் இன்றைக்கும் முகவெட்டு உண்டு."

வீடுபார்க்கப்போனவர்கள் திரும்பி வரும் பேச்சுக்குரல்கள கேட்டதும், மதுரப்பாட்டி அரைகுறையாய் விட்டிருந்த தன் வேலையைச் செய்யத் தொடங்கினுள்.

"நாம் பேசிக்கொண்டதெல்லாம் மனசிலேயே இருக்கட்டும், பாட்டி!" என்று மீனு எச்சரிக்கை செய்தாள்.

எனக்குத் தெரியாதா" என்ற அர்த்தத்தில் பாட்டி சிரித்துக் கொண்டாள்

(தொடரும்)

ஆரோக்ய வாழ்க்கை

தோள்பட்டை வலி

★

வைத்தியரத்னம்
எம். துரைசாமி ஐயங்கார்

இது ஒரு வைத்திய விஷயமான, சிறிது சிக்கலான கட்டுரையென்றாலும், பலர் இதைப் படித்துப் பயன் பெறலாம். விஷயம் வருமாறு:—

அநேகம் நோயாளிகள் தமது தோள்பட்டையில்—ஒன்றில் அல்லது இரு பாரிசத்திலும்—சொற்பமாகவோ கடுமையாகவோ வலித்துக் கொண்டிருப்பதாகக் கூறி வருந்துவதை நான் பல வருஷங்களாகக் கவனித்தும் சிகித்ஸை செய்தும் வந்திருக்கிறேன் இவ்விதமான தோள் வலித் தொந்தரவைக் கூறிக் கொண்டு வந்ததும் அந்நோயாளி ஆமவாதம் அல்லது ஸந்திவாதம் (கீல்வாயு) அல்லது மந்யாஸ்தம்பம் (கழுத்தில் ஏற்படும் வாதநோய்)அல்லது ச்ரோவாதம் என்பதாக தீர்மானித்து விடுவதுதான் பொதுவான வழக்கம் இத் தோள்வலி என்னும் தொந்தரவுக்குக் காரணம் என்னவென்றும், அவ்வலிக்கு மூலம் எவ்விடத்தில் இருக்கிறதென்றும் ஊக்கத்துடன் பரிசோதித்து அறிவது அரிது.

தோளில் அல்லது அம்ஸபலகம் என்ற தோள்பட்டை எலும்பில் எவ்விடத்திலாவது தோன்றியுள்ள நோவுக்குக் காரணம் தோள்பட்டையிலேயே அடங்கியிருக்க வேண்டுமென்கிற அவசியமில்லை. தோள்பட்டைவலி என்பது சில வியாதிகளின் குறியேயன்றி தனிரோகமல்ல. இங்கே கீழே விளக்கப்படும் வகையில் இந்நோவுக்குமூலஸ்தானம் வேறு அவயவங்களில் அல்லது இடங்களில் அமைந்திருப்பதுண்டு. அதாவது ச்ரோணிபலகம் (இடுப்பைச் சுற்றியுள்ள எலும்பு), த்ரிகாஸ்த்தி (முதுகெலும்புக்கோவையின் அடியிலுள்ள முன்னெலும்பு), இருதயம், யக்ருத் (கல்லீரல்) ஸ்திரீகளின் இடுப்பு முதலியவற்றைப் பற்றிய கோளாறுகள் காரணமாகவும் தோள்வலி ஏற்படலாம்.

தோள்பட்டை என்ற அம்ஸபலகத்தைப்பற்றிய வலியைப் பிணியாளி கூறும்போதெல்லாம், தோள் பாகத்தைப் பரிசோதிப்பதுடன் நின்றுவிடாமல், முன்கூறிய ச்ரோண்யஸ்த்தி, த்ரிகாஸ்த்தி, யக்ருத் முதலிய பாகங்களையும் முற்றிலும் பரிசோதித்து வியாதி நிர்ணயம் செய்வது சரியான முறை. அம்ஸபலகத்தின் (தோள்பட்டை எலும்பு) கீழ்த்ரிகோண மாம்ஸபேசி என்ற தசை நாருக்குக் கீழுள்ள சிலேஷ்மப் பசையடங்கிய மிருதுவான சவ்வுப்பை (சிலேஷ்மகோசம்) வீக்கமடைவதால் தோள்பட்டை வலியுண்டாகலாம். இவ்விடத்திலுள்ள சிலேஷ்மப்பசை சுஷ்கித்துப்போய், அம்ஸாஸ்த்தி என்ற எலும்பும் அதைச் சேர்ந்த முற்கூறிய மாம்ஸபேசியும் (தசைநார்) ஒன்றோடொன்று தேய்வுறுவதால் தோள்பட்டையில் அழற்சியும் நோவும் காண்பதியல்பு. இவ்வியாதி அம்ஸதாகம் எனப்படும். இந்நிலைமையில் மஹா மாஷதைலத்தை தாராளமாகத் தோளில் அல்லது தோள்களில் விட்டு வெகுநேரம் மர்த்தனம் செய்து, பாஷ்பஸ்வேதம் (ஆவி ஒத்தடம்) செய்து, உள்ளுக்கு ராஸ்நாதி க்வாதத்தை ஏற்ற அளவில் தினத்திற்கு மூன்று முறையாவது உபயோகித்து வருவதால் சில வாரங்களில் குணம் ஏற்படும். வாதாக்னிகுமாரம் என்ற இரஸௌஷதமும் இதில் உபயோகமானதே. இவ்விதமான வைத்திய முறைகளை ஏற்றகாலத்தில் பிரயோகிக்கத்தவறினால் அம்ஸபலகத்தினடியில் உள்ள சிலேஷ்மம் சுஷ்கித்துப்போய், ஸுதா என்கிற சுண்ணப் பூச்சு போன்ற வண்டல் படிந்து, 'அம்ஸசோஷம்' என்கிற கடுமையான உபத்திரவ நிலைமை ஏற்படக்கூடும்.

வம்சாஸ்த்தியின் (முள்ளந்தண்டின்) அடியில் இணைக்கப்பட்டுள்ள த்ரிகாஸ்த்தி (ஸர்வைகல் ஸ்பைன் என்று ஆங்கிலத்தில் வழங்கப்படுவது) நாலைந்து எலும்புக் கோவையடங்கியது. அந்த நாலைந்து எலும்புகள் ஒன்றோடொன்று சேரும் ஸந்திபாகங்களுக்கு இடையில் அவை ஒன்றோடொன்று உராய்ந்து தேய்வுறாமலிருப்பதற்கேற்றவாறு ஒருவகை சிலேஷ்மப் பசையும் கலை என்கிற சவ்வும் அவ்வெலும்புகளின் இடைவெளியை அடைத்துக் காக்கின்றன இடையிலுள்ள அப்பசை முதலியது வற்றிப்போய் எலும்பு வளையங்கள் ஒன்றோடொன்று நெருங்கித் தேய்வுறநேரிட்டால் இடுப்புப் பாகத்தில் நோவேற்படுவதற்குப் பதிலாக ஊர்த்வாங்கம் என்ற கழுத்துப் புறத்திலும், தோள்பட்டைகளிலும் பல்வேறு வகையான வலியும்அழற்சியும்.வேறு வேதனைகளும் ஏற்படுவதுண்டு என்று டாக்டர் டர்னர் என்பவர் 'டாக்டர் அண்ட் க்வார்டர்லி' என்னும் பத்திரிகையில் கூறுகிறார் சில பிணியாளிகளில் த்ரிகாஸ்த்தியும், ச்ரோண்யஸ்த்தியும் ஒன்றோடொன்று நெருங்கிச் சேர்ந்துவிடுவதாலும் இவ்விதமான நோவும் வேதனையும் காண்கின்றன என்றும் அவர் விளக்கியிருக்கிறார். இந்நோயாளிகளை எக்ஸ்ரே மூலம் பரிசோதித்து வியாதி நிர்த்தாரணம் செய்வது சிறந்த வழி என்றும் அவர் அபிப்பிராயம் கூறுகிறார்.

முற்கூறிய விஷய விவரணத்திலிருந்து சரீர தாது தத்துவமறிந்தவர்கள் கவனிக்கவேண்டிய உண்மை பின்வருமாறு:— த்ரிகாஸ்த்திக் கோவையில் அடங்கிய நான்காவது எலும்பு வளையத்தில் இணைந்துள்ள வாதஹநாடி என்கிற உணர்ச்சி நரம்பு அம்ஸ பலகத்தின்

(தோள் பட்டையின்) மேலுள்ள தசைநாருடன் ஸம்பந்தம் பெற்றிருப்பதால், 'த்ரிகவாதம்' என்ற இடுப்பைப்பற்றிய வாதநோய் தோள்பட்டையைத் தாக்கி அவ்விடத்தில் அடிக்கடியும் வலிப்பையும் வேதனையையும் உண்டு பண்ணுகிறது. இவ்வாதவநாடி மூலமாய் கீழ் இடுப்பிலிருந்து தோள்பட்டையில் பரவும் இவ்வலி ஒரு தோளிலிருந்து மற்றொரு தோளுக்கும் பரவக்கூடுமாகையால், இது ஒரு வாயுமாதிரி சில மாதம் ஒரு தோளையும், சில மாதம் மற்றொரு தோளையும் பாதிப்பதுண்டு. இப்பிணியாளிகள் ஒரு புயத்தையோ இரு புயங்களையுமோ உயரத் தலைக்குமேல் எளிதில் தூக்கமுடியாமல் கஷ்டப்படுவது வழக்கம். கையை முன்னுக்கும் பின்னுக்கும் அசைக்க நேரிடும்போது பலமான சுளுக்கு ஏற்பட்டிருப்பதுபோன்ற வலியினால் வருந்துவர். வேறு சிலருக்குக் கை எழுதக்கூடாமலாய்விடும்.

ஸ்திரீகளுடைய ஜநநேந்த்ரியங்களில், முக்கியமாய் பலக்கிரந்திகளில் (கருத்தரிக்கும் வித்துகளுக்கு ஆதாரமான—ஓவரி என்று ஆங்கிலத்தில் வழங்கப்படும் கொட்டைபோன்ற அவயவங்களில்) வீக்கமோ, வேறு கோளாறோ ஸம்பவித்திருந்தால் அப்பொழுதும் தோள்பட்டையில் வேதனையுண்டாகலாம். கருப்பைக்கு இருபுறங்களிலுமுள்ள 'பீஜவாஹினீ' என்கிற கருக்குழல்களில் (பலக்கிரந்திகளிலிருந்து கருவுக்கு ஆதாரமான வித்துகளைக் கருப்பைக்குக் கொண்டுவரும் மெல்லிய குழாய்கள்) ஏற்படும். அடைப்பு அல்லது வேறு வீக்கம் முதலிய கோளாறும் விலாப்பக்க நோவு விசேஷமாகத் தோள்வலி இவற்றிற்குக் காரணமாகலாம். இவ்வித தோள்வலி அகஸ்மாத்தாய் திடீரென்று சிலசமயம் மின்சாரத் தாக்குதல்போலத் தோன்றக்கூடும்.

'யக்ருத்தாலி' என்கிற கல்லீரலின் சுருக்கம் அல்லது பெருக்கத்தாலாகும் கோளாறும் தோள்வலிக்குக் காரணமாகும். முக்கியமாக வலது தோள்பட்டையில் ஏற்படும் கடுமையான வேதனையும் வலியும் யக்ருத்தில் (கல்லீரலில்) அடங்கிய பித்தாசயம் என்கிற பித்தபையில் பித்தநீர் திரண்டு இறுகிப்போய் உண்டாகிற பித்த நீர்க்குழாயின் அடைப்பின் குறியாகத் தோன்றும். இதில் வலது புயம், விசேஷமாக வலது தோள்பட்டை இவற்றில் கடுமையான வலி ஏற்பட்டிருக்கும். இந்த நோயாளிகள் பித்தாசயத்தில் இருந்த அடைப்பு தீர்ந்த பிறகுகூட சில நாட்கள் தோள்வலியால் சொற்பமாகவோ, அதிகமாகவோ வருந்துவதுண்டு.

(1) "உரச்சூலாக்நி மாந்த்யாப்யாம் வாமாம்ஸ ஸ்யாபி பீடயா, ருஜா கதாகதம் குர்யாத்துஷ்டே ஹ்ருதயமர்மணி." பிராணாதாரமான மர்மங்கள் என்னும் அவயவங்களுள் இருதயம் ஒன்று. 'அந்த இருதயமர்மம் கோளாறடைந்தால் முக்கியமாய் ஹ்ருல்லாஸம் (ஆங்கிலத்தில் ஆஞ்ஜின பெக்டோரிஸ் எனப்படுவது) என்கிற பலமான இருதயத் துடிப்புவியாதியேற்பட்டால், அப்பொழுது மார்பில் வலியும், பசியின்மையும் தோன்றுவதோடு மார்பிலிருந்து இது தோள்பட்டையை நோக்கி அடிக்கடியும் ஏறிக்கொண்டும் இறங்கிக்கொண்டுமிருக்கும்' என்பது அந்த ச்லோகத்தின் பொருள். ஆகவே ஹ்ருல்லாஸம் முதலிய இருதயாவயவக்கோளாறுகள் நேர்ந்தாலும் தோள்பட்டை (இடது பக்கம்) வலி ஒரு முக்கியக் குறி என்பது கவனிக்கத்தக்கது. (2) ஸ்த்தூலாந்த்ரம் என்கிற பெருங் குடலில் பழைய மலங்கள் திரண்டு அடைபடுவதாலும் இடது தோள்பட்டையில் விசேஷ வலியும், மந்யாஸ்தம்பம் என்ற கழுத்துப் பக்க வலி சொற்பமாகவும் தோன்றுவதுண்டு.

ஆகவே த்ரிகாஸ்த்திகளின் கோளாறாலும், கர்ப்பாசய நோயாலும், யக்ருத்தாலி விகாரத்தாலும், வேறு ஜநநேந்த்ரிய தோஷத்தாலும் இருதயத்தைப்பற்றிய கோளாறாலும், மலாசயஸம்பந்தமான தாத்காலிக வியாதியாலும் உண்டாகிற தோள்வலிகள் எல்லாவற்றிற்கும் காரணங்களும் மூலஸ்த்தானங்களும் வெவ்வேறாயிருப்பதால், பரிகார முறை ஒரே வகையாயிராதென்பதை நேயர்கள் அறியவேண்டும். முற்கூறிய வெவ்வேறு வகையான (வெவ்வேறு அவயவத்தைப்பற்றிய) கோளாறுக்கும் அவ்வவ்வவயவத்திற்கு அல்லது அந்தந்த நோய்க்கு ஏற்ற பரிகாரம் செய்தால் அந்தந்த அவயவம் நோய் தீர்ந்து இயற்கை நிலைமை அடையும்போது, அந்நோய்களின் குறியாகத் தோன்றும் தோள்பட்டைகளைப்பற்றிய வலியும் தானே தணிந்துவிடும். ஆதலால் தோள்பட்டைவலி இருப்பதாகப் பிணியாளிகள் கூறும்போது அங்கு ஏதோ வாயு நோய் ஏற்பட்டிருப்பதாகக் கருதிவிடுவதும் அதற்கு ஏதோ தோன்றியவாறு வாதஹர தைலம் எதையாவது தேய்த்துப் பிடித்துவிடுவதும், வேறு சூடான ஒத்தடம் முதலியதைக் கொடுக்க ஏற்பாடு செய்துவிடுவதும் முறை தவறான யோசனையும் காரியமுமாகும்.

ஸ்ரீ காசிமடம் திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரி இசை வகுப்பில் சமீபத்தில் நடந்த வீணைப் போட்டியில் மாணவி ஸ்ரீமதி எஸ். சம்பூர்ணம் ரூ. 50 பரிசு பெற்றார்.



'என் பணத்தையெல்லாம் மூடத்தனமாக இழந்துவிட்டேனே; பணம் இருந்தால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கலாம்' என்று தனக்குள் தானே சொல்லிக்கொண்டான் தனதாஸன் பணமில்லாததால் நாட்டை விட்டுக் காட்டுக்கே வந்துவிட்டான் அங்கே ஒரு மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு, 'எனக்குமட்டும் பணம் கிடைப்பதானால் என் ஆத்மாவையும் விற்றுவிடுவேன்!' என்று வாய்விட்டுச் சொன்னான்

அப்போது அங்கே தாடியும் சடையுமாக ஒரு சாமியார் வந்தார் வந்தவர் தனதாஸனை நோக்கி, 'அப்பா ! நீ உன் ஆத்மாவைத்தான் விற்கவேண்டுமென்பதில்லை; உன் நிழலைக்கூட விற்றுக் காசாக்கிக் கொள்ளலாம்' என்றார். இப்படிச் சொல்லிவிட்டுச் சாமியார் கலகலவென நகைத்தார்

தனதாஸன் சாமியாரின் வெள்ளித தாடியை நோக்கி ஒரு கும்பிடு போட்டுவிடடு, 'நிழலையாவது நான் பார்க்கமுடிகிறது ஆத்மாவையோ கண்டதில்லை ஆனால் பணத்தைப் பார்க்கலாம் பணம் செய்யும் அதிகாரங்களையும் பார்த்து மகிழலாம். அப்படிப்பட்ட காசைக் கரியாக்கிவிடடேன். இனி என்னிடம் விற்றுக் காசாக்க என்னதான் இருக்கிறது ? எனினும் எப்படியாவது பணம் சம்பாதிக்கவேண்டும் என்ற பேராசை இருக்கிறது என்ன செய்வேன் சுவாமி!' என்று வருந்தினான்.

சாமியார் சிரித்துக்கொண்டே, 'தம்பி! அந்த நிழலைக் கொடுத்துவிடு இதோ பொற்காசுகள் நிறைந்திருக்கும் இந்தப் பையை வாங்கிக்கொள்,' என்று ஒரு பட்டுப் பையைத் தூக்கிக் காட்டினார்.

தனதாஸனுக்கு அந்த பணப்பையை எப்படியாவது தான் அடையவேண்டும் என்ற ஆததிரம் ஏற்படடது 'காட்டிலே திரியும் இந்தப் பைத்தியக்காரனைக் காட்டிலும இந்தப் பணம் எனக்குத்தான் உரியது' என்று தீர்மானித்தான் இந்தத தீர்மானததுடன் தனதாஸன் சாமியாரை நோக்கி, 'முடியுமானால் என் நிழலை இப்படியே எடுத்துக்கொள்ளுங்கள். முன்கூட்டியே பணத்தைக் கொடுத்துவிடுங்கள்' என்றான்

உடனே சாமியார் ஏதோ ஒரு படடுத்துணியைச் சுற்றிக்கொள்வதுபோல் தனதாஸனின் நிழலைச் சுருட்டித் தம்மடியில் கட்டிவைததுக்கொணடார் பிறகு பணப்பையைத தனதாஸனிடம் கொடுததுவிட்டு. அந்தக் காட்டுக்குள்ளே மறைந்துபோய் விட்டார்.

தனதாஸன் பொற்காசுகளை மடியில் கட்டிக்கொண்டு காட்டிலிருந்து நாட்டை நோக்கி விரைந்து சென்றான் நாட்டின் எல்லையில விறகுவெட்டி ஒருவன் தனதாஸனைக் கண்டதும், 'ஏனய்யா ! உம்முடைய நிழல் எங்கே ?' என்று கதறிக் கொண்டே ஓட்டம் பிடித்தான்.

அந்த எல்லைப் பக்கததில் இருந்த ஊருக்குள் தனதாஸன் சென்றதும், 'நிழல்இல்லாத மனிசன்டா அது!' என்று கூக்குரல் போட்டார்கள் சில சிறுவர்கள். அவர்களை நோக்கித தனதாஸன், 'எனக்குப் பசியாயிருக்கிறது பிள்ளைகளே !' சாப்பாட்டு விடுதி எங்கே இருக்கிறது, காட்டுவீர்களா என்று கேடடான் 'பேயோ, பிசாசோ?' என்று கூச்சலிட்டுக்கொண்டே பிள்ளைகள் ஓடிப்போய்விடடார்கள்.

அவ்வூரில் வயது முதிர்ந்தவர்களும் தன்னைக்கண்டு பயந்து ஓடத்தொடங்கிவிடடார்கள் என்பதை அறிந்துகொண்டான் தனதாஸன். 'இது என்ன கஷ்டமாயிருககிறது! எனக்கு நிழல் இல்லாவிட்டால் இவர்களுக்கு என்ன நஷ்டம் வந்துவிட்டது!' என்று தனக்குள் தானே சொல்லிக்கொண்டான்

பிறகு தனதாஸன் மர நிழல்கள் நிறைந்திருந்த ஒரு தெருவின் பக்கமாகப் போனான். பசி

அதிகமாயிருந்தது. எதிரே ஒரு குதிரை வண்டிக்காரன் வெறும் வண்டியை ஓட்டிவருவதைக் கண்டு அதை நிறுத்தினான் தனதாஸன். 'என்னைச் சாப்பாட்டு விடுதியில் கொண்டுவிடு, நீ கேட்ட வாடகை தருகிறேன்' என்று சொல்லி வண்டியில் ஏறிக்கொண்டான்.

வண்டிக்குப் பின்னே சிறுவர் கூட்டம் ஒன்று வந்துகொண்டிருந்தது. அதோ அந்த வண்டியில் ஒரு பிசாசடா!' என்று அந்தக் கூட்டம் கத்திக்கொண்டே வந்தது. 'வண்டியை அதிவேகமாய் விடு: வேண்டிய வாடகை கொடுப்பேன்' என்று வண்டிக்காரனைத் துரிதப்படுத்தினான் தனதாஸன்.

குதிரை சவுக்கடி தாங்காமல் பறந்தது பிள்ளைகள் வெகு தூரத்திற்குப் பின்னே மூச்சுத் திணறக் கத்திக்கொண்டே வந்துகொண்டிருந்தார்கள் வண்டி சாப்பாட்டு விடுதியின் வாசலில் நின்றது அச்சமயம் சூரியனை மேகம் மறைத்திருந்ததால் தனதாஸன் சந்தோஷமாக வண்டியிலிருந்து இறங்கினான் வண்டி வாடகையைக்கொடுத்துவிட்டு விடுதிக்குள்ளே போய் வயிறாரச் சாப்பிட்டான்.

சாப்பாடு முடிந்ததும் தயங்கித் தயங்கி வெளியே வந்தான். 'ஐயோ, நிழலைக் காணோமே!' என்று வாசலில் இருந்தவர்கள் கூச்சலிட்டார்கள், உள்ளேயிருந்து சாப்பாட்டு விடுதியின் முதலாளியும் ஓடிவந்து பார்த்துத் திகிலடைந்தான். உடனே 'பேயோ பூதமோ?' என்ற கூச்சல்கள் எங்கும் கிளம்பின.

தனதாஸன் காட்டை நோக்கி ஓடினான் 'அடே அது காட்டேறி! காட்டிலிருந்து வந்து ஊராரைப் பயமுறுத்திவிட்டுக் காட்டுக்கு ஓடுகிறது பார்!' என்று ஜனங்கள் பேசிக்கொண்டது இவன் காதில் விழுந்தது.

தனதாஸன் காட்டிலே ஒளிந்திருந்து பகற்பொழுதைப் போக்கினான். இரவு வந்ததும் பசி தாகங்களும் வந்துவிட்டன வேறொரு ஊருக்குப் போய், தான் கண்ட முதலாவது வீட்டுக் கதவைத் தட்டினான். அந்த வீட்டிலிருந்த ஸ்திரீ கதவைத் திறந்து 'என்ன செய்தி?' என்று கேட்டாள். அதற்கு தனதாஸன் 'எனக்குச் சாப்பாடு போட்டால் ஒரு பொற்காசு கொடுப்பேன்' என்றான். அந்த ஏழை ஸ்திரீ இரக்கத்துடன் இவனை உள்ளே அழைத்துச் சென்றாள். அங்கே குத்துவிளக்கு பிரகாசமாய் எரிந்துகொண்டிருந்தது. நிழல் விழவில்லையென்று தெரிந்ததும் அம்மாள் அலறத் தொடங்கிவிட்டாள். அப்போது அவளுடைய கணவனான குடியானவன் ஓடிவந்து ஒருமூலையிலிருந்த தடியை எடுத்துத் தனதாஸனை அடித்துத்துரத்திவிட்டான்.

வெளியே நிலா அழகாக வீசியது 'அதோ ஒரு வேதாளம் போகிறது; அதற்கு நிழல் இல்லை! என்று சிலர் கற்களை வீசினார்கள். தனதாசன் அப்படியே ஓடிப்போய் ஒரு குன்றிலுள்ள குகையில் பதுங்கிக்கிடந்து அந்த இராப்பொழுதைக் கழித்தான்.

பொழுதுவிடிந்ததும் தனதாஸன் அருகேயிருந்த ஒரு குளத்தில் தண்ணீர் பருகினான். குளக்கரைத் தோப்பில் சில வாழைப் பழங்களையும் மாம்பழங்களையும் சாப்பிட்டு ஒருவாறு பசியை ஆற்றிக்கொண்டான்.

அப்பால் தனதாஸன், 'இனி நான் நாட்டுப் பக்கம் போனால், இன்னும் அதிகமாய்க் காயம்பட்டுச் சாகவேண்டியதுதான்! மறுபடியும் காட்டுக்குள்ளேதான் போவேன். தாடிச் சாமியாரைக் கண்டு இழந்த நிழலைப் பெற்றுக் கொள்வேன்: அல்லது என் உயிரையும் இழந்துவிடுவேன்' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்.

இப்படிச் சொன்னதுதான் தாமதம். சிறிது தூரத்திலிருந்த ஓர் ஆலமரத்தினடியில் தன் நிழலை வாங்கிக்கொண்ட சாமியார் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துவிட்டான். ஓரே ஓட்டமாக ஓடிப்போனான்.

சாமியார் கண்மூடி நிஷ்டையில் இருப்பதுபோலத் தோன்றி

ஞர். அவர் காலடியில் பொற்காசுகள் நிறைந்த பையை வைத்து, நமஸ்கரித்து அந்தக் கால்களைப் பிடித்துக்கொண்டு, 'ஐயோ சாமி! காப்பாற்ற வேணும்' என்று கதறினான் தனதாஸன்.

சாமியார் கண்விழித்து, 'இனி ஒன்றும்செய்ய முடியாதே. உன் மதியால் இந்த விதியைச் சம்பாதித்துக் கொண்டாய்' என்றார்.

தனதாஸன் சாமியாரைப்பய முறுத்தினான். 'உம்மைப் பகைக்கிறேன்' என்றான். அதற்குச் சாமியார், 'பகையால் உன்னுடையநிலைமை இன்னும்மோசமாகுமே ஒழிய முன்னேற்றம் அடையாது' என்றார். 'உம்மையும் கொன்று நானும் தற்கொலை செய்துகொள்வேன்' என்றான் தனதாஸன். 'அப்படியானால் உள்ளபடியே நீ பேயாகிவிடுவாய்' என்றார் சாமியார்.

கடைசியாகத் தனதாஸன் 'எனக்கு விமோசனமே கிடையாதா?' என்று கதறிக்கொண்டே மறுபடியும் சாமியார்காலில் விழுந்தான். 'அன்பே விமோசனம். அன்பினால் பிறருக்காக உயிரையும் கொடுப்பதுதான் பணப்பேய் பிடித்த உனக்கு நன்மையாகும்' என்றார் சாமியார்.

அதே சமயம் சிறிது தூரத்தில்ஒரு கரடி ஒரு மனிதனைத் துரத்திக்கொண்டு வந்தது 'ஓடு, ஓடு; அந்த மனிதனைக் காப்பாற்று அவனுக்காக அவசியமானால் உன் உயிரையும் கொடுக்கவேண்டும்' என்றார். ஆனால் அந்த மனிதனுடைய முகத்தைப் பார்த்ததும் தனதாஸனுக்குக் கோபம் தான் வந்தது. அவன்தான் முந்தின இரவில் இவனைத் தடியால் அடித்துத் துரத்திய குடியானவன்.

முதல் முதல் தனதாஸன் தான்மாத்திரம் ஓடித் தப்பிவிடலாமென்று எண்ணினான். பிறகு 'இந்த என் வாழ்வில் ஸாரம் என்ன இருக்கிறது? நிழல் கூட இல்லையே!' என்று எண்ணினான். சாமியாரின் பக்கத்தில் ஒரு தடி கிடந்தது. அதைத் தூக்கிக்கொண்டு தனதாஸன் கரடியை நோக்கி ஓடினான். கரடி குடியானவனை விட்டுத் தனதாஸனைப் பிடித்துத் தன் நகங்களால் காயப்படுத்தியது. தான் துரத்தியபேயல்லவா இப்போது கரடியிடமிருந்து தன்னைக் காப்பாற்றியது?—என்று எண்ணியிருந்த குடியானவன் தன் பொருட்டுத் தனதாஸன் காயமடைந்தது கண்டதும், அருகேயிருந்த ஒரு மரக்கிளையை ஒடித்துக்கொண்டு தானும் கரடியோடு போராட வந்தான்.

ஆனால் சாமியார் கரடிக்கு எதிரே சிறிது தூரத்தில் நின்றுகொண்டு, 'போய்விடு, போய்விடு' என்று புன்னகையுடன் மந்திரிப்பதுபோல் திரும்பத்திரும்ப மூன்று, நாலு தடவை சொன்னார். கரடி ஓடிப்போய்விட்டது.

சாமியாரும் குடியானவனும் தனதாஸனுக்குச் சிகிச்சை செய்தார்கள் சாமியாரின் ஆசிரமும் தபோவனமும் அருகே தான் இருந்தன. தனதாஸன் பூர்ண சுகமடைந்தான் எனினும் அவனுக்கு உயிரில் விருப்பமில்லை.

சாமியார் ஒருநாள் தனதாஸனுக்குப் பின்புறமாக வந்து புல்லாந்தரையில் ஏதோ ஒன்றை வைத்தார். பிறகு தனதாஸனைக் கூப்பிட்டார். அவன் திரும்பியதும் தன் நிழலைக் கண்டுகொண்டான். இவனுக்கு இப்போது ஒரே குதூகலம். 'அன்பே விமோசனம். குடியானவனுடைய உயிரைக் காப்பாற்ற முயன்றாய்; அதனால் நீ இழந்துகொண்டிருந்த ஆதம சம்பத்தை மீட்டுக்கொண்டாய்!' என்றார் சாமியார்.

அட்டைப்படம்

அணங்குகொல் ஆய்மயில்
கொல்லோ—கனங்குழை
மாதர்கொல் மாலும்
என்னெஞ்சு. —குறள்.

இந்த கனமான குழையை யுடையவள் இச்சோலையில் வசிக்கும் தெய்வ மகளோ, அல்லது அழகு பொருந்திய மயிலோ, அன்றி சாதாரண மானிடப் பெண்தானோ தீர்மானமாக இவளை இன்னாளென்று அறிய இயலாமல் என் மனம் மயங்குகின்றது

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்ச் : மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்
பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு
முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

"விஜய ரக்ஷணி"

(மூலகா யந்திர தாயத்து)



இந்த கவசத்தை அணிவதால் கிரஹ சாராதி தோஷம் நீங்கும் ஆரோக்யம், குடும்ப க்ஷேமம், கலியாணம், வியாபார லாபம், பகை சமாதானம் உத்யோக உயர்வு, அதிகாரி விஸ்வாஸம், வியாஜய வெற்றி, பண நிலைமையில் சௌகரியம், மற்றும் ஸகல வழியிலும் மேன்மையுண்டாகும். மாணவர்களுக்குப் பரீக்ஷை பாஸாகும். குழந்தைகளுக்கு பாலகிரஹ தோஷம் நீங்கி, ஆயுராரோக்யமுண்டாகும். ஜனன விவரம் அல்லது பெயர், சுமார் வயது, விலாஸம் குறிப்பிட்டு எழுதினால் கவசம் தயார் செய்தனுப்பப்படும்.

விஜய ரக்ஷணி கவசம் 1-க்கு ரூ. 7—8—0
விஜய ரக்ஷணி பிரத்யேக ரக்ஷை 1-க்கு ரூ 72-8-0
தபால் செலவு தனி.

ஆரூடம் - ஜாதக பலன்

பண நிலைமை, தொழில் மாறுதல், லாப நஷ்டம், காதல், கலியாணம், குடும்பம், ஆரோக்யம், படிப்பு அதிருஷ்ட நாள், எண், நிறம், மற்றும் முக்யவிஷயங்களும் எழுதியனுப்பப்படும். ஜனன கால விவரம் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில், கடிதம் எழுதும் நேரம் தேவை. ஒன்று முதல் 5 எதிர்கால கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ 2 மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் ரூ 6. குழந்தைக்கு ஜாதகம் கணித்து ஆயுள், படிப்பு, முக்ய யோகாம்சம் சுருக்கமாக எழுத ரூ. 5. நடக்கும் ஒரு தசைக்கு புக்திவாரி பலன் ரூ 10. வி. பி செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
ஹனுமதுபாளி, திருவல்லிக்கேணி. மதராஸ் 5.

"நூரேஜிஸம்" யூனானி டானிக் ஹல்வா.

25 வருஷங்களாக இந்த அற்புத டானிக்கை உபயோகித்தவர் இதன் ஆச்சரிய குணத்தை மெச்சாதவர் இல்லை. உபயோகித்த அன்றே அபார பசி ஆச்சரிய சக்தி வந்துவிட்டது புலனாகும். சகல விடமின்களும் நிறைந்த இது பாலர்கள். கர்பிணிகள் பிரசவித்த தாய்மார்கள், பல குறைவாய் உள்ளவர்கள், நரம்பு தளர்ந்தவர்கள், வியாதிக்கு பிறகு சக்தி குறைவாய் உள்ளவர்களுக்கு அபார சக்தியை கொடுக்கும். இதனால் அநேக பலஹீன வியாதிகள் பரக்கும் அபார ஜீவ சக்தியை உண்டாக்கும்—பத்தியமில்லை. பரீக்ஷியுங்கள்.

விலை 1 பவுண்டு 40-நாள். 80-வேளை. ரூ. 16-0-0
½ பவுண்டு 20 ,, 40 ,, ரூ. 9-0-0
V P செலவு தனி

Dr H. B. S. அத்திபழ ஹல்வா பேதி மருந்து இல்லாத பல சிக்கல் நிவாரணி. பழைய மலங்களை அன்றுடம் கழிக்கும். அநேக வியாதிகள் இதனால் நிவர்த்தியாகும். வாய்வு திரேகிகளுக்கு ஏற்றது. கற்பிணிகளும், பிள்ளைகளும், உபயோகிக்கலாம். தின்பதற்கு ருசி. பத்தியமில்லை. நினைத்தபோது சாப்பிடக்கூடியது.

விலை 1-பவுண்டு ரூ. 5-0-0 ½ பவுண்டு ரூ. 3-0-0
V P செலவு தனி

யூனானி வைத்தியம்:—பல கஷ்ட சாத்திய வியாதிகளை பத்தியமில்லாத லேசான இட்காமுறைகளால் தீர்த்துக் கொள்ளலாம். நேரில் இலவச ஆலோசனை கேளுங்கள்,

RAHAMATH PHARMACY (ESTD 1925)
55. Parish Venkatachala Iyer St. G T. Madras.

இந்த பெயர் . . .

ஸுராஜ்மல்ஸ்

வைர நகை வியாபாரிகள்

உங்கள்

நகைகளுக்கு

கௌரவம்

அளிப்பவை

313, நேதாஜி ரோட்,
மதராஸ்.